ரிஜிஸ்டர் நெ. 2041. தனிப்பிரதி விலை ஒரு அணா.

# குடி அரசு


| | | |
|---|---|---|
| வருட சந்தா முன் பணம் | — ரூ. | 3—0 |
| 6-மாத சந்தா ,, | — ,, | 1--12 |
| வெளி நாட்டிற்கு ,, | — ,, | 5—0 |

ஞாயிறுதோறும் வெளிவரும்.

வியாபாரிகள் விளம்பரம் அங் 1 க்கு ரூ. 1.
கோர்ட் விளம்பரம் அங்குலம் 1 க்கு ரூ. 2.
நீடித்த விளம்பரத்துக்கு தனி விகிதம்

மாலை 8. | ஈரோடு, ஆங்கிரஸ-ளு ஆடி-மீ 30 உ (14—8—1932) | மலர் 16.



## டாக்டர் சிங்காரம்

## அவர்களின் மிகவும் குணமுள்ள

# கெந்தக நெய்

சாஸ்திரமுறைப்படி தயார் செய்யப்பட்டது
சிறுபிள்ளை முதல் சாப்பிடலாம்
இம்மருந்துக்கு யாதொரு பத்தியமில்லை

இம்மருந்தால் குணமாகும் நோய்கள்.

செம்மேகம், கருமேகம், மேக ஊரல், தடிப்புடன், கூடிய மேகப்படைகள், கண்டமாலை, விப்புருதி கட்டிகள், வ.லிகுன்மம், கிரந்தி, குஷ்டம், லிங்கப்புற்று, சூலை, கணுச்சூலை, பாரிசவாய்வு, முடக்குவாய்வு, சர்மத்தில் ஸ்பரிச உணர்ச்சியில்லாதிருத்தல், கை, கால், பிடிப்பு, மதமதப்பு, திமிர்வாய்வு, புண், புரைகள், ஆராதரணங்கள், நரம்பு பிடிப்பு முதலிய பலவித கடின நோய்களை குணம் செய்யும். இரத்தத்திலுள்ள எவ்வித துர்நீரையும் போக்கி சரீரத்திற்கு நல்ல தேஜஸைக்கொடுக்கும்.

60 வேளை மருந்து விலை ரூ. 10—0—0
20 ,, ,, 4—0—0

உபயோகித்தவர்கள் சொல்வதைக் கவனியுங்கள்.

K. சீனிவாசராவ் அவர்கள் நேடிவ் டாக்டர், ஆஞ்சநேயவிலாஸ் மெடிக்கல் ஹால், அக்கரை கோட்டகம், தஞ்சாவூர்.

தாங்கள் அனுப்பிய கெந்தக நெய்யை உள்ளுக்குச்சாப்பிடவும் மகா சந்தனாதித்தைலத்தை ஸ்நானம் செய்யவும் எஸ். முருகேசன் என்பவருக்கு கொடுத்தேன் அவருக்கு ஒரு வருஷ காலமாக தேக முழுவதும் ஒரு பைசா பிரமாணம் வட்டம் வட்டமாய் செம்மேக தடிப்புகள் இருந்ததும், அதில் நீர்வடிகிறதும், துர் நாற்றம் வீசுகிறதும் பார்ப்பவர்களுக்கு அருவெறுப்பை உண்டு பண்ணுகிறதுமாய் இருந்தது. அநேக இங்கிலீஷ், தமிழ், யூனானி முதலிய பலவித மருந்துகள் சாப்பிட்டும் குணமடையாது கஷ்டப்பட்டுக்கொண்டிருந்தவர் மேல்கண்ட தங்கள் மருந்துகளை உபயோகித்த 15 தினத்திற்குள் அவருக்கிருந்த கடுமையான வியாதிகளெல்லாம் பூரணசுகமானது. அதனால் தங்கள் மருந்துகளின் பெருமையும் என் பெயரும் இவ்விடத்தில் விளங்கி வருகிறது.

மு. சத்தியதாஸ், மெடிகல் எவான்சலிஸ்ட்,
கல்லடிபட்டி, மதுரை.

தங்களின் கெந்தக நெய்யால் மானாமதுரை துஷ்டரோக ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெறமுடியாமல் திருப்பி அனுப்பி விடப்பட்ட நோயாளியின் செம்மேக வியாதியைப் போக்கி நல்ல சுகத்தைக் கொடுத்தது. தங்கள் மருந்து மிகவும் சிறந்ததென்று என் வைத்திய அனுபோகத்தில் அறிந்து தங்களுக்கு என் நன்றியறிதலான வந்தனத்தைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

பாக்கிங் தபால் செலவு பிரத்தியேகம், மலாய் நாட்டுவாசிகள் ஆர்டருடன் முன்பணம் அனுப்பவும்.
விலாசம் தெரிவித்தால் முழுவிபரமடங்கிய கேட்லாக் அனுப்பப்படும்.

டி. சி. சிங்காரம் அண்டு கோ.,
சித்த-ஆயுர்வேத வைத்தியசாலை, தெப்பக்குளம் போஸ்டு, திருச்சினாப்பள்ளி.

Read the
"SUPERSTITION OF KHADI"
A Discussion
By
S. Ramanathan
Pattabhi Sitharamyya
& N. S. Varadachari
in English.
Published by Kudi Arasu Publishing House, Erode.

Price per copy two annas. Send 0-3-0 annas postage stamps for a single copy.

*Apply to:—*
Manager "Kudi Arasu" Erode.

## காந்தியின் உண்மைத் தோற்றம்.

திரு. காந்தி பரோடா சமஸ்தானத்திற்கு விஜயம் செய்தபோது, பொதுமக்கள் அளித்த வறவேற்புக்கு பதிலளிக்குமுகத்தான் தனது சுயராஜிய திட்டத்தைப்பற்றியும், கட்குடி, கதர், மறியல் முதலியன பற்றிதான் கொண்டிருக்கும் அபிப்பிராயத்தைப்பற்றியும் செய்த உபந்யாசத்தின் ஆராய்ச்சியாகும்.

21—6—31ந் தேதி வெளியான குடி அரசு தலையங்கத்தை புத்தகமாக்கி வெளியிட்டிருக்கிறோம். இதைப்படிக்கும் அன்பர்கள் காங்கிரசின்யோக்கியதையையும், காந்தியார் கோறும் ராமராஜிய வண்டவாளமும், தொண்டர்கள் செய்யும் போலி மறியல் வேஷத்தின் வெளிப்பகட்டும் கண்டு தெளியலாம்.

100 புஸ்தகங்கள் விலை ரூ. 1—0—0
தபால் சிலவு 0—6—0

கிடைக்குமிடம்:—
மானேஜர்,
குடி அரசு, ஈரோடு.

## சென்னை லோக்கல் போர்டு ஆக்டு.

(1330ம்ஞு வரையிலுமுள்ள சீர்திருத்தங்களுடன்கூடியது)
M. S. பார்த்தசாரதி அய்யங்கார், B. A., B. L.,
அவர்களால் மொழிபெயர்க்கப்பட்டது.
விலை ரூபா 2—0—0. வி பி செலவு ரூ. 0—5—0.
மானேஜர்,
குடி அரசு புத்தகசாலை, ஈரோடு.

**இருக்க இடமின்றி ஏழைகள் தவிக்க மாடமாளிகைகளும், கூடகோபுரங்களும் சாமிகளுக்கு ஏன்?**

உங்கள்
## கண்ணையும் காதையும் கவனித்துக் கொள்ளுங்கள்

### பூவிழல் !!

கண்ணில் பூவிழுந்து பார்வையைத் தடுப்பதை ஆபரேஷன் இல்லாமல் சுகப்படுத்தப்படும். நிலைமை எவ்வாறு இருப்பினும் நான்கு வாரங்களில் நிச்சயமாக குணப்படுத்தி விடுவோம்.

### செவிடு !!

பாதி அல்லது முழுவதும் செவிடாயிருந்தால் கூடப் பரவாயில்லை. காதிரைச்சல், தலைவலி இருந்தாலும் அக்கரையில்லை. சுத்தமாக நிவர்த்திக்கப்படும். குணத்திற்கு உத்திரவாதம்.

விபரங்களுக்கு இங்கிலீஷில் விண்ணப்பித்துக் கொள்ளவும்.

"Sri" Works
Beadon St. Calcutta.

### "செவிடு"

மற்றெல்லாவித காது நோய்களையும் குணப்படுத்துவது "காமத்ஏண்ணேயே" ஒரு பாட்டில் வாங்கி உபயோகித்துப் பாருங்கள். பலனுக்கு உத்திரவாதம்.

1 பாட்டல் எண்ணெய் விலை ரூபாய் 1—4—0.

1 பாட்டில் டிராப்பர் உள்பட விலை ரூபாய் 1—8—0.

3 பாட்டல் வாங்குபவர்களுக்கு தபால் செலவு இறும். இங்கிலீஷில் விண்ணப்பிக்கவும்.

Ballabha & Sons
Pilibhit R. K. Ry., U. P.

### ANANGARANGA BATIKA.

Safe and sure remedy against SEXUAL DISABILITY & IMPOTENCY. Restore youthful retaintive & erective capacity & insure PLEASURE FOR ONE HOUR. Even an OLD ONE CAN FULLY ENJOY THE HEAVENLY BLISS derived from sexual inter course. COMPLETE SATISFACTION guaranteed. Money will be refunded in case of failure Price for 60 Pills Rs 8 only. Sample Phial of 20 *Pills* Rs. 3 only. Please write in English To:
*SAILASRAM (K)*
*Chandanpur (Khulna)*
*E. B. R.*

## சத்தியாக்கிரகமா? சண்டித்தனமா?

மேற் கண்ட 6—9—31ந் தேதி "குடி அரசி"ல் வெளியான "சத்தியாக்கிரகமா சண்டித்தனமா" என்ற தலையங்கத்தை புத்தகரூபமாக வெளியிட்டிருக்கிறோம். இதை விநியோகிக்க விருப்பமுள்ள சுயமரியாதை அன்பர்கள் முன் பணமனுப்பிப் பெற்றுக்கொள்ள வேண்டுகிறோம். 100 புஸ்தகம் விலை ரூ. 0—12—0.

1 ரூ. ஸ்டாம்பு அனுப்பினால் 100 புஸ்தகம் புக் போஸ்டில் அனுப்பப்படும். மானேஜர்,
குடி அரசு, ஈரோடு.

### குஷ்டம்

வெண்குஷ்டம் பத்து.
சமீபத்தில் எற்பட்டதாயிருந்தாலும்சரி, பரம்பரையாய் இருந்தாலும்சரி. அபாய இஞ்ஜக்ஷன் கிடையாது. 4- வாரங்களில் பூரணகுணம். வியாதி விபரங்களுடன் இங்கிலீஷில்எழுதவும்.

Post Box No- 11413
Calcutta- (k)

## "குடி அரசு" கிடைக்குமிடங்கள்.

**வேலூர்.**
வி. டி. ராஜமாணிக்கம், நியூஸ் ஏஜண்ட்.

**கரூர்.**
சிங்காரவேல்பிள்ளை, ஆப்காரி கண்ட்ராக்டர்.

**திருப்பூர்.**
முருகேசம், நியூஸ் ஏஜண்ட்

**திண்டுக்கல்.**
சிக்கந்தர்கான்சாயபு.
மலைக்கோட்டைதெரு.

**காரைக்குடி.**
விஸ்வநாதம், வெற்றிலைக்கடை
கல்லுக்கட்டி.

**சேலம்.**
சிவசுப்ரமணியம், வீரராகவ
செட்டி தெரு, அரிசிபாளயம்.

**கொளும்பு.**
சிவன் கோவில் மேற்குமடம்
பருத்தித்துரை.

**புதுவை**
திருவள்ளுவர் வாசிப்புசாலை
4 ஓர்லெயன்வீதி.
நடேசமுதலியார் சொடாபாக்டரி
ராஜவீதி.

# மெஞ்ஞான முறையும், மூட நம்பிக்கையும்.

## மூட நம்பிக்கைகளின் கொடுமை.

### "கடவுளும், பிரபஞ்சமும்" என்ற வியாசத்தின் மேல் எழும் பிரச்சினை.

[தோழர் ம. சிங்காரவேலு பி. ஏ., பி. எல்.,]

(5)

முன் அத்தியாயத்தில் மூடநம்பிக்கைகளுக்கு ஆதாரம் ஆன்ம கற்பனை எனக்கண்டோம். இந்த கற்பனையால் அநேக மூடபழக்க வழக்கங்கள் தென்னாட்டில் வழங்குவதையும் கண்டோம். இன்னுஞ்சில பயங்கரமான மூடபழக்கங்களை விசாரித்தறிவோம். இக்கொடும் பழக்கங்களும் ஆன்ம கற்பனையால் நிகழ்வதைக்கண்டால் இந்த கொடிய கற்பனையின் ஆதிக்கத்தை என் சொல்வாம்! கடவுள் கற்பனையைவிட இந்த ஆன்ம கற்பனையின் கொடுமைகள் மிகக்கொடுமை விளைவிக்கின்றனவென்றே சொல்லவேண்டும். நிரேகமன்னியில் "ஆன்மாபோன்று தனிப்பொருள் ஒன்று நிரேகத்திற்குள்ளிருந்து மனிதனுடைய சகல நடத்தைகளையும் நடத்தி வருகின்றதென்றும் உத்தேசம் (Speculation) பலவித கொடூர பழக்கங்களுக்குக் காரணமாய் இருந்து வருகிறது. மூடசனங்கள் அதிகமாக வழங்கிவரும் ஒரு கற்பனை பழக்கத்தை எடுத்துக்கொள்ளுவோம். சூனியம் வைத்தல் என்ற வித்தையை (Art) சற்றுவிசாரிப்போம். இந்த வித்தையை மாரணவித்தை என்பார்கள். அதாவது ஒருவனை அழித்துவிடுதற்குரிய வித்தை என்று சொல்லலாம். பழக்கத்தில் சூனியம் வைத்து ஒருவனை "எடுத்து விடுதல்" என்றும் சொல்லுவார்கள். அகால நோய் ஒருவனுக்கு வந்தால் அந்த நோயை சூனியத்தால் ஏவவிடப்பட்டதென்பார், சிலநாளைக்கு முன்பு சூனியம் வைப்பதற்கு முயன்ற கூட்டத்தாரை கிராம அதிகாரிகள் கைப்பிடியாக பிடித்த காலையில் அந்த இடத்தில் நடந்த சம்பவத்தை சற்று விளக்குவோம். திருவான்மியூர் என்றகிராமத்தில் பலகை வாராவதிக்கு அருகில் இரண்டு பங்காளிகளுக்குள் மனவருத்தம் நேரிட்டு, ஒருபங்காளி இன்னொரு பங்காளியை சூனியம் வைத்து எடுத்துவிட சில சூன்யக்காரர்களை வரவழைத்து அடுத்த தோட்டத்தில் சில சூனியத்திற்கு வேண்டிய கிரிகைகள் நடந்தனவாம். அவையாவன சுடுகாட்டிலிருந்து கொண்டுவந்த சில எலும்புகள், முக்கியமாக பெருவிரல்கள், ஒனான் தலைகள், ஆட்டு இறைச்சி, கோழி இரத்தம், தேரை (ஓர் வித தவளைவகை) மஞ்சள், குங்குமம், தேங்காய், பழம், அழுக்கடைந்த கந்தைத்துணி, இன்னுஞ் சில வஸ்துக்கள் அங்கு கிடந்தனவாம். இவைகளைக்கொண்டு மந்திர ஜபம் செய்ய எத்தனித்தகாலை எதிரி இதனை அழித்துவிட்டதாக வதந்தி. இந்த அழுக்கான வஸ்துக்களைக்கொண்டு (Filthy things) சில மந்திரங்களை உச்சாடனம் செய்து (அதாவது) விளங்காத அர்த்தமில்லாத சொற்களைச்சொல்லி, எந்த ஆன்மையையோ எழுப்புவதாக எண்ணி நாயை உசுக்கவிடும் மாதிரியாக எழுப்பிய ஆன்மாவையோ, பிசாசையோ, குட்டிச்சாத்தானையோ, எதிரியின் பேரில் விடுவதாக உத்தேசித்துக்கொண்டு பூசையை நிறைவேற்றுகின்றார்கள். இந்த வித்தையில் நாம் கவனிக்கவேண்டியது ஒன்றுண்டு. அதுயாதெனில் ஆதிமுதல் அந்தம்வரை, எல்லாம் கற்பனைகளே. மந்திரங்களும், கற்பனை. (Dirty things) அசங்கித வஸ்துக்களைக்கொண்டு பூதமோ, பிசாசோ, கன்னிகையோ, குட்டிச்சாத்தானையோ, எழுப்புவதும் கற்பனை. அவைகள் மூலமாக எதிரியை கொல்ல நினைப்பதும் கற்பனை. கற்பனை "ஆன்மாக்களால்" நோய் உண்டாக்குவதும் கற்பனை. இந்த கற்பனைகளை ஒன்றோடொன்று கோர்க்கப்பட்டு அவைகளிலிருந்து விளையும் வினைகளைக்கண்டால் மூட கற்பனைகளின் ஆதிக்கமே ஆதிக்கம்! உலகம் கற்பனைகளாலேயே மயங்கி வருந்துகின்றது.

சூனியம் வைத்தல் என்பது புராதனமான வித்தை என்னலாம். யஜூர் (Yajur veda) வேதத்தில் இந்த கற்பனையைக்காணலாம். அசங்கித வஸ்துக்களால் பிசாசுகளை வசப்படுத்தலாமென்ற கோரிக்கை ஒருகாலத்தில் உலக முழுமையுமே பரவி இருந்தது. ஷேக்ஸ்பியர் (Shakespear) என்ற பிரபல ஆங்கில நாடகக்கவி மாக்பத் (Macbeth) என்ற நாடகக்கதையில் சூனியக்காரிகள் மந்திரங்களால் அசங்கிதமான வஸ்துக்களால் பேய் பிசாசுகளை எழுப்புவதை நன்றாக வர்ணித்துள்ளார். இதைப்போன்ற கற்பனையை ஜர்மன் பிரபல கவியாகிய கீதே (Goethe) என்றவர் தன்னுடைய பிரபல நூலாகிய 'பாஸ்டில்' (Fawst) வரைந்துள்ளார் நமது நாட்டில் "சூனியம்" என்ற பித்தலாட்டம் கிராம மக்களை வதைத்து வருகின்றது. சூனியத்தால் கிராம முழுமையுமே பயந்து விடுகின்றது! சூனியக்காரனென்ற பித்தலாட்டக்காரனைக்கண்டதும், பாமர மக்கள் நடுங்குகின்றார்கள்! அறிவின்மையாலும் விசாரணை இன்மையாலும், வெறுங்கற்பிதச்சொற்கள் இவ்வளவு பயத்தை உண்டாக்குகின்றன. இதன்காரணமென்னவெனில் அறி [Ignorance) யாமையே நிரேகத்தில்நிகழும் செய்கைகள் யாவும் (Bodily actions) நடத்தைகள் யாவும் (Behavionr) நிகழ்கின்ற காரணத்தைத்தெரிந்து கொள்ளாமல் "புருஷன்" என்ற தனிப்பொருள் ஆன்மாவடிவமாக, அல்லது பேய் பிசாசுவடிவமாக அல்லது குட்டிச்சாத்தான் வடிவமாக உலாவுகின்றதாக எண்ணுகின்றார்கள். இது முதல் கற்பனை. இக்கற்பிதப் புருஷர்களை சிற்சில கிரியைகளால் அவைகளுக்குப்பிரியமான வஸ்த்துக்களைக்கொண்டு வசியப்படுத்தலாமென்ற எண்ணம் இரண்டு. இத்தியாதி பேய் பிசாசுகளைக்கொண்டு, அதாவது அவைகளை வசியப்படுத்திக்கொண்டு, தங்கள் எதிரிகளின் பேரில் எந்த குட்டிச்சாத்தான்களை வெளியிடலாமென்ற எண்ணம் மூன்று. இம்மூன்று எண்ணங்களால் சாமான்யமனிதர் நோய்கள் உண்டாகும் காரணகாரியங்களைத் தெரிந்துகொள்ளாமல் மந்திர தந்திரங்களால் அவைகள் உண்டாகலாமென்றும், அந்நோய்கள் மூலமாக பகைவரை வருத்தலாமென்றும் நம்புகின்றார்கள். இந்த மூடநம்பிக்கைக்கு ஆதாரமென்னவெனில் ஆன்மா ஒன்று உண்டென்ற மூடநம்பிக்கையேயாகும். இந்த மூடநம்பிக்கையைப்போன்ற இன்னொரு மூடநம்பிக்கை நமது மக்களிடம் காணலாம். அதாவது "கழிப்பு எடுத்தல்" என்னும் ஓர் பழக்கமுறை. இது பலவிதமாக பல வஸ்துக்களைக்கொண்டு அனுஷ்டித்து வருகின்றது! கழிப்பின் முக்கிய கருத்து என்னவெனில் சில வஸ்த்துக்களைக்கொண்டு சில்லரை தெய்வங்களாகிய முனீஸ்வரன், காளிஅம்மன் அருளைப்பெறலாமென்பது. இதற்கு செய்யவேண்டிய முக்கிய காரியமென்னவெனில், பலியிடுதல், அதாவது உயிரை, எந்த உயிராயினும், அந்த தேவதைகளுக்கு சமர்ப்பித்து அத்தேவதைகளால் உண்டானதாக எண்ணப்படும் சில நோய்கள் தீர்த்துக்கொள்ளலாம் என்ற நம்பிக்கையே இந்த நம்பிக்கையைச்சாமான்யரிடம் அதிகமாகக் காணலாம்.

சில்லரை நோய்களாகிய வயிற்றுபோக்கு, சீதபேதி, குளிர் ஜுரம், இவைகளைப்போக்க தேங்காய்களை சமர்ப்பிக்கின்றார்கள். சில இடங்களில் தேங்காய் குடுமியில் மூன்று குச்சுகளை நுழைத்து அந்த குச்சிகளுக்கு கந்தைகளை சுற்றி பந்த வைத்து நோயாளிமுன் சுத்துகின்றார்கள். இத்துடன் மிளகாயை நெருப்பிலிட்டு அதையும் நோயாளி முகத்திற்கெதிரில் சுற்றும் பழக்கம் மீன்பிடிக்கும் வலைஞரிடம்காணலாம். மலேரியா என்ற குளிர்ஜுரங்களுக்கு (Malarial Patient) காலணை மஞ்சள் கந்தையில் சுற்றி கையில்கட்டுகின்றார்கள். இதை ஆமுலெட்ஸ் (Amulets) என்று அதாவது குளிசம் என்று சொல்லுவார்கள். இத்தியாதி வஸ்துக்களுக்கும், வியாதி போக்குக்கும் என்ன சம்பந்தமென்பதை அறியக்கூடவில்லை. ஆனால் இவைபோன்ற பழக்கங்கள் உலக முழுமையுமே காணலாம். காட்டுமிராண்டிகளிடம் குளிசத்தை வெகு விநோத காட்சிகளுக்கெல்லாம் உபயோகிக்கின்றனர்கள்! விரோதியை வெல்லவேண்டுமானால் அதற்கு ஓர் குளிசம், நோய் "காற்று" "கருப்பன்" படாதிருக்க வேண்டுமானால் அதற்கோர்குளிசம், ஒரு பெண்ணை வசியம் செய்ய வேண்டுமானால் அதற்கோர் குளிசம், இன்றைக்கும் சில கட்சிக்காரர்கள் ஜட்ஜிகளை வசியம் செய்ய மந்திரித்த குங்குமத்தையாகிலும், குளிசத்தையாகிலும் தரித்துக்கொண்டு ஜட்ஜ் முன் நிற்கப்பார்க்கலாம். இப்பழக்கங்களின் அந்தரங்க தாத்பரியம் என்னவெனில் மந்திரத்தால் சிறுதேவதைகளை வசியம் செய்து அந்ததேவதையை அந்த குளிசத்தில் புகச்செய்து அந்த தேவதையின் சக்தியைக்கொண்டு, வேண்டியகோரிக்கையை நிறைவேற்றிகொள்வதென்ற நினைவுபோலும்!

நான்கு சந்து சந்திக்கும் இடங்களில் சில உயிரைக்கொன்று, அங்கு அதன் இரத்தத்தை, குங்குமம், மஞ்சள், ஒனான்வால், அல்லது முயல் காதுடன், புதைக்கும் பழக்கம் அதிகமாக பட்டணங்களிலும். பார்க்கலாம், சந்திக்கும், சந்துகளுக்கும் கோரிய கோரிக்கைக்கும், என்ன சம்பந்தமென்றும் தெரியவில்லை. நாலாபக்கங்களிலிருந்து வரும் ஜனங்களில், தங்கள் விரோதியும் வருவான் என்ற எண்ணமாய் இருக்கலாம்! புதைத்த வஸ்துக்களுக்கும், நான்கு சந்து சந்திப்புக்கும், வயற்றுக்கழிச்சலுக்கும், என்ன சம்பந்தமென்றும் விளங்கவில்லை? சில சூன்யக்காரர்களை (Sorcerers) விசாரித்ததில், புதைத்த சாமான்கள் அழுகும்மாதிரி, எதிரியும் அழுகிப்

(தொடர்ச்சி 17ம் பக்கம் பார்க்க)

# அத்தைப்பாட்டி, படிப்பு, யாருக்கு வேண்டும்?

## பெண்களுக்கு வேண்டிய கல்வி எது?

(திருமதி ஆர். அன்னபூரணி)

கல்விச்சிறந்த தமிழ் நாடெனவும், கலை மகள் வாழும் தமிழ் நாடெனவும் போற்றிப் புகழப்படும் நம்நாட்டிலே ஓர் பெண்பாலைக் கல்வித் தெய்வமாகப் பாவித்து பயபக்தியுடன், பால் பாயாசத்துடன்; பூஜித்துவரும் இந்நாட்டிலே, பெண்மக்கள் கல்வி எந்த நிலையிலிருக்கிறது, என்பதை ஈண்டுச் சற்று ஆராய்ந்தறிந்து, இந்தியப்பெண்கட்கு எத்தகைய கல்விதான் வேண்டுமென்பதுபற்றி ஒரு முடிபு காண்பாம்.

இந்நாட்டிற்கு வேறெந்நாட்டிலுமில்லாத விதமாய் கல்விக்கென்று ஒரு தனித்தெய்வம், அதிலும் பெண் தெய்வம் தகைசால் சிறப்புடன் ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த அம்மனை வணங்காத, பூஜிக்காத பெண்மணி இந்தியாவில் ஆயிரத்திற்கு ஒருவர் அல்லது இருவரே இருக்கக் கூடும்! ஓர் அச்சிட்ட கடிதமோ, வெறுங் காகிதமோ அகஸ்மாத்தாய் காலில் பட்டு விட்டால் உடனே பதை பதைத்து மெய் சிலிர்த்து அதனை எடுத்துக் கண்ணில் ஒற்றிக் கொண்டு, "ஐயகோ! சரஸ்வதியை மிதித்து விட்டேன்! கலைவாணியை அவமதித்து விட்டேன்! குற்றம் க்ஷமித்து காப்பாற்றம்மணி!" என்று கன்னத்தில் போட்டுக்கொள்ளாத இந்துப்பெண்மணி எங்கேனுமுண்டா? இல்லவே இல்லை!!

தங்கள் மக்களை கல்வி பயில பள்ளிக்கனுப்புங்கால், "சரஸ்வதிபூஜை" செய்து அனுப்பினாலன்றி படிப்பு வராது, எனக்கருதி, கடன் பட்டேனும் சரஸ்வதி பூஜையை குறைவின்றி நடத்தி, பள்ளிக்கனுப்பும் இந்தியப் பெற்றோர்களுக்கு குறைவுண்டா? இல்லையே!

இத்தகைய மகத்தான கல்வித் தெய்வம் பரிபாலித்துவரும் இந்நாட்டிலே, கல்வியறிவு பெற்றுள்ள மக்கள் எத்தனை பேரென்பதை ஆராயுங்கால் 100-க்கு 3 ஆண்களும் $1\frac{1}{2}$ப் பெண்களும் வாசித்தவர்கள் என்பது பெறப்படுகின்றதே! இஃதென்ன விந்தை? கல்வித் தெய்வத்தை கனவிலுங் கருதா மேலை நாட்டினருள் 100க்கு 70, 75 பேர் படித்த ஆண்களும், அதே அளவுக்குச் சற்றேறத்தாழ படித்த பெண்களுமாக நிரம்பியிருக்கையில், கல்வித்தெய்வம் கண்காணிக்கும் நமது நாட்டில் நூற்றுக்கு $1\frac{1}{2}$ப் பெண்கள் படித்தவர்களென்றால் இதைவிட நாம் வெட்கப்படத்தக்கதாவது, துக்கப்படத்தக்கதாவது வேறெதுவேனுமுளதோ? இதுவும் அப்பெண் தெய்வம் கடாட்சித்த வரப்பிரசாதம் போலும்! அந்தோ! வெட்கம்! வெட்கம்!! இவை (வெட்கம்) நமக்கோ, நமது கலைவாணிக்கோ!

இவை நிற்க, நூற்றுக்கு $1\frac{1}{2}$ப் பேரான படித்த பெண்களும் எத்தகைய படிப்பைப் படித்திருக்கிறார்கள் என்பதை எண்ணுங்கால்!...... அந்தோ! என்ன எழுதுவதென்று கூட ஓடவில்லை!

அக்ஷராப்பியாசத்தோடு அயர்ந்து விட்ட அங்கனைகள் எத்தனை பேர்! "அம்மி", "டப்பி" பாடம் படித்து விட்டு மனைவாழ்க்கையில் புகுந்து விட்ட மங்கையர் எத்தனை பேர்! தப்பித்தவறி, மூன்றும் நான்காம் வாசக புத்தகங்களை முடித்து விட்டாலும், அதை விர்த்தி செய்து கொள்ளும் வகை அறியாதவர்களாய் "ஒப்பாரிக்கண்ணி"களை வாங்கிப் பாடம் பண்ணி பத்திரமாக வைத்திருக்கும் மடந்தையர் எத்தனைபேர்! படித்து விட்டாலுங்கூட, "அல்லி அரசாணி மாலை, ஆரவல்லி, சூரவல்லிக்கதை, அபிமன்னன் சுந்தரி மாலை" இவை போன்ற கவைக்குதவாத அத்தைப் பாட்டி படிப்புகளை அறிந்து கொள்ள வேண்டுமேயன்றி வேறு நூல்களை கண்ணாலுங்காணலாகாதென்று கட்டுப்படுத்தப்பட்டிருக்கும் காரிகையர் எத்தனை பேர்! அதிலும் மிஞ்சிப்பட்டப் படிப்பு படித்து விட்ட செல்வத்திற் சிறந்த சீமாட்டிகளும், சீர்திருத்தம் புகட்டும் நூல்களையேனும், சமத்துவம் கோரும் பத்திரிகைகளையேனும் வாசித்தல் கூடாது! சமூக விடுதலைக்கென்று முன்வரப்படாது! பொதுக்கூட்டங்களுக்குப் போகப்படாது! மேடையேறிப் பேசிவிட்டாலோ! அம்மம்ம! "பதிவிரதா தர்மம் (!) பறந்தோடி விடும்! இருக்கிற பணத்தைப் போட்டு எம். ஏ. படித்து விட்டு வீட்டிலோர் மூலையில் அடக்கமாய், இராமாயண மகாபாரதங்களைப் பாராயணம் பண்ணிக்கொண்டிருக்க வேண்டுமென்றும் "பழமை" விலங்கில் சிக்குண்டு பரிதவிக்கும் பெண்மணிகள் எத்தனைபேர்!

தோழர்களே! இவற்றைக் குறிப்பிடுவதால் நம் நாட்டுப் படித்த பெண்மணிகளை குறைகூற வந்தேனென்று கருதாதிருக்கவேண்டுகிறேன். அவர்கள் பால் என்ன குற்றமுளது! அவர்களை அடிமை கொண்டிருக்கும் ஆடவரின் 'ஆட்டுப்பொம்மைகளாக' வன்றோ இன்று இந்தியப் பெண்மணிகள் இருந்து வருகின்றார்கள்! பெண்களுக்கு அறிவாற்றல் இறைவன் சிருஷ்டியிலேயே அமைந்திருக்கவில்லை.என இறுமாந்திருக்கும்ஆடவராய அறிவின் திலகங்களே அத்தைப் பாட்டி, படிப்புகளில்ஆர்வமிக்கோராயிருக்க அரிவையர் என் செய்வர்?

பி. ஏ., எம். ஏ., படித்து விட்டு, விஞ்ஞான சாஸ்திர பட்டம் பெற்று விட்டு, வான சாஸ்திரம், பூமிசாஸ்திரம் படித்து விட்டு, சூரிய கிரகணம், சந்திர கிரகணம் பிடிக்கிறதென்றால், அத்தைப்பாட்டிக் கதைகளில் ஆதி சேஷன் என்னும் பாம்பு சந்திர சூரியர்களை விழுங்குகிறது; அன்று சமுத்திரத்தில் குளிக்கா விட்டால் கர்மம் சூழ்ந்து கொள்ளும் என்று சமுத்திரத்தில் போய்க்குளிப்பவர்களும், பிரபஞ்சோற்பத்தியை இயற்கை விஞ்ஞான சாஸ்திரத்தின் மூலம் தெள்ளிதில் உணர்ந்திருந்தும், 'உலக மாதா' உலகத்தின் கீழிருந்து உலகத்தைத் தாங்கிக் கொண்டிருக்கிறாளென்றும் (அந்தம்மாளை யார் தாங்கிக்கொண்டிருக்கிறார்களோ தெரியவில்லை!) முற்காலத்து தேவர்கள் வானத்தைவில்லாக வளைத்தார்கள், மணலைக் கயிறாகத் திரித்தார்கள் என்றும், அறிவிற்கும், அனுபவத்திற்கும் பொருந்தாத விதமாய் புளுகி வைத்திருக்கும் புராணக்கற்பிதங்களை கையகத்தேந்தி அவைகளுக்கு, விரிவுரைகளும் கதாகாலட்சேபங்களும், கவி இன்பங்களுங்கண்டு (இவ்விருபதாம் நூற்றாண்டிலும்!) களித்துக்கொண்டிருக்கும் ஆண் வித்வான்கள், குறைவின்றி இருக்கையில் பெண்கள் என்ன செய்வார்கள்! அந்தோ! மக்களது அறிவை இவ்வளவு தூரம் மயக்கி விட்ட மதப்பைத்தியமே! நீ மாண்டு மடிவதெப்போ! முன்னேற்றத்திற்கு முட்டுக்கட்டையாய் நிற்கும் 'பழமை'ப்பேயே! உனக்கு அடிக்கும் சாவுமணியோசையை கேட்பதெப்போ! கற்றவரையும் மற்றவரையும் கலக்கி வைக்கும் புராணதிகாசங்களை, ஆணுக்கொருநீதி பெண்ணுக்கொருநீதி கற்பித்தெழுதிய இந்துமத சட்ட புத்தகங்களை, அடுக்கி மூட்டும் தீயின் தணலைக் காண்பதெப்போ! வைதீகம், மதக் கொள்கை, பதிவிரதா தர்மம், எனும் வலைகளில் வனிதையரைச் சிக்குப்படுத்தி "அடுப்பூதும் பெண்களுக்கு ப்படிப்பேதுக்கு" என அசட்டு வீரம் பேச ஆதரவளிக்கும் இந்து மதம் என்னும் விடநாகமே! உன் தலை நசுங்குவதெப்போ! நீங்களெல்லாம் ஒழிந்தவன்றன்றோ மக்களிடை சமத்துவம் நிலவும்! சகோதரத்துவம் தழைக்கும்! சுதந்தரம் பொங்கும்! அன்றன்றோ! அரிவையர் சம நிலை காண்பர்! அன்றன்றோ அரிவையர் உண்மைக் கல்வியை சமமாகப் பெறுவர்!

அன்பார்ந்த வாசகர்களே! ஆத்திரத்தில் வெகுதூரம் போய்விட்டேன். இந்தியாவின் உண்மை விடுதலையை விரும்பும் எவரும் அதன் ஜனத்தொகையில் சரிபாதியினரான பெண்கள் விடுதலையடைந்தாலன்றி "விடுதலை, சுயராஜ்யம்"என்பது 'குதிரைக்கொம்பே' என்பதை எட்டுணையும் மறக்கார்!

அன்றி உங்களிடம் "உங்கள் பெண் சமூகம் எந்த நிலையிலிருக்கிறது எத்தனை பேர் படித்தவர்கள்" என வினவுங்கால்; எங்கள் நாட்டில் ஔவை பிறந்து கவிபாடினார்! அம்பிகா தெய்வம் அருள் சுரந்தது! கண்ணகி கற்பின் மகிமையைக்காட்டினார்! சாவித்திரி சாவினின்றும் கணவனை மீட்டாள்! இன்னும் துரௌபதையென்ன! சீதையென்ன! (அவற்றிலும் 'ஔவை' கவிகளைத் தவிர்த்து மற்றவை நம்பத்தக்கவைகளாயில்லை) என்று பழம் பல்லவி பாடுவதில் ஒரு பயனுமில்லை! அன்றி இன்று லக்ஷத்தில் ஒரு சில சீமாட்டிகள் காங்கிரஸ் தலைவராகவோ! வட்டமேசை மகாநாட்டுப் பிரதிநிதியாகவோ மற்றும் உத்தியோகச் சிறப்பிலோ இருந்து வருகிறார்கள்! எங்களுக்கென்ன குறை என்று புதுப்பல்லவி பாடுவதிலும் பயனில்லை! ஏனெனில் இந்நாட்டின் பெண் மக்களின் முன்னேற்றத்திற்கறிகுறியயாய் மிளிரும் மேற்குறித்த அம்மையர்களின் அரிய வீரத்திற்கு நாம் அகமகிழ வேண்டியவர்களேயாயினும் பதினாறு கோடி எண்ணிக்கைகொண்ட பெண்கள் சமூகத்தில் நூற்றுக்கணக்கான சிலர் முன்னேறி விட்டால் போதுமா? அறிஞரே ஆலோசியுங்கள்!

சகோதரிகளே! அடுப்பூதும் பெண்களுக்குப் படிப்பெதற்கு எனக்கதை கட்டி விட்டார்கள். இது பார்ப்பனர்கள் தங்களை உயர்த்திக்கொள்ள எவ்வாறு தாங்கள் மட்டும் பிர்மாவின் முகத்திலிருந்து தோன்றியவர்கள், மற்றையோர் படிப்படியாகத் தாழ்ந்தவர்கள், அதிலும் தீண்டப்படாதவரென்பவர் நான்கு சாதிக்கும் அப்புறப்பட்டவர் என வரைந்து வைத்துக் (பிராமணர் தவிர மற்றையோர் வேதங்களைப் படிக்கக்கூடாது படித்தால் நயவஞ்சக சூழ்ச்சி வெளிப்பட்டுவிடுமெனக்கருதி) அதிலும் சூத்திரன் படித்தால் நாவையறுக்கவேண்டும், காதால் கேட்டால் காதில்ஈயத்தைக் காய்ச்சி ஊற்றவேண்டுமென்னும் கொடுஞ் சூழ்ச்சியை மேற்கொண்டார்களோ அதே போல பெண்கள் படித்து விட்டால் ஆண்களின் அநியாய ஆதிக்கம் அன்னோரிடத்தில் செல்லாது, அவர்களது இஷ்டப்படி ஆட்டுவிக்க முடியாதெனக்கருதி கைக்கொண்டுள்ள சூழ்ச்சிகளில் முதல்தரமானதும் பொறுக்கி யெடுத்ததுமான சூழ்ச்சியாகும் இந்த அடுப்பூதும் பெண்களுக்குப் படிப்பேதுக்கு என்பது! ஆதலால் ஒவ்வொரு பெண்மணியும் தங்களை முன்னேற்றி, தங்களைத்தாங்களே ஆடவரின் தயவை எதிர்பாராது காப்பாற்றிக் கொள்ளக்கூடிய ஆற்றலளிக்கக்கூடிய

தொடர்ச்சி 17ம் பக்கம் பார்க்க.

# வியாதிகளின் கொடுமை.

## வறுமையும், மூடநம்பிக்கையுமே காரணம்.

[சாமி. சிதம்பரனார்]

இந்தியாவில்பரவியிருக்கும் அவ்வளவு நோய்வேறு எந்த நாடுகளிலும் இல்லை. இந்திய மக்களில் நூற்றுக்குத்தொண்ணூறு பேர் நோயுள்ளவர்களாகவே யிருக்கின்றனர். நோயற்ற வலிமையான உடம்புடையவர்கள் நூற்றுக்குப் பதின்மரேயுளர். பலஹீனம், சோகை, நீரிழிவுவியாதி, காசம், க்ஷயம், மேகம்போன்ற பலவியாதிகளால் ஆயுள்வரையிலும் துன்புறும் மக்கள் இந்தியாவிலே அதிகம்.

அன்றியும், ஒவ்வொரு காலங்களில் தோன்றும், விஷபேதி, அம்மை, பெருவாரி, சுரநோய் முதலியவைகளால் எண்ணற்ற மக்கள் மடிகின்றனர். ஆண்களைக்காட்டிலும் பெண்களே அதிகமாக நோயினால் துன்பப்படுகிறார்கள், அடுத்தபடியாகக் குழந்தைகளைக் கூறலாம். இந்தியாவில் இருக்கும் அவ்வளவு குழந்தை மரணம் வேறெந்த நாட்டிலும் இல்லை.

“நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்” என்பது தமிழ்நாட்டுப் பழமொழி. மக்களுக்குவேறு எந்த செல்வம் இருந்தாலும் நோயினால் துன்புறுவாராயின் அவர்களுக்கு உலகவாழ்க்கையில் இன்பமேது; சுகமேது; மகிழ்ச்சியேது; அவர்கள் விரும்புகின்ற சுகத்தை அனுபவிக்க முடியாதல்லவா? ஆகையால் மக்கள் முதலில் தங்கள் உடம்பை நோயின்றிக் காப்பாற்றிக்கொள்ள வேண்டியதே அவசியமாகும்.

ஒன்று மறியாத மக்களுக்கு, இவ்விஷயம் தெரியாது; உடம்பைக்காப்பாற்றிக்கொள்ள வேண்டும்; நீண்டநாள் உயிர்வாழ வேண்டும்; பலசாலியாக இருக்கவேண்டும் என்ற எண்ணம் ஒன்றுந்தெரியாதவர்கள் மனத்திலும் உண்டு; ஆனால் அவ்வாறு இருக்க என்னசெய்யவேண்டும் என்பதுபற்றி அவர்களுக்கு ஒன்றுந்தெரியாது.

இத்தகைய மக்களுக்கு, வேண்டிய உதவி செய்யவேண்டியது முதன்மையாக அரசாங்கத்தாரின் கடமை யாகும்; இரண்டாவது நாட்டில் உள்ள செல்வர்களின் கடமையாகும். மூன்றாவது கற்றவர்களின் கடமையாகும். அரசாங்கத்தார், செல்வர்கள், கற்றவர்கள் இம்மூவரும் கூடினால் எந்தக் காரியத்தையும் செய்ய முடியும். இவர்களால் கவனிக்கப்படாத காரியம் எதுவும் நிறைவேறுவது கஷ்டமேயாகும்.

தற்காலத்தில் அரசாங்கத்தார், தேசமக்கள் பிணியினால் கஷ்டப்படாமல் இருப்பதன் பொருட்டு ஓரளவு முயன்று வருகிறார்கள் என்று கூறலாம். இதற்காக ஏற்படுத்தப்பட்டிருப்பது தான் சுகாதாரஇலாக்கா (Health department) என்பது. இவ்விலாக்காவின் அதிகாரிகள், ஒவ்வொரு நகரங்களிலும் இருக்கிறார்கள். இவர்கள் கூடிய வரையிலும் நோய்கள் உண்டாகாமல்இருப்பதற்கு வேண்டிய முயற்சிகளைச் செய்து வருகிறார்கள். ஆயினும் ஜனங்களுக்கும், இவர்களுக்கும் சம்பந்தமில்லை; கிராமாந்திர மக்களுக்கு இப்படியொரு இலாகா இருப்பதாகவே தெரியாது. உண்மையில் இவ்விலாகாவின் வேலையும், இதற்காக அரசாங்கத்தாரால் செலவு செய்யப்படும் பணமும் பயன்பட வேண்டுமானால் இவ்விலாகாவைச் சேர்ந்த உத்தியோகஸ்தர்கள் சுகாதாரம் சம்பந்தமாகக் கிராமங்களில் பிரசாரம் பண்ணவேண்டும்.

இனி, பணக்காரர்களையும், படித்தவர்களையும் எடுத்துக் கொள்ளுவோம் இவர்களுக்குப் பொது ஜனங்களைப் பற்றிய ஞாபகமே எப்பொழுதும் இருப்பதில்லை. இவர்கள் தங்கள் சுயநலம் ஒன்றிலேயே கருத்துடையவர்களாக இருப்பவர்கள். ஆகையால் இவர்களுடைய உதவி தற்பொழுது பொதுஜனங்களுக்குச் சிறிதும் இல்லையென்றே சொல்லி விடலாம்.

இனி நமது நாட்டு மக்கள் அதிகமான நோய்களால் வாடுவதற்கும், ஆகாலமரணமடைவதற்கும் காரணம் என்ன வென்பதைப் பார்ப்போம். பலர் பல விதகாரணங்கள் கூறலாம். ஆனால் நாம் இரண்டே காரணம் தான் கூறுவோம். அவை வறுமை, அறியாமை, என்னும் இரண்டே யாகும். நமது தேசமக்களிடம் இந்தக்கொடிய வறுமையும், பாழும் அறியாமையும் இல்லாமல் ஒழிந்து விட்டால் அவர்கள் துயரமும் ஒழியும். அவர்கள் நோயின்றித் திடகாத்திரமுடையவர்களாக வாழ்வார்கள்.

இந்த வறுமையினாலும், அறியாமையினாலும், ஏழைமக்கள் எவ்வாறு கஷ்டமடைகிறார்கள், என்பதைச் சிறிது கவனிப்போம். இவற்றுள்முதலில் வறுமைதை எடுத்துக்கொள்ளுவோம்.

நமது நாட்டு மக்களில் நூற்றுக்குத்தொண்ணூற்றொன்பது பேர் ஏழைகள். இவர்கள் உடம்பை வருந்தி பாடுபட்டுச் சம்பாதித்து உயிர் வாழ வேண்டிய நிலையில் இருக்கின்றார்கள். நமது நாட்டில் பிழைப்பில்லாமல் கோடிக்கணக்கான மக்கள் பெண்டு பிள்ளைகளுடன் கடல் கடந்து சென்று, கூலி வேலை செய்து உயிர் வாழ்கிறார்கள் என்பது நமக்கெல்லாம் தெரியாத செய்தியல்ல. நமது நாட்டிலேயே இருக்கின்ற ஏழைமக்களோ முதலில் குடியிருப்பதற்கு இடமில்லாமல் தவிக்கிறார்கள். இவர்கள் கிராமாந்தரங்களில் உள்ள சதுப்பு நிலங்களிலும், நகரங்களிலும், ஜனங்கள் மலஜலங்கழிக்கும் ஆபாசமான பாகங்களிலும் குடிசை கட்டிக்கொண்டு குடியிருந்துவருகிறார்கள், இந்தக்குடிசைகளாவது, ஒழுங்காக, சுகாதார வசதியுடையதாக இருகிறதா என்று பார்த்தால் அதுவும் இல்லை. இருட்டறைகளாகவும், காற்றோட்டமில்லாததாகவும் இருக்கின்றன. அல்லது, எறிக்கும் வெயில் முழுதும் வசிக்கக்கூடியதாகவும், பெய்யும் பனி, மழை முழுதும் ஊற்றக்கூடியதாகவும் இருக்கின்றன. இவைகளில் உள்ள அழுக்கும் துர்நாற்றமும் சொல்ல முடியாது.

இவர்கள் குடியிருக்கும் இடந்தான் இப்படியிருக்கிறதென்றால், மற்ற வசதிகளாவது இவர்களுக்கு உண்டா? என்று பார்த்தால் அவைகளும் இல்லை.

மக்களின் சுகவாழ்வுக்கு முக்கியமாக வேண்டியவை காற்று, நீர், உணவு, முதலியவை. இவர்கள் குடியிருக்கும் இடத்தைக்கொண்டே நல்லகாற்றை நுகர்வதற்கு வசதியில்லையென்பதை அறியலாம்.

தண்ணீரைப்பற்றியோ சொல்ல வேண்டியதில்லை. நல்ல தண்ணீர் கிடைப்பதே இல்லை. மாடு கன்றுகள் விழுந்து கிடக்கும், குளம் குட்டைகளில் உள்ள தண்ணீரையே அருந்துகிறார்கள். இதனால் இவர்கள் நோயடைய மாட்டார்களா? நல்ல கிணறுகள் கூட இவர்களுக்கு இல்லை. அதிலும் தீண்டத்தகாதவர்களாயிருந்துவிட்டால் அவர்கள் கஷ்டம் சொல்லுத்தரமன்று. நல்ல குளங்களிலும் நல்ல கிணறுகளிலும் தண்ணீர் எடுப்பதற்கு அனுமதிக்கப்படுவதில்லை.

இனி உணவு விஷயமாகக்கவனிப்போம். ஏழைமக்கள், நல்ல உணவுகளை உண்ணுவதற்கு வசதியேயில்லை. சொற்பச்சம்பளம் பெறும், ஏழைத்தொழிலாளர்களும், அதுகூட இல்லாமல் திண்டாடும் ஆதிதிராவிட மக்களும், மற்றுமுள்ள ஏழைகளும், சுகாதாரத்திற்கேற்ற புஷ்டியான உணவை எவ்வாறு பெறமுடியும்? அவர்களும், அவர்கள் தம் பெண்டு பிள்ளைகளும், தினம் கால்வயிற்றுக் கஞ்சிக்கே திண்டாடும் போது உயர்ந்த உணவு பெறுவது குதிரைக் கொம்பு தான்.

இத்தகைய ஏழைமக்களுக்கு வியாதிகள் வந்து விட்டால் இவர்கள் என்ன செய்ய முடியும்? வயித்தியம் பண்ணிக்கொள்ளத் தக்க பணம் அவர்களிடம் இல்லை. ஏழை மக்களின் நன்மைக்காக ஏற்படுத்தப்பட்டிருக்கும் ஆஸ்பத்திரிகளுக்கும் இவர்கள் போவதில்லை. காரணம் ஆஸ்பத்திரிகளில் தங்கள் போன்ற ஏழைகளைக்கவனிக்க மாட்டார்கள் என்ற எண்ணமே யாகும். உண்மையில் நமது நாட்டு ஆஸ்பத்திரிகள் அப்படித்தான் இருக்கின்றன. தருமத்திற்காக ஏற்பட்ட ஆஸ்பத்திரிகளாயிருந்தாலும், அங்குச்செல்லும் ஏழைமக்களைச் சரியாகக் கவனிப்பதில்லை. அதிலும், ஆதிதிராவிடர்கள் போன்ற தீண்டாத மக்கள் ஆஸ்பத்திரிகளுக்குச்சென்றால், அவர்களிடம் மிகவும் அருவருப்புக் காட்டப் படுகிறது. பணக்காரர்களுக்கே பெரும்பாலும் ஆஸ்பத்திரிகள் உபயோகப்பட்டு வருகிறது என்றுகூறலாம். இந்த நிலையில் பாவம்! ஏழை மக்கள் என்ன தான் செய்வார்கள்! தாங்கள் அறியாமையினால் பாம்பரையாக நம்பியிருக்கும், “தலை விதி”யையும நொந்து கொள்ள வேண்டியதுதான்.

இன்று நமது நாட்டில் அதிகமான வியாதிகளால் இறக்கின்றவர்கள் ஏழைகளாகிய ஆண்களும், பெண்களும், குழந்தைகளும் என்பதை யாரும் அறிவார்கள். விஷபேதி, அம்மை, பெருவாரி, சுரம் முதலிய தொத்து நோய்கள் முதலில் ஏழைமக்கள் வசிக்கும் பாகங்களிலேயே ஆரம்பமாகிறது என்பது உண்மையாகும். ஆகவே, ஏழைகள் வியாதிகளினால், பீடிக்கப்படுவதற்கும், பீடிக்கப்பட்ட வியாதிகளைப் போக்கிக்கொள்ள முடியாமல் அல்லற்படுவதற்கும், அவைகளால் இறப்பதற்கும் முக்கிய காரணமாயிருப்பது வறுமையே யாகும் என்பதை அறியலாம்.

இனி அறியாமையால் மக்கள் எவ்வாறு வியாதியைப் போக்கிக் கொள்ள முடியாமல் இறக்கிறார்கள் என்பதைக்கவனிப்போம்.

நமது நாட்டு மக்களிடம் இருக்கும் குருட்டு நம்பிக்கைகள் மிக அதிகம். சூரியன், சந்திரன், தண்ணீர், காற்று, நெருப்பு, மண், கல், முதலியவெல்லா இயற்கைப் பொருள்களையும் தெய்வமென்று நம்பிக்கொண்டிருப்பவர்கள். இவர்கள் எந்தவியாதி வந்தாலும், அவ்வியாதிகளுக்குக் காரணம் தெய்வங்களே என்று நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். விஷபேதிவந்து விட்டால், அது காளியம்மன் என்னும் தெய்வத்தால் வந்துவிட்டதென்று கருதுகிறார்கள். அம்மைநோய் தோன்றி விட்டால், அது மாரியம்மனால் வந்ததென்று நினைக்கிறார்கள். பெருவாரி முதலிய நோய்கள் வந்தால் அவைகளும் தெய்வங்களால் உண்டாக்கப்பட்ட நோய்கள் என்றே நினைக்கின்றார்கள், இந்த நினைப்பு காரணமாக, வியாதிகள் தோன்றியவுடன் வைத்தியம் செய்ய வேண்டும் என்னும் எண்ணம் உதிப்பதில்லை. தெய்வங்களை வேண்டிக்

தொடர்ச்சி 15-ம் பக்கம் பார்க்க.

# சர்வகலாசாலை பட்டமளிப்பு விழா.

## சுதேசபாஷைக்கு ஆதரவு.

### "மூட நம்பிக்கைகளை அகற்றுங்கள்"

### கல்விமந்திரி சொற்பொழிவு.

சென்னை சர்வகலாசாலை பட்டமளிப்புவிழா 4-8-32ல் மாலை 4 மணிக்கு சென்னை கவர்னர் தலைமையில் நடைபெற்றது.

சர்வகலாசாலை பரீட்சைகளில் தேறிய ஏராளமான மாணவர்கள் பட்டம் பெற்றனர். விசிட்டர் காலரியில் பல பிரபலஸ்தர்கள் பிரசன்னமாயிருந்தனர். கவர்னர், பட்டங்களை வழங்கியபின், சென்னை கல்வி மந்திரி கனம். எஸ். குமாரசாமி ரெட்டியார் செய்த பிரசங்கத்தின் சாரம் வருமாறு:—

தேசத்தில் மகத்தான அரசியலமைப்பு மாறுதல்களேற்படப் போகின்றது. இந்திய சர்க்கார் பொறுப்பை நம்மவர்களே சீக்கிரம் ஏற்க வேண்டுமென்பதை நாமனைவரும் வெகு ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம். பழையன கழிந்து, புதியன புகுதல் வேண்டும்.

பொறுப்பாட்சியை செவ்வனே நிர்வகிக்கத் தக்கவிதமாக ஜனங்களுக்குப் பயிற்சி யளிக்க வேண்டும். இவ்வித பயிற்சியை தக்க கல்வி முறை மூலமே அளிப்பது சாத்தியமாகும். ஆரம்பக்கல்விச் சாலைகள் மூலம் பாமர வாக்காளரின் அறியாமையைப் போக்க வேண்டும். சட்டசபை, ஸ்தல ஸ்தாபனங்களில் அங்கம் வகிக்க யோக்கியமுள்ளவர்களைப் பழக்கும் பொறுப்பு உயர்தரக் கலாசாலைகளைச் சேர்ந்தது. நாட்டின் விதியை நிர்ணயிக்க அரசியல் தலைவர்களை உண்டாக்கும் பொறுப்பு சர்வகலாசாலைகளையே சார்ந்ததாகும். இவ்விதம் மூவித கல்வி முறைகளையும் சீர்திருத்தி அபிவிருத்திசெய்ய வேண்டியது இன்றியமையாததாகும்.

இந்திய சர்வகலாசாலைகளில் கைத்தொழில் பயிற்சியளிக்க வேண்டியது அவசியத்திலுமவசியமென்று நான் மதிக்கிறேன்.

மாணவரின் புத்திசாலித்தனத்தை பரீட்சைகளின் மூலம் நிர்ணயித்து விட முடியாது. பரீட்சைகளுக்கே சர்வகலாசாலைகளில் அதிக முக்கியத்வமளித்து வருகின்றன. வெறும் புத்தகப் பூச்சிகளாக இருந்து பரீட்சைகளில் தேறி விடுவது பெரியகாரியமல்ல. சர்வகலாசாலையின் உண்மை நோக்கமும் இதுவல்ல. உலக வாழ்க்கையை வெற்றிகரமாக நடத்தவும், பொறுப்பாட்சி அரசியலை நிர்வகிக்கும் வன்மையும் பெறவேண்டியதே சர்வகலாசாலைகளின் உண்மை நோக்கமாக இருத்தல் வேண்டும்.

சென்னை சர்வகலாசாலை சென்ற 20 வருஷ காலமாக நாலா விதத்திலும் அபிவிருத்தி யடைந்து வருகின்றது. அனுபவத்தில் உபயோகமாகக் கூடிய பல பாடங்களை சர்வகலாசாலையில் புகுத்தியுள்ளனர். தேசீய புனருத்தாரணத்திற்கான வழியில் சென்னை சர்வகலாசாலை அபிவிருத்தி யடைந்து வருவது போற்றத்தக்கதாகும்.

கல்வி ஸ்தாபனங்களில் தாய் பாஷைக்கு முக்கியத்வமளிக்காததன்றி, படித்தவர்கள் கிராமந்திரங்களை விட்டு விட்டு, உத்தியோகந் தேடுவதற்காக பட்டணங்களுக்குச் சென்று விடுவதால், தற்கால கல்வி முறை தேசிய வாழ்விற்கு பயனற்றதென சிலர் கண்டிப்பதில் உண்மையில்லாமலில்லை. தாய் பாஷை மூலம் உண்மைக்கல்வியைப்பொது ஜனங்களிடையே பரப்ப முடியுமென்பதே சர்க்கார் கருத்துமாகும். ஆனால் சர்க்கார் எவ்வெண்ணத்துடன் ஆங்கிலக் கல்வியை புகுத்தினார்களோ, அது கைகூடாமற் போய்விட்டது. இதற்குக் காரணங்கள் பல உள. சர்க்கார் உத்தியோகங்கள் கிடைக்குமென்றும் ராஜபாஷை என்றும் ஜன சமூகத்தில் மேலான பதவி வகிக்கலாமென்றும் நினைத்து ஆங்கிலக் கல்வி பயின்று தங்கள் சுயநலத்திலேயே கருத்துச் செலுத்துகின்றனரே யன்றி பாமர ஜனங்களின் அறியாமையைப் போக்குவதில் அவர்கள் கவலைகொள்ளவில்லை. நிலைமையை சீர்படுத்தும் பொறுப்பும், சக்தியும் நம்மிடமே இருக்கிறது. இவ்விஷயத்தில் சர்க்காரை அதிகம் கூறுவதற்கில்லை. உயர்தரக்கல்வி முறை யனைத்தையும் தாய் பாஷையிலேயே நடத்தி வரமும்முரமான ஏற்பாடுகள் நடந்து வருகின்றன, ரசாயனம் முதலிய பாடங்களிலுள்ள சில பதங்களிலுள்ள சில புத்தகங்களுக்குதாய்ப்பாஷையில்சரியான வார்த்தைகள் கிடையாதென்றும், இதனால் தாய் பாஷையில் கல்வி போதிப்பது கஷ்ட மென்றும் சிலர் ஆட்சேபிக்கலாம். இவ்வித ஆட்சேபம் ஒப்புக்கொள்ளத்தக்க தல்ல.

அவ்வித கஷ்டமான ஐரோப்பிய பதங்களுக்குத்தக்க பகுதி விகுதிகளைச்சேர்த்து அப்படியே உபயோகித்து விடலாம்,

"இந்தியா தேசத்தில் ஆங்கிலமே பொது பாஷையாக இருந்து வரும்" இதை மாற்றுவதென்பது சமீபத்தில் அனுவசாத்தியமல்ல. உயர்தரப்படிப்பில் ஆங்கிலத்தைக் கட்டாய பாடமாகச்செய்ய வேண்டும்.

உத்தியோகத்திற்காகவே கல்லூரிகளில் மாணவர்கள் படிக்கின்றனர். படித்தவர்களின் வேலையில்லாக்கஷ்டமோ அதிகரித்து விட்டது. படித்தவர்கள் கிராமாந்திரங்களை விட்டு பட்டணப் பிரதேசங்களுக்கு வேலை தேட வந்து விடுவது சகஜமாயிருக்கிறது. கல்லூரிகளில் தாங்கள் பெற்ற உயர்ந்த கல்வியை, தாய்பாஷை மூலம் கிராமங்களிலுள்ள பாமரஜனங்களுக்கு எடுத்துக்கூறி, அவர்களது கல்வி யின்மையைப் போக்குவதே கற்றோரின் முக்கிய வேலையாக ஏற்படும் நாள் கூடிய சீக்கிரம் வரவேண்டுமென பிரார்த்திக்கிறேன். தேச, ஆகார அனுஷ்டானங்களைத் தழுவியதாகவே தேசக்கல்வி முறையிருத்தலவசியம். படித்தவர் கிராம புனருத்தாரண வேலையையே முக்கிய தொழிலாக மேற்கொள்ள வேண்டியது அதி முக்கியமாகும். இந்திய எதிர்காலமனைத்தும் கிராமாந்திர பிரதேசங்களையே பொறுத்து நிற்கின்றது.

தன்னல மற்று, பொது நலம்நாடும் உத்தம தேச ஊழியர்களே தேசத்திற்கு மிகவும் தேவையாகும். கிறிஸ்தவ மிஷனரிகளைப் போல நம்மவர்களிலும் சிலர் பாமர மக்கள் உய்யும் வண்ணம் தங்கள் வாழ்க்கையை அர்ப்பணம் செய்ய முன்வரமாட்டார்களோ! "மூடப்பழக்கவழக்கங்களை அறவே ஒழிக்க வேண்டும். புத்தகப் பூச்சிகளாக மூலையில் முடங்கிக் கிடப்பதில் பயனொன்றுமில்லை. பழைய வழக்கங்களில், எது அர்த்தமற்றதும், பயனற்றது மென்த்தெரிகிறதோ, அதை எதிர்த்து கிளர்ச்சி செய்ய சற்றும் பின்வாங்கக்கூடாது" உங்கள் உலக வாழ்க்கை இனி ஆரம்பமாகப்போகிறது. நாட்டில் வேலை இல்லாக்கஷ்டம் அதிகரித்துள்ளது. இவ்விஷயத்தில் அதிர்ஷ்டமுள்ளவர்களுக்கு மேன்மேலும் வெற்றி கிடைக்க வேண்டுமென வாழ்த்துகிறேன். வேலை கிடைக்காதவர்கள், தங்கள் காலத்தை வீணாக்காமல், தங்கள் சொந்த கிராமங்களுக்குச் சென்று பாமர மக்கள் முன்னேற்றத்தில் கருத்து செலுத்த வேண்டும். பிரதிபயனை எதிர் பார்த்து தொண்டு செய்யும் மனிதனே உத்தமனாவன். அதுவே மனித வாழ்க்கையின் மேலான நோக்கமாகும். அவருக்கே மனசந்துஷ்டியும் மேலான சுகமுமேற்படும். இந்திய எதிர்காலமனைத்தும் உங்களையே பொறுத்திருக்கிறதென்பதை நீங்கள் மறந்துவிடக்கூடாது.

# ஒன்பது கொட்டைகள் ஒழிந்தது.

## சுயமரியாதை இயக்கத்தின் கைமேற்கண்ட பலன்.

இவ்வூரில் நடந்த தமிழர் மகாநாட்டிலும், 7-8-32 காலையில் நடந்த சுயமரியாதைப் பொதுக் கூட்டத்திலும் தோழர்களான டி. வி. சுப்ரமண்யம், இந்திராணி பாலசுப்ரமண்யம், குருசாமி குஞ்சிதம், பொன்னம்பலனார், நீலாவதி, முதலியோர் பிரசங்கத்தை கேட்டுக்கொண்டிருந்த இவ்வூர் தேவாங்ககுலப்புப்பிரபலஜவுளி வியாபாரிகளான திரு. டி. பி. ஏ. முத்துசாமிசெட்டியார்திரு என்.கே. கிருஷ்ணசாமி செட்டியார் ஷியார்களின் புதல்வர்கள் இன்னும் சில ஒன்பது பேர்களும் நெடுநாளாக தங்கள் கழுத்தில் கட்டியிருந்த உருத்திராக்க கொட்டைகளை அவிழ்த்து அதனுடன் இணைத்திருந்த தங்க கயிற்றை எடுத்துக் கொண்டு கொட்டைகளை நசுக்கி எறிந்துவிட்டனர். இம்மாதிரி புரட்சி இன்னும் அநேகம் நடக்குமெனத்தெரிகிறது. சேலம் தோழர் சித்தையா அவர்கள் சுயமரியாதைக் கீதம் பாடக்கூடாதென இம்சிக்க எத்தனித்த மகாநாட்டின் நிர்வாகிகளை நகரில் அனைவரும் கண்டித்து வருகின்றனர் என சைமன் ராமசாமி எழுதுகிறார்.

## ஹிமாம துவ்ஸலிப்யான் சங்கம்.

இச்சங்கத்தின் வாராந்திரக் கூட்டம் சலாபத்தில் 7-8-32ல் பிற்பகல் 3மணிக்கு தலைவர் கே. எம். சய்யது அலி ஆலிம்சாஹிப் அவர்களின் தலைமையின் கீழ் கூடிற்று. அவ்வமயம் காரியதரிசி அவர்களால் சங்கத்தின் சென்ற வார நிகழ்ச்சிகளை சபையோர்களுக்கு வாசித்துக் காண்பிக்கப்பெற்றபின் சென்ற வார அறிக்கையில் வெளியிட்டுள்ளபடியே அங்கத்தினர்கள் தங்கள் தங்கள் விஷயங்களைப்பற்றி வெகு உற்சாகத்தோடு சொற்பொழிவாற்றினார்கள். இறுதியில் அக்கிராசனாதிபதியவர்கள் "தற்கால நிலைமையும், இஸ்லாமிய சமூகமும்" என்ற விஷயமாய் எல்லோருள்ளமும் இளகும் வண்ணம் எடுத்தோதப்பெற்றதும் ஜனாப் சே. மீ. சய்யது இப்ராகீம்சாஹிப் அவர்களால் இச்சங்கத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ள விதிகளில் சிலவற்றை திருத்தியமைக்க வேண்டுமென கொண்டுவரப்பெற்ற தீர்மானம் தலைவரவர்களால் அடுத்தவாரம் வரை ஒத்திபோடப்பட்டது. அடுத்தபடியாக ஜனாப்களான மீ. மு. அப்துல் வஹ்ஹாப்சாகிப், டி. ஏ. எல். சாமாத்சாஹிப், அ. செ. சாகுல் ஹமீதுசாஹிப் அவர்களால் முறையே சிலதீர்மானங்கள் கொண்டுவரப்பெற்று சபையோர்களால் ஆமோதிக்கப்பெற்றபின் கூட்டம் கலைந்ததென ஒரு நிருபர் எழுதுகிறார்.

# தமிழர் மகாநாடு.

## தேவாரப்பாட்டு தடுக்கப்பட்டது.

### மத சம்பந்தமில்லாத தமிழ்த்தீர்மானங்கள்.

## ஹிந்திக்கண்டனம்.

திருச்சி ஜில்லாவைச்சேர்ந்த துறையூரில் சென்ற 6, 7—8—32 சனி, ஞாயிறுகளில் தமிழர் மகாநாடுகள் நடைபெற்றன. முதல் நாள் சனிக்கிழமை காலையில் 10-30 மணிக்கு மகாநாடு ஆரம்பமாயிற்று.

முதலில் திரு. த. வே. உமாமகேசுவரம் பிள்ளையவர்கள் கொடியேற்றஞ் செய்யுமாறு, ஆசிரியர் திரு. வரதநஞ்சையாபிள்ளை அவர்களைக் கேட்டுக்கொள்ள அவரும் சில பாடல்களைப்பாடிக் கொடியை உயர்த்தினார்.

பின்னர் தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடப்பட்டதும் தமிழ்ப் புலவர் மகாநாடு ஆரம்பமாயிற்று. முதலில், புலவர் மகாநாடு வரவேற்புத் தலைவர் பண்டிதர் திரு. வேங்கடசாமி நாட்டார் அவர்கள் தமது பிரசங்கத்தை எழுதிப் படித்தார். அதன்பின் மகாநாட்டுத் திறப்பாளராகிய பண்டிதமணி, திரு. கதிரேசன் செட்டியார் அவர்கள் தமது திறப்புவிழாப்பிரசங்கத்தை எழுதிப்படித்தார். பின்னர் மகாநாட்டுத்தலைவர் திரு. கா. நமச்சிவாய முதலியார் அச்சிட்டிருந்த தமது பிரசங்கத்தைப் படித்து இடையிடையே அதனை விரித்துக்கூறினார். இவ்வளவோடு புலவர் மகாநாடு 1-30 மணிக்குக் கலைந்தது.

பிறகு அன்று மாலை 4-30 மணிக்கு மகாநாட்டுப் பந்தலில் தமிழ் மாணவர் மகாநாடு ஆரம்பித்தது. முதலில் தமிழ் வாழ்த்துப் பாடியபின் ஒருவர் தேவாரம் பாட ஆரம்பித்தார். அப்பொழுது கூட்டத்தில் இருந்தவர்கள் மொழி சம்பந்தமான மகாநாட்டில், ஒருகுறிப்பிட்ட மதசம்பந்தமான பாடலைப் பாடக்கூடாதென்று ஆட்சேபனை செய்தனர். இதனால் பாடப்படாமல் நிறுத்தப்பட்டது.

பிறகு மாணவர் மகாநாட்டின் வரவேற்புத்தலைவர் மீனம்பள்ளி ஜமீன்தார், திரு. கே. சி. எம். வெங்கடாசல ரெட்டியார் எம். எல். சி. அவர்கள் வரத்தாமதமானதால் அவருடைய வேண்டுகோளின்படி அச்சிட்டிருந்த அவருடைய பிரசங்கத்தை, ராவ்பகதூர் டி. எம். நாராயணசாமி பிள்ளை எம். எல். சி. அவர்களால் படிக்கப்பட்டது. அதன் பின், மகாநாட்டுத் தலைவர் திரு. வி. கல்யாணசுந்தர முதலியார் அவர்கள் தமது அச்சிட்டிருந்த தலைமைப் பிரசங்கத்தைப் படித்து முடித்தார். பிறகு தேவாரம் பாட ஒரு பையன் முன் வந்தான். அப்பொழுது மீண்டும் கூட்டத்தினரால் ஆட்சேபிக்கப்பட்டது. இதனால் சிறிது நேரம் குழப்பமாக இருந்தது. பிறகு குழப்பம் அடங்கியபின், திரு. முதலியாருக்கு ஒரு வரவேற்புப்பத்திரம் வாசித்துக்கொடுக்கப்பட்டதில், சுயமரியாதைக்காரர்களைக் கண்டிக்கும்படியான சில வாக்கியங்கள் இருந்தன. அவைகளை ஒப்புக்கொள்ளக்கூடாது என்று கூறிஆட்சேபித்தனர். கடைசியில் குழப்பம் ஏற்படும்போலிருப்பதைக்கண்டு, திரு. கல்யாணசுந்தர முதலியார் அவர்களே, அவ்வாக்கியங்களைத் தாம் ஒப்புக்கொள்ளவில்லை யென்று கூறினார். இதற்குள் போலீசார் பிரவேசித்துக்கூட்டத்தைக்கலைத்து விட்டனர்.

மீண்டும் 7-8-32 ஞாயிற்றுக்கிழமை 1 மணிக்கு தமிழர் மகாநாடு ஆரம்பமாயிற்று. அப்பொழுது முதலில் தமிழ் வாழ்த்தும், இரண்டாவது திரு. சித்தையன் அவர்களால் சுயமரியாதைப்பாடலும் பாடப்பட்டன. அதன்பின் வரவேற்புத்தலைவர் திரு. உமாமகேசுவரம் பிள்ளை பி. ஏ., பி. எல். அவர்கள் தமது அச்சிட்ட வரவேற்புப் பிரசங்கத்தைப் படித்தார். அதன்பின் திரு. கா. சுப்பிரமணிய பிள்ளை எம். ஏ. எம். எல். அவர்கள் அச்சிட்டிருந்த தமது பிரசங்கத்தைப்படித்து மகாநாட்டைத் திறந்து வைத்தார். பிறகு, தலைவர் திவான்பகதூர், குமாரசாமி ரெட்டியார் அவர்களால் தலைமைப்பிரசங்கம் நிகழ்த்தப்பட்டது. பிறகு பல தீர்மானங்கள் கொண்டுவரப்பட்டு நிறைவேற்றப்பட்டு திரு. உமாமகேஸ்வரம் பிள்ளையவர்களால் வந்தனோபசாரம் கூறப்பட மகாநாடு மாலை 6-மணிக்குக்கலைந்தது.

### தீர்மானங்கள்.

1. தமிழ்மொழியின் நிட்ப நுட்பங்களைத் தமது நுண்மாண் புலமையினால் ஆய்ந்து உதவிய தமிழ்ப்பெரும் வள்ளல் திரு. பா. வெ. மாணிக்கம் நாயகர் இவ்வுலக வாழ்வை நீத்ததுபற்றி இம்மகாநாடு பெரிதும் வருந்துவதுடன், அவர் குடும்பத்தார்க்கு இம்மகாநாடு தனது துக்கத்தைத் தெரிவித்துக்கொள்ளுகிறது. வெளிவராத அவருடைய நூல்களைக் கூடிய விரைவில் வெளியிட ஏற்பாடுசெய்யவேண்டும் என்றும், தீர்மானிக்கிறது" இத்தீர்மானம் தலைவரால் பிரரேபிக்கப்பட்டு எல்லோராலும் எழுந்து நின்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

2. ஆங்கிலக்கல்லூரிகளில் ஆங்கிலமொழிந்த கலை நூல்கள் அனைத்தையும் தாய்மொழியிலேயே கற்பிக்கப்படவேண்டும் என்றும், கல்லூரி ஆசிரியர்களாக வருபவர்கள் எத்துறையில் தேர்ச்சி பெற்றவர்களாக இருந்தாலும் போதிய தமிழ்மொழிப்பயிற்சியுள்ளவர்களாக இருக்கவேண்டும் என்றும், இதற்குத்தக்க தேர்தல் ஒன்று வைக்கவேண்டும் என்றும் இவைகட்கான முறையில் சட்டங்கள் அமைக்கப்படவேண்டும் என்றும், கல்வியிலாக்காத் தலைவர்களை இம்மகாநாடு கேட்டுக்கொள்வதுடன், கலாசாலைத்தலைவர்கள் இவ்விதியைத்தழுவி நடத்தவேண்டும் என்றும் தீர்மானிக்கிறதுடன் இதை நிறைவேற்றுவதற்காக வேண்டும் புத்தகங்களைத்தமிழில் விரைவில் எழுதவேண்டும் என்றும் தீர்மானிக்கிறது"

இத்தீர்மானம் திரு. உமாமகேசுவரம் பிள்ளையால் பிரரேபிக்கப்பட்டு திரு. டி. வி. சுப்பிரமணியம் திராவிடன் ஆசிரியர், சாமி வேலாயுதம் பிள்ளை, என். பி. காளியப்பன் முதலியவர்களால் ஆதரித்து ஏகமனதாக நிறைவேறியது.

3. சென்னை பல் கலைக்கழகத்தார், அண்ணாமலைப்பல்கலைக்கழகத்தார்கள் ஏற்படுத்தியிருக்கும் வடமொழிச் சிரோன்மணி வகுப்புக்களுக்கு ஒப்பத்தமிழிலும் இலக்கணம், இலக்கியம், சகல மத சித்தாந்தம், வேதாந்தம் முதலிய பிரிவுகளை ஏற்படுத்துமாறு அவர்களை வேண்டுகின்றது. இத்தீர்மானத்தை மு. நடேசமுதலியார் பிரரேபிக்க திரு. நமச்சிவாய முதலியார், பண்டிதர் திருஞான சம்பந்தம் முதலியவர்கள் ஆமோதிக்க நிறைவேறியது.

4. தமிழ் மக்கள் முன்னேற்றத்திற்குப் பெண்கள் முன்னேற்றம் மிக அவசியமாதலால் இனித் தமிழ் நாட்டினர் தங்கள் பெண் மக்களுக்குத் தவறாமல் கல்வியளிக்கவேண்டுமென்று இம்மகாநாடு தீர்மானிக்கிறது" இத்திர்மானத்தைத் திருமதி இந்திராணி பால சுப்பிரமணியம் அவர்கள் பிரரேபிக்க திருமதிகள் குஞ்சிதம் குருசாமி, நீலாவதி ராமசுப்பிரமணியம் ஆகியவர்கள் ஆதரிக்க நிறைவேறியது.

5. தமிழ் நாட்டில் செல்வமிக்க கோயில்களிலும், மடங்களிலும் இருந்துவரும் மிகுந்த வருமானத்தை நூல் நிலையங்கள், வாசகசாலைகள், தமிழ்க்கலாசாலைகள் அமைத்தல் முதலிய தமிழ் வளர்ச்சிக்குப் பயன்படுத்தும்படி இம்மகாநாடு அவைகளின் தலைவர்களையும், அறநிலையப்பாதுகாப்புக்கழகத்தாரையும் கேட்டுக்கொள்ளுகிறது"

இத்தீர்மானம் பண்டிதமணி, கதிரேசன் செட்டியாரால் பிரரேபிக்கப்பட்டு, திரு. ஐ. குமாரசாமி பிள்ளை பி. ஏ. அவர்களால் ஆதரிக்கப்பட்டு நிறைவேறியது.

6. ஆங்கிலம் கட்டாய பாடமாக இருந்துவருகிற நிலையில் தமிழ் ஒழிந்த ஹிந்தி முதலிய புற மொழிகளையும் கட்டாயபாடமாக்குவதுமாணுக்கர்களுக்குப்பல வகை இன்னல்கள் விளைக்குமாதலால் அக்கொள்கையை இம்மகாநாடு கண்டிக்கிறது."

இத் தீர்மானத்தைத் திராவிடன் ஆசிரியர் திரு. டி. வி. சுப்பிரமணியம் அவர்கள் பிரரேபித்தும், பண்டிதர், சாமி சிதம்பரனார் அவர்கள் ஆமோதித்தும் பேசினார்கள். இதனைத் திரு. என். தண்டபாணி பிள்ளை அவர்களும், டாக்டர் டி. வி. எஸ். சாஸ்திரி அவர்களும் எதிர்த்துப் பேசினார்கள். பிறகு திருவாளர்களான பண்டிதர், திருஞானசம்மந்தம் எஸ். குருசாமி முதலியவர்கள் அசல் தீர்மானத்தை ஆதரித்தும் ஹிந்தியை ஒழிக்கவேண்டியதன் அவசியத்தை வற்புறுத்தியும் பேசினார்கள். கடைசியாகத் தீர்மானம் ஓட்டுக்கு விடப்பட்டு மிக அதிகமான ஓட்டுகளால் அசல் தீர்மானம் நிறைவேறியது.

7. பிறகு பள்ளிக்கூட பாட புத்தகங்கள் சம்மந்தமாக ஒரு தீர்மானம் நிறைவேறியது.

—— (ஒருநிருபர்)

## சாரதா சட்ட அமுல்.

### சம்பந்திகளுக்கு. 100 ரூ. அபராதம்.

ஆமதாபாத் ஜில்லா மாஜிஸ்திரேட் சாரதா சட்டத்திற்குவிரோதமாக தனது இருபெண்களுக்கு விவாகம் செய்வித்த சாமு என்னும் பெண்ணை விசாரித்து 100 ரூபாய் அபராதம் விதித்தார். மாப்பிள்ளையின் தந்தைக்கும் அவ்வாறே அபராதம் விதித்திருக்கிறார்.

## திருச்சி பார்ப்பனரல்லாத வாலிபர் சங்கப்பொதுக் கூட்டம்.

ஆகஸ்டு மாதம் 8-ந்தேதி திங்கட்கிழமை மாலை 6-மணிக்கு ஷை சங்கத்தின் ஆதரவின் கீழ் பொதுக் கூட்டமொன்று 1932-33-ம் வருஷத்திய நிர்வாக சபை சங்கத்தினர்களை தேர்ந்தெடுப்பதற்கு திராவிடன் ஆசிரியர் திரு. டி. வி. சுப்பிரமணியம் அவர்கள் தலைமையின் கீழ் கூடிற்று, தலைவர் தன் முன்னுரையில் திருச்சி வாலிபர் சங்கத்தின் தொண்டைப்பற்றியும், அதன் அங்கத்தினர்களின் ஊக்கம் முதலியவற்றைப் புகழ்ந்தும், இனி அவர்கள் முன் இருக்கும் கடமையைப்பற்றியும் நெடுநேரம் பேசினார். பின்னர், வரும் வருஷத்திற்கு தலைவர் உபதலைவர்கள் நிர்வாக சபை அங்கத்தினர்கள் தேர்ந்தெடுக்கப்பெற்றார்கள் பிறகு வந்தனோபசாரத்துடன் கூட்டம் கலைந்தது. (ஒரு நிருபர்)

## அகிலாண்டபுரம்.

கோவில்பட்டி தாலூகா அகிலாண்டபுரம் சுயமரியாதைச்சங்கத்தின் ஆதரவில் 23—7—32ந்தேதி மாலை 7-மணிக்கு ஒரு பொதுக்கூட்டம் கூட்டப்பெற்றது. கூட்டத்திற்கு சுற்றுக்கிராமங்களிலிருந்தும் 500க்கு மேற்பட்ட ஜனங்கள் வந்திருந்தனர் திரு. வ. பெரியண்ணன் அவர்கள் தலைமை வகித்தார். நாகை தோழர். டி. கோவிந்தராஜலு அவர்கள் "சுயமரியாதைக்கொள்கைகளும், பெண்கள் விடுதலையும்" என்பதுபற்றி நீண்ட சொற்பொழிவாற்றினார் என ஷை சங்க காரியதரிசி எழுதுகிறார்.

## மணவை ரெ. திருமலைசாமி

### போட்டியன்றித் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

திருச்சி ஜில்லா குளித்தலை தாலூகா போர்டின் தேர்தலுக்காக நேற்றுகாலை முதல் மாலை வரையில் நியமகச் சீட்டுகள் பதிவு செய்யப்பட்டன. இந்த தாலுகாவில் தேர்தல் போட்டி மிக்க பரபரப்புடனேயேயிருக்கிறது. கட்சி உணர்ச்சியோடு வேலை செய்து வருகிறார்கள். முகவனூர் சர்க்கிளுக்கு அபேக்ஷகராக நின்ற திருச்சி "நகரதூதன்" ஆசிரியர் தோழர் மணவை ரெ. திருமலைசாமி அவர்கள் போட்டியன்னியில் வெற்றி பெற்றார்.

(ஒரு நிருபர்.)


# நீங்கள் விரும்புவதென்ன?

## அறிவுள்ளவர்களாகவும், மூட நம்பிக்கையற்றவர்களாயும், வாழ விரும்புகிறீர்களா?

அர்த்தமற்ற ஓர்வார்த்தையை நம்பி ஏமாந்து, காலத்தை வீணாக்கி, செல்வத்தையழித்து சிதைந்து சோம்பேறிகளாய், வறியராய், வாழ விரும்புகிறீர்களா? இல்லையெனில் தோழர் ம. சிங்காரவேலு பி. ஏ., பி.எல்., எழுதிய "கடவுளும் பிரபஞ்சமும்" என்ற நூலை இன்றே வாங்கிபாருங்கள். உண்மைதெரியும், அஞ்ஞானம் நீங்கும், சந்தேகம்தீரும், கடவுளைப்பற்றிய அர்த்தமற்ற பயமும், சந்தேகமும் நீங்கும். சிறந்த ஆராய்ச்சி நூல் 80-பக்கங்களுக்கு மேற்கொண்டது விலை 4-அணா,

தனிப்பிரதி வேண்டுவோர் 5-அணா தபாற்பில்லைகள் அனுப்பவும்.

கிடைக்குமிடம்:— மானேஜர்,

குடி அரசு, ஈரோடு.

# ஸ்தலஸ்தாபனங்களுக்கு நிர்வாக உத்தியோகஸ்தர்கள்.

11—1—31 தேதி "குடி அரசு" தலையங்கம்.

இன்று நமது நாட்டில் நடைபெற்று வரும் ஸ்தலஸ்தாபன நிர்வாகங்கள் சிறிதாவது நாணய லட்சியத்தின் பேரிலோ, நாகரீக மக்களைக்கொண்ட நாடு, என்ற தத்துவத்தன்மையிலோ நடைபெறுவதாகச் சொல்லமுடியாதென்பதே நமதபிப்பிராயம்.

சில இடங்களில் நாகரீகமாயும் நாணயமாயும் நடக்கின்றது, நடந்தது, நடக்கலாம் என்பதையும் மறுக்கவில்லை. ஆனால் பெருவாரியாக 100 க்கு 75 க்கு மேலாக நடைபெறும் நிர்வாகங்கள் பெரிதும் மோசமானவைகளேயாகும். இதற்கு முழுப்பொருப்பும் அவ்விடத்திய மக்கள் பேரிலேயோ, அல்லது ஸ்தாபன அங்கத்தினர்கள் மீதிலேயோ, மாத்திரம் போட தகுந்தது அல்லவென்றும் சொல்லுவோம். இன்னமும் வெளிப்படையாய்ச் சொல்லவேண்டுமானால் அநாகரீகமும் ஒழுக்கக் குறைவானதுமான ஸ்தலதாபன நிர்வாகங்களுக்குப் பெரிதும் அந்த இலாக்கா மாற்றப்பட்ட இலாக்காவாக இருப்பதும், ஸ்தலஸ்தாபனங்களே மந்திரி பதவிக்கு படிகளாய் இருப்பதும், ஸ்தலஸ்தாபனங்களே மந்திரிகளைக் காப்பாற்றத்தக்க ஆதரவுகளாய் இருப்பதுமான ஒரு முறை முக்கிய காரணம் என்று சொல்லவேண்டியிருப்பதற்கு வருந்துகின்றோம். மற்றும் வெரும், வெரும் ஆள்கள் எல்லாம் சீர்திருத்தச்சட்டத்தின் கீழ் மாதம் 2000, 3000, 4000, 5000, கணக்காக பணம் சம்பாதிக்கத்தகுந்த உத்தியோகங்களை அடைந்து லாபமடைவதைப் பார்த்தே அதற்கு உதவிசெய்தவர்களு செய்யத்தகுந்தவர்கள், செய்பவர்களுக்குச் செய்பவர்கள் ஆகியவர்களும் அதுபோல் சம்பாதிக்க ஆசைப்படுகின்றார்கள். ஆனால் இவர்கள் அந்தப்படி அடைவதற்கு சட்டத்தின் சாக்கால் யாதொரு மார்க்கமும் இல்லாமலிருப்பதால் சட்டத்தின் சாக்கால் அதிகாரமிருக்கின்றவர்களின் தைரியத்தால் சட்டத்தையோ, நாணயத்தையோ, ஒழுக்கத்தையோ, லட்சியம் செய்யாமல் கொள்ளை அடிக்க வேண்டியவர்களாகவும் கொள்ளை அடிப்பவர்களை அனுமதிக்க வேண்டியவர்களாகவும் ஆகிவிடுகிறார்கள்.

ஆகவே இவ்வக்கிரமங்கள் இன்றைய சுயராஜியத் தினுடையவும், அரசியல் சீர்திருத்தத்தினுடையவும் பலன் என்றே சொல்லுவதோடு, பணக்காரர்களுக்கும் ஆங்கிலம் படித்தவர்களுக்குமே இவை போகக்கூடியதாகவும் இருப்பதால் ஏற்படுவைகளேயாகும். இவற்றை அடியோடு மாற்றி யோக்கியமான நிலைக்குக் கொண்டு வருவதனால் இன்றைய போக்கை பார்க்கும்போது சுலபமான காரியம் என்று நமக்குத்தோன்றவில்லை.

ஆயினும் எவ்வளவு தூரம் இவ்வித அக்கிரமங்களைக் குறைக்கமுயற்சிக்கலாமோ அவ்வளவு காரியத்தை தற்கால சாந்தியாகச் செய்யக்கூடியதைச்செய்யலாம் என்று நமக்குத் தோன்றுகின்றன. அதாவது நாம்சில வருஷமாய் சொல்லிக் கொண்டு வரும் ஒவ்வொரு ஸ்தலஸ்தாபனத்திற்கும் ஒவ்வொரு எக்ஸிகூட்டிவ் ஆபீசர் (நிர்வாக உத்தியோகஸ்தர்) என்பவரை அரசாங்கத்தார் நியமிப்பது என்பதேயாகும். இன்றும் சென்னை கார்ப்பரேஷன் முனிசிபல் கவுன்சில் இருக்கும் கமிஷனர் என்னும் உத்தியோகஸ்தர் சென்னை முனிசிபாலிடியின் நிர்வாக உத்தியோகஸ்தரேயாவார். அவருக்குத் தான் அம் முனிசிபாலிட்டி நிருவாகப்பொரும்பு ஒப்படைக்கப் பட்டிருக்கின்றது. உத்தியோக நியமனம், உத்தியோகஸ்த்தர்களின் மீது ஆதிக்கம் முதலியவைகளும், முக்கியமான வேலைகள், கன்ட்ராக்ட்டுகள் முதலியவைகள், கொடுக்கல் வாங்கல் ஆதிக்கம் முதலியவைகளும் அந்நிர்வாக உத்தியோகஸ்தரிடமே ஒப்படைக்கப்பட்டிருக்கின்றன. அதனால் அம் முனிசிபல் நிர்வாகம் யாதொரு தடங்களுக்கு இடமில்லாமலும், தயவுதாட்சண்யத்திற்கு இடமில்லாமலும் நடந்துவர அனுகூலமாயிருக்கின்றது. சென்னை முனிசிபாலிட்டி என்பது சுமார் 5 லட்சத்திற்கு மேல்பட்ட ஜனத்தொகை கொண்டதும், சுமார் 50 லட்சம் ரூபாய் வருமான முள்ளதும், முக்கியமானவர்களும், நாகரீகமும், படித்தவர்களும் பெருத்தவியாபாரிகளும், தேசியவாதிகளும் என்பவர்கள் இருக்கின்றதான இம்மாதிரி முக்கியபட்டண நிர்வாகத்தை-கவுன்சிலர்களின் ஆதிக்கத்திற்கு அடங்காத ஒரு தனிநபரிடம் நிர்வாகம் ஒப்பு விக்கப்பட்டு இருக்கும் போதும், அதனால் எல்லாம் சுயஆட்சித்தன்மைக்கு கேடு இல்லாமல் இருக்கும் போது மற்றபடியான வெளி இடங்களில் மாத்திரம் அதுபோல நிர்வாக உத்தியோகஸ்தர்களை நியமிப்பதில் எந்த விதத்தில் சுய ஆட்சி தத்துவம் கெட்டுப்போகும் என்பது நமக்கு விளங்கவில்லை. கவுன்சிலர்களோ, போர்டார்களோ செய்யும் தீர்மானத்தை தீர்மானத்தின் தத்துவப்படி நடத்துவிக்க ஒரு நிர்வாக அதிகாரி இருந்தால் அவரால் என்ன கெடுதி ஏற்படக்கூடும் என்பது விளங்க வில்லை.

ஓட்டர்கள் தயவைக்கோறும் கவுன்ஸிலர்களும், கவுன்சிலர்களின் தயவைக்கோறும் சேர்மெனும் நியாயமாய் நடந்து கொள்ள முடியாது என்பதற்கு ஆயிரம் உதாரணம் சொல்லலாம். எஜமானும் அவனது குமஸ்தாவும் ஒரு கவுன்சிலில் இருக்கக் கூடாதென்று எதற்காக சட்டம் செய்யப்பட்டிருக்கின்றது? ஒரு வாடகை வீட்டில் குடியிருக்கும் ஒரு நீதிபதி இடம் அந்த வீட்டுக்காரன்மீது வியாஜ்ஜியம் இருந்தால் வியாஜ்ஜியக்காரன்வீட்டில் குடியிருக்கும்காரணத்தைச்சொல்லி நீதியில் சந்தேகப்பட்டு வேறு கோர்ட்டுக்கு மாற்றிக் கொள்ளுகிறான். நியாதிபதியும் ஒரு கட்சிக்காரனும் ஒரேதாசி வைத்திருந்ததற்காக மற்ற கட்சிக்காரன் பயந்து கேசை மாற்றிக்கொண்டிருக்கிறான்.

இப்படி சாதாரண விஷயங்களில் எல்லாம் நியாயம் தவரும் என்கிற பயம் இயற்கையாயிருக்கும் போது, அநேக மக்களின் நன்மையை, அநேகரின் வரியை இம்மாதிரி பாமர மக்கள் தயவில் தொங்கிக் கொண்டிருக்க வேண்டியவர்களிடம் ஒப்புவிப்பது ஸ்தலஸ்தாபனத் தலைவர்களேயும், மற்ற பொது மக்களையும் வேண்டுமென்றே ஒழுக்க ஈனமாய் நடக்கும்படி தூண்டுவதே யாகும்.

அன்றியும் மாதம் 4000, 5000 ரூபாய் சம்பளம் வாங்கும் மந்திரிகள், நிர்வாகசபை மெம்பர்கள் முதலியவர்கள் இடம் இருந்த சில அதிகாரங்களை, அதாவது அந்தஅந்த இலாக்காவுக்கு உத்தியோகஸ்தர்களை நியமிக்கும் அதிகாரத்தை பிடுங்கி இப்போது ப்பப்ளிக் சர்விஸ் கமீஷனர்கள் என்பதாக சிலரை நியமித்து அவர்களிடம் ஒப்புவிக்கப்பட்டு விட்டது யாவருக்கும் தெரியும். இந்தப்படி ஏன் செய்யப்பட்டது? என்று பார்த்தால் மந்திரிகளிடம் இந்த அதிகாரங்கள் இருந்தால் அந்தக் காரியங்கள் நியாயமாய் நடைபெறாமல்போக அநேகமார்க்கங்கள் இருக்கின்றன என்றும், மந்திரிகள் பலர் தாக்ஷண்யத்துக்குக்கட்டுப்பட்டவர்களாகையால் பல கஷ்டங்கள் ஏற்படும் என்றும் நினைத்தே இந்தப்படி செய்யவேண்டி வந்தது. மனிதன் சுதந்திரத்தையும் அதிகாரத்தையும் விரும்புவது எவ்வளவு அவசியம், இயற்கையென்று கருதுகின்றோமோ அதுபோலவே சுதந்திரங்களும் அதிகாரங்களும் நீதியாய் நடைபெறுவதற்குப்பத்திரங்கள் செய்யவேண்டியதும் அவசியத்திலும் அவசியமாகும். சுருக்கமாக ஒரே ஒரு காரணம் சொல்லுகின்றோம். அதிலிருந்து மற்றதை ஒருவாறுயூகித்தறியலாம். அதாவது இன்று முனிசிபாலிட்டி, தாலூகா போர்டு முதலியவைகளுக்கு நிர்வாக அதிகாரி ஒருவர், கவுன்சிலர்களுடைய சலுகைக்கும் தயவுக்கும் தொங்கிக் கொண்டிருக்க வேண்டியவர் அல்லாதவராய் இருந்திருப்பானால் அந்த ஸ்தாபனங்களின் சிப்பந்திகள் இருப்பவர்களை விட 10 மடங்கு யோக்கியர்களாகவும் யோக்கிதாபக்ஷம் உடையவர்களாகவும் இன்று இருக்கும் சம்பளத்தைவிட பகுதி அளவு சம்பளத்தில் நியமிக்கப்பட்டவர்களாகவும் குறைந்தது 3ல் 1பாகம் குறைந்த எண்ணிக்கையுள்ள சிப்பந்திகளுடனும் அந்தந்த ஸ்தாபனங்கள் இன்றை நடப்பைவிட நல்ல நடப்பிலும் நடந்து கொண்டு வரும்படியானவைகளாயிருக்கும் என்பதில் நமக்கு அதிகமான நம்பிக்கையிருக்கிறது. மற்றபடி கன்ட்ராக்ட் விஷயத்திலும் ஸ்கீம்கள் விஷயத்திலும் அதிகமான நன்மைகளை வரிசெலுத்தும் ஜனங்களும் பிரதேசமும் அடைந்திருக்கக்கூடும் என்றும் சொல்லுவோம். அன்றியும் சில ஸ்தாபனங்களில் இருக்கும் நல்ல நாணயமும் பொருப்பும் நேர்மையும் உள்ள தலைவர்கள் கூட இன்று தங்கள் பொருப்புகளை, நிர்ணயமாய் நடத்த முடியாமல் இருப்பதற்கும் தாங்கள் பாமரமக்கள் தயவில் இருக்க வேண்டிய நிலைமையும், தாங்கள் அனுவசியமான தாட்சண்யத்தில் இருந்து தப்பித்துக் கொள்ள வேறொரு சாக்கு இல்லாமல் இருப்பதுமாகும். இந்தப்படி ஒரு நிர்வாக உத்தியேகஸ்த்தர் ஸ்தலஸ்தாபனங்களுக்கு நியமித்துவிட்டால் நாணயமாய் நடக்கும் தலைவர்களுக்கும் நல்லநிர்வாகத்தில்ஆசையிருக்கும் தலைவர்களுக்கும் எவ்வளவோ விதத்தில் அனுகூலமாயிருக்குமே தவிர அவர்களுககு நஷ்டம் ஒன்றுமே ஏற்பட்டுவிடாது. பல நல்ல தலைவர்களும் இந்தப்படி சொன்னதும் இந்தப்படி நியமிக்க ஆசைப்பட்டதும் நமக்கு நன்றாய் தெரியும், அன்றியும் இம்மாதிரி நிலைமை ஏற்பட்டுவிட்டால் நிர்வாகத் தலைவருக்கு நேரமில்லை, சாவகாசமில்லை என்கின்றகஷ்டம் நீங்கிவிடும். அதுமாத்திரமல்லாமல் தேர்தல்களுக்கு 1000, 2000, 5000, 10000, ரூபாய்கள் வீதம் செலவு செய்து ஓட்டர்களுக்கு பணம் கொடுத்து, கவுன்சிலர்களுக்கும் போர்டு மெம்பர்களுக்கும் பணம் கொடுத்து ஸ்தானம்பெற ஆசைப்படமாட்டார்கள், அதிலும் ஸ்தலஸ்தாபன புதுசட்டத்தின்படியும், வரப்போகும் புதிய சிலதிருத்தத்தின்படியும் கண்டிப்பாய் நிர்வாக உத்தியோகஸ்தர் இல்லாவிட்டால் தீவட்டிக் கொள்ளைஸ்தலமாக மாறிவிடும். ஆகவே அடுத்த கவுன்சிலில் ஸ்தலஸ்தாபனங்களுக்கு நிர்வாக உத்தியோகஸ்தர்களை நியமிக்க ஒரு தீர்மானம் கொண்டுவர வேண்டியது அவசியமென்று சட்டசபை அங்கத்தினர்களுக்கு ஞாபகமூட்டுகின்றோம். அந்த நிர்வாக அதிகாரியும் ஒரு டிப்டி கலெக்டர் உத்தியோகமுள்ளவராகவே இருக்க வேண்டும். ஏனெனில் அவர் கவுன்சிலர்களுக்கு பிடிக்கவில்லையானால் மறுபடியும்கவுரவமான உத்தியோகத்துக்கு போகக்கூடியவராய்

(தொடர்ச்சி 13ம் பக்கம் பார்க்க)

## அறிவிப்பு.

நமது பத்திரிகைக்கு வழக்கமாய் உபயோகித்து வந்தகலர் அட்டைக்காகிதம் முன் ஜாக்கிரதையாய் ஆர்டர் செய்திருந்தும் குறித்த காலத்தில் கிடைக்காதபடியால் இவ்வாரம் வெள்ளைக்காகிதமே போட நேர்ந்தது. வாசகர்கள் இவ்வாரம் மன்னிப்பார்களாக.

மானேஜர்.

# குடி அரசு.

ஈரோடு 1932 ஆகஸ்டுமீ 14-உ

## தமிழர் மகாநாடு.

—:0:—

திருச்சி ஜில்லா, துரையூரில் சென்ற 6, 7-ம் தேதி சனி, ஞாயிற்றுக் கிழமைகளில், தமிழ்ப்புலவர் மகாநாடு, தமிழ் மாணவர் மகாநாடு, தமிழர் மகாநாடு ஆகிய மகாநாடுகள் கூடிமுடிந்தன. இம்மகாநாடு சம்பந்தமான அறிக்கைகள் பத்திரிகைகளிலும், துண்டுப்பிரசுரங்களாகவும் வெளிவந்த காலத்தில், நாம் ஒருவகையில் மகிழ்ச்சியடைந்ததுண்டு. இதற்குக்காரணம், இம்மகாநாடு, தமிழர் சீர்திருத்தத்தையும், தமிழ்மொழி வளர்ச்சியையும் ஒருங்கேகருதி, செல்வர்கள், புலவர்கள், மாணவர்கள், சீர்திருத்தக்காரர்கள், அரசியல் வாதிகள் முதலிய எல்லாத்தமிழர்களும் ஒன்றுசேரும் ஒரு மகாநாடு என்று கருதியதேயாகும்.

நாம் இவ்வாறு அபிப்பிராயப்பட்டது தவறல்ல என்பதற்கு இம்மகாநாட்டு நிர்வாகிகளால் வெளியிடப்பட்டிருக்கும் 9-வது அறிக்கை ஒன்றே போதுமான சாட்சியாகும். அவ்வறிக்கையில்

1. "மக்களுள் வேறுபாடு பிறப்பினால் இல்லை என்பதை உணர்ந்து ஏழைமக்களை நம்மைப்போல் மேன்மையடைவிக்கவும்,

சுதந்தர தாகங்கொண்டுள்ள நம்முடைய நாட்டிற்குக்கல்வியை அடிப்படையாகக் கொண்டாலன்றி அஸ்திவாரமில்லாத வீடு போலாகுமாதலின், தாய் மொழியைத் தற்காலத்துக்கு ஏற்ற முறையில் பயில்வித்து நம்முடையநாட்டைச் சீர்திருத்தவும்,

2. சோம்பேறிகள் உண்டு உறங்குவதற்கு இடமாக அமைந்து கிடக்கின்ற பொதுச்சொத்துக்களை நம்முடைய ஏழை மக்களின் கைத்தொழில்கல்வி, முதலியவற்றிற்குப்பயன் படுத்த முயற்சிக்கவும்,

3. அறிவு, ஆற்றல், ஆண்மை கல்வி, செல்வம், கைத்தொழில் வாணிபம் முதலியவற்றில் ஏனைய நாடுகளினின்றும் நம்முடைய தமிழ் நாடு ஒரு சிறிதும் பின்னிட்டதன்றென்பதை மெய்ப்பிக்கவும்"

என்ற பகுதிகள் காணப்பட்டன. இப்பகுதிகளைப்படித்தவர் எவரேனும் இம்மகாநாடுகள் சீர்திருத்தங்கருதிய மகாநாடுகள் அன்றெனக்கருதமுடியுமா? என்று கேட்கிறோம்.

இத்தகைய அறிக்கைகளைக் கண்டபின்னர்தான் நம்மவர்களில் பலர், அதாவது சுயமரியாதைத் தோழர்களில் பலர், தமிழர்சமூக முன்னேற்றத்திற்கான தீர்மானங்கள் பலவற்றை எழுதி மகாநாட்டின் காரியதரிசிகளுக்கு அனுப்பினார்கள்.

ஆனால் மகாநாடு நடைபெறுவதற்கு இரண்டொரு தினங்களுக்கு முன்னர்தான் மகாநாட்டின் வரவேற்புத்தலைவராகிய திரு. த. வெ. உமாமகேஸ்வரம் பிள்ளையவர்கள் "தமிழர் மகாநாடு தமிழ் வளர்ச்சியை மட்டும் கருதிய மகாநாடேயன்றி சீர்திருத்த சம்பந்தமான 'மகாநாடும் அன்று சமய சம்பந்தமான மகாநாடு மன்று" என்று ஒரு அறிக்கையை வெளியிட்டிருந்தார்கள்.

தமது வரவேற்புப்பிரசங்கத்திலும் "தமிழ் வளர்ச்சி ஒன்றே இம்மகாநாட்டின் நோக்கமெனின் தமிழ்ப்புலவர் மகாநாடும், தமிழ் மாணவர் மகாநாடும் அதனைநிறைவேற்றக்கூடுமே, தமிழர் மகாநாடு இயற்றத்தகும் கருமம் என்னை? தமிழரில் பெரும்பான்மையோர் தமிழ்ப்புலவரும் அல்லர்; தமிழ் மாணவரும் அல்லர்; தமிழ்க்கலைகளைப் பரவச்செய்தற்குத் தமிழ்ப்புலவரும், தமிழ் மாணவர்களும் இன்றியமையாத கருவிகள் என்றாலும் மொழிப்பற்றுடைய தமிழர்கள், பொருளையும் தமது செல்வாக்கையும் வரையாது கொடுத்து உதவினாலன்றி தமிழ்ப்புலவர்களும் மாணவர்களும் யாதும் செய்ய இயலாது. இம்முத்திறத்தினரும் ஒன்று 'சேர்ந்து தமிழ் மொழி வளர்ச்சிக்குரிய வழிகளில் தொண்டாற்ற வேண்டுமெனக் கருதியே மூன்று மகாநாடுகளும் கூட்டப்பெற்றிருக்கின்றன.

இம்மகாநாடுகளின் உண்மை நோக்கங்கள் யாதெனத்தெரியாதபடியால் மக்களின் சீர்திருத்தத்தில் கருத்துடைய நண்பர்கள் செய்தித்தாள்களிலும், துண்டுத்தாள்களிலும் தாம் நிறைவேற்ற விரும்பும் முடிபுகளை வெளியிட்டு வருவதைப்பார்த்தேன்" என்று கூறியுள்ளார். இவ்வாறு இவர் அறிக்கை வெளியிட்டதும் வரவேற்புப்பிரசங்கத்திற்கூறியதும் இதற்குமுன் வெளியிட்ட அறிக்கைகளுக்கு முன்னுக்குப்பின் முரண்பட்ட கூற்று என்றுதான் நாம் கூறுவோம். மகாநாடு நடத்துவதாக முடிவு செய்த ஆரம்ப காலமுதல் மகாநாட்டுத்தேதிக்கு இரண்டு மூன்று தினங்களுக்கு முன் வரையிலும் "தமிழர் மகாநாடு தமிழரின் சீர்திருத்தத்திற்காகவும், தமிழ்மொழி வளர்ச்சிக்காகவும்கூட்டப்படுகிறது" என்று அறிக்கைமேல் அறிக்கைகள் வெளியிட்டவர்கள் மகாநாட்டு நிர்வாகிகளே ஒழிய வேறு யாரும் அல்லர். இவர்களுடைய அறிக்கைகளைக்கண்டுதான் மக்களின் சமூக சீர்திருத்தத்திற்குப் பாடுபடும் அன்பர்கள் பல முடிபுகளை எழுதியனுப்பினார்கள். திரு. உமா மகேசுவரம் பிள்ளையவர்கள் சில தினங்களுக்குமுன் சீர்திருத்தக்காரர்களின் தீர்மானங்களைக்கண்டு வெருண்டு வெளியிட்ட அறிக்கையையும், தமது வரவேற்புப்பிரசங்கத்தில் கூறிய செய்தியையும், மகாநாடு நடத்த ஆரம்பித்த காலத்திலேயே வெளியிட்டு மகாநாட்டு நிர்வாகிகளின் 9-வது அறிக்கைபோன்ற அறிக்கைகளையும் வெளியிடாமல் இருந்திருப்பார்களானால், யாரும் "செய்தித்தாள்களிலும், துண்டுத்தாள்களிலும் தாம் நிறைவேற்ற விரும்பும்" சீர்திருத்த சம்பந்தமான தீர்மானங்களை வெளியிட்டிருக்க மாட்டார்கள் என்பது உறுதி.

இனி, இவர்கள் முதலில் "தமிழர் சீர்திருத்தத்திற்காகவும், தமிழ்மொழி வளர்ச்சிக்காகவும் மகாநாடு கூட்டுகின்றோம்" என்று அறிக்கைகளை வெளியிட்டு விட்டுக் கடைசியாகச் சீர்திருத்தக்காரர்களின் தீர்மானங்களைக்கண்டபின் "சீர்திருத்த மகாநாடும் அன்று, சமயவளர்ச்சி மகாநாடும் அன்று; மொழிவளர்ச்சி ஒன்றையேகருதிய மகாநாடு" என்று தீர்மானித்ததற்குக் காரணம் என்னவென்பதைப்பற்றிச் சிறிது ஆராய்வோம்.

இம்மகாநாட்டைக் கூட்ட ஏற்பாடு செய்தவர்கள் அனைவரும் உண்மையான தமிழ்ப்பற்றும் தமிழ் வளர்ச்சியில் நோக்கமும் உடையவர்களாய் இருந்தாலும் "சைவசமய பக்தர்கள்" என்பதையாரும் அறிவார்கள்; இவர்கள் "சைவத்தை விட்டால் தமிழ் இல்லை; தமிழை விட்டால் சைவமில்லை" என்னும் கொள்கையினராய் இதுகாறும் இவை இரண்டையும் இருதோள்களிலும் தூக்கிப்போட்டுக்கொண்டு திரிந்தவர்கள் என்பதையும் யாரும் அறிவார்கள். இத்தகையவர்கள் சீர்திருத்தத்தின் பெயரால் கூட்டும் மகாநாடு, சீர்திருத்தத்தின் பெயராலும் தமிழின் பெயராலும் சைவத்தை வளர்க்க முயலும் மகாநாடாக இருக்கும் என்று கருதியே பல சீர்திருத்தக்காரர்கள் மகாநாட்டினருக்கு எச்சரிக்கை செய்யவும், பல தீர்மானங்களை அனுப்பவும் முன்வந்தார்கள். உண்மையிலேயே இந்த மகாநாட்டினர் சீர்திருத்தத்தில் ஆர்வமுடையவர்களாக இருந்தால் சீர்திருத்தக்காரர்களின் ! அறிக்கைகளைக்கண்டோ, தீர்மானங்களைக் கண்டோ பயப்பட்டிருக்கவேண்டியதில்லை. விவாதத்திற்கு இடமில்லாத சீர்திருத்தத் தீர்மானங்களையெல்லாம் மகாநாட்டில் நிறைவேற்றியிருக்கலாம். விவாதத்திற்கு இடமான விஷயங்களை மகாநாட்டினரும் கொண்டுவராமலிருந்தால், சீர்திருத்தக்காரர்களும் கொண்டுவராமலிருந்திருப்பார்கள். மகாநாடும் முதலில் எதற்கென்று கூட்டுவதாக அறிக்கைகள் வெளியிடப்பட்டனவோ அதற்கென்று கூட்டப்பட்டதாகவும், தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டதாகவும் முடிந்திருக்கும். இவ்வாறு செய்ய மகாநாட்டினர் முன்வராததிலிருந்தே, இவர்கள் நோக்கம் வேறு ஏன்பதும், கடைசியில் அதுநிறைவேற முடியாமல் போய்விட்டதென்பதும் விளங்கிவிட்டது.

கடைசியாக, மகாநாட்டில்மொழிசம்பந்தமான தீர்மானங்கள் மட்டுமே நிறைவேற்றப்படும்என்றமுடிவுக்கு வந்தபின்னும் அதைப்பற்றிச் சீர்திருத்தக்காரர்கள் ஒன்றும் ஆட்சேபிக்கவேயில்லை. ஆனால் மதசம்பந்தமில்லாமல், மொழி சம்பந்தமாக மாத்திரம் செய்யப்படும் தீர்மானங்களில் தாங்களும் பங்கெடுத்துக்கொள்வதாகவும் சீர்திருத்தக்காரர்கள் ஒப்புக்கொண்டனர்.

திவான்பகதூர் குமாரசாமி ரெட்டியார் கல்விமந்திரி அவர்கள் தலைமையில் இரண்டாவது நாள் கூடிய தமிழர் மகாநாட்டில் மாத்திரம் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. அத்தீர்மானங்கள் யாவும் தமிழ் மொழி சம்பந்தப்பட்டனவே யொழிய மதசம்பந்தமானவை அல்ல. சில தீர்மானங்

களோடு ஒட்டிக்கொண்டிருந்த மத சம்பந்தமான விஷயங்களும் சீர்திருத்தக்காரர்களால் திருத்தப்பட்டு அவைகள் ஏகமனதாக நிறைவேறின.

இவ்வாறு மகாநாடு வெற்றியுடன் முடியும் பொருட்டு, மதசம்பந்தமாகப் பிடிவாதஞ் செய்யாமல் விட்டுக்கொடுத்த மகாநாட்டு நிர்வாகிகளையும், மொழி சம்பந்தப்படாத மற்ற சீர்திருத்தத்தீர்மானங்களை வற்புறுத்தாமல் விட்டுக்கொடுத்த சீர்திருத்தக்காரர்களையும், எல்லோரும் ஏகமனதாக மொழி வளர்ச்சி கருதி மகாநாட்டை அமைதியோடு நடத்தியதற்காக இருபாலரையும் பாராட்டுகின்றோம். இவ்வாறு அமைதியோடு நடைபெறுவதற்கு முக்கியக்காரணமாயிருந்தவர், தமிழர் மகாநாட்டுக்குத் தலைமை வகித்த கல்வி மந்திரி, திவான்பகதூர், குமாரசாமி ரெட்டியார் அவர்கள் என்பதை யாரும் மறுக்க முடியாது.

மொழி வளர்ச்சி கருதி, பல வேறுபட்ட கொள்கையினரும் ஒன்று சேர்ந்து கூடிய மகாநாடு இது ஒன்றேயாகும். ஆதலால் இதில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வீண் போகாமல்—ஏட்டுச் சுரைக்காயாக இல்லாமல்—பலன் அளிக்குமென்று நம்புகின்றோம். கடைசியாக மற்றுஞ்சில விஷயங்களையும் கூறாமலிருக்கமுடியாமைக்காக உண்மையாகவேவருவருந்துகின்றோம். அவையாவன:-

மகாநாட்டின் நிர்வாகத்தினர்களில் சில சில்லரைப்பேர்வழிகள் நடந்து கொண்ட வெறுக்கத்தகுந்த முறைகளேயாகும். மகாநாட்டிற்குச் சீர்திருத்தக்காரர்களாகிய, சுயமரியாதைத்தோழர்களும் ஏராளமாக வந்திருந்தனர். இவ்வாறு வருவார்கள் என்ற விஷயமும் முன்னரே மகாநாட்டு நிர்வாகிகளுக்குந்தெரியும். அப்படியிருந்தும், சுயமரியாதைத் தோழர்களின் மனம் புண்படும்படியான வாக்கியங்கள் எழுதிய இரண்டொரு "போர்டு"கள் போடப்பட்டிருந்தன. இந்த போர்டுகளை எடுத்துவிடவேண்டுமென்று மகாநாட்டுத் தலைவர்களில் சிலர் சொல்லியும்கூட எடுக்கப்படவில்லை. கடைசியில் இவைகள் சுயமரியாதைக்காரர்களின் முயற்சியினாலேயே மகாநாட்டு நிர்வாகிகளுக்குத் தெரிவித்து எடுக்கப்பட்டன.

மகாநாடு தொடங்கும் பொழுதும், இடையிலும், சமய சம்பந்தமான பாடல்கள் பாடுவதுமுறையல்லவென்று தெரிவிக்கப்பட்டும், பிடிவாதமாக அப்பாடல்களையே பாட முயற்சித்தது வெறுக்கத்தகுந்த செயலாகுமென்றே கருதுகின்றோம். இப்பிடிவாதம் காரணமாகவே சிறிதுகுழப்பமும் ஏற்பட்டதாகத்தெரிகிறது.

முதல் நாள் கூட்டத்தில், சுயமரியாதைத்தோழர்களில் சிலர் மேடையின் மேல் உட்கார்ந்திருந்ததைக்கண்டு பொறுக்காமல் இரண்டாம்நாள் மேடையின் மேல் உள்ள நாற்காலிகளின் மேல் பெயர்கள் எழுதிய சீட்டுக்கள் கட்டப்பட்டிருந்தன. ஆனால் அப்பெயர்களில் மகாநாட்டிற்கு வராதவர்கள் பெயர்கள்கூட இருந்ததாகவும், பெயர்கள் எழுதிய சீட்டுப்படி யாரும் உட்காரவில்லையென்பதாகவும் தெரிகிறது. ஆகவே இச்செயல் சுயமரியாதைத் தோழர்கள் யாரும் மேடையின் மேல் உட்காரக்கூடாது என்பதற்காகச் செய்யப்பட்டது என்பது நன்றாக விளங்கிவிட்டது.

இன்னும் சுயமரியாதைக்காரர்கள் கலகம் பண்ணினால் அவர்களை அடிப்பதற்காக ஆட்கள்தயாரித்து வைத்திருந்ததாகவும் நம்பிக்கையான இடங்களிலிருந்து கேள்வியுற்றோம்.

மிகவும் கேவலமாக இருந்தமற்றொரு விஷயம் குறிப்பிடத்தகுந்ததாகும். போலீஸ்காரர்களைப் பிரம்புடன் கொண்டு வந்து வைத்திருந்ததும், அவர்கள் சாதாரணமாக வெளியே செல்ல எழுந்திருப்போரைக்கூட பிரம்பைக்காட்டி, "உட்காரு, வெளியேபோ" என்று ஆர்ப்பாட்டம் பண்ணியதும் மிகவும் வெட்கக்கேடான செய்கையாகும். இவ்வளவும் சுயமரியாதைத் தோழர்களுக்குப் பயந்து செய்த காரியம் என்றே சொல்லப்படுகின்றது. இது உண்மையானால் படித்த பண்டிதக்கூட்டத்தாரின் பயங்கொள்ளித்தனத்திற்கும், அறியாமைக்கும் இதைவிட, வேறு அத்தாட்சி வேண்டியதில்லை.

சுயமரியாதைக்காரர்கள் கலகக்காரர்கள் அல்லர் என்பதையும், "போலீஸ்" முதலிய எந்த உதவியும் இல்லாமல் 5000, 10000, மக்கள் கூடியிருக்கும் மகாநாடுகள் பலவற்றை அமைதியுடன் நடத்தியவர்கள் நடத்துகிறவர்கள் என்பதையும், நியாயத்தின் பொருட்டு வாதிடஎந்தப் போலீசுக்கும், அடியாட்களுக்கும் அஞ்சமாட்டார்கள் என்பதையும் மகாநாட்டு நிர்வாகிகள் உணராமல் போனதற்காக உண்மையில் நாம் பரிதாபப்படுகின்றோம். தமிழ் மொழி சம்பந்தமாகக்கூடிய ஒரு மகாநாட்டைத் தமிழர்கள் போலீஸ் உதவியைக் கொண்டு நடத்தினார்கள் என்றால் இதைவிட வேறு என்ன அவமானம் வேண்டும்?

இன்னும் சுயமரியாதைத்தோழர்கள் விஷயத்தில் மகாநாட்டு நிர்வாகிகளில் குறுகிய நோக்கமுடைய சில சில்லரைப் பேர்வழிகள் காட்டிய மனோபாவங்களை வெளியிட வெட்கப்படுகிறோம்.

இக்காரியங்களையெல்லாம் வெளியிடுவதன் மூலம் யாரையும், அவமானப் படுத்தவேண்டுமென்றோ, மனம் நோகச் செய்யவேண்டுமென்றோ நாம் கூறவில்லை. இனிமேலாவது, இவர்கள் மகாநாடுகள் கூட்டும் காலங்களில் இவ்வாறு கேவலபுத்தியுடன் நடந்துகொள்ளுவோரைமகாநாட்டுநிர்வாகங்களில் சேர்த்துக்கொள்ளாமலிருக்கும் பொருட்டே கூறினோம்.

கடைசியாக, சுயமரியாதைத் தோழர்கள் மகாநாட்டில் கலந்து கொண்டிராவிட்டால் இந்தத்தமிழர் மகாநாடு பெரும்பாலும் சைவசித்தாந்த மகாநாடாகவே முடிந்திருக்கக்கூடும் என்பதில் ஐயமில்லை. சுயமரியாதைத் தோழர்கள் கலந்து கொண்டதனால்தான் இது உண்மையான தமிழ்மொழி வளர்ச்சி மகாநாடாக முடிந்தது என்பது குறிப்பிடத்தகுந்ததாகும்.

இச்சமயத்தில், தமிழ்ப்பண்டிதர்களுக்கும், தமிழபிமானிகளுக்கும் சில வார்த்தைகள் கூற விரும்புகிறோம். சுயமரியாதைத்தோழர்கள், தமிழ் மொழி வளர்ச்சி விஷயத்தில் எந்த வகையிலும், மற்ற பண்டிதர்களுக்கும், தமிழ் அபிமானிகளுக்கும் பிற்பட்டவர்கள் அல்லர் என்று தெரிவிக்கின்றோம். இதற்கு, சுயமரியாதைத் தோழர்கள் தமிழர் மகாநாட்டிற் கலந்து கொண்டதும், தமிழ் வளர்ச்சிக்கான தீர்மானங்களிலும்முக்கிய பங்கு எடுத்துக்கொண்டதுமே உதாரணமாகும். உண்மையில் "ஹிந்தி" மொழியைக்கண்டிப்பதாக மகாநாட்டில் மெஜாரிட்டியினரால் நிறைவேற்றப்பட்ட தீர்மானம், சுயமரியாதைத் தோழர்கள் இல்லாவிட்டால் தோற்றே போயிருக்கும். "ஹிந்தி" கண்டனத் தீர்மானத்தைச் சிலர் எதிர்த்தபொழுது, அவ்வெதிர்ப்புக்குச் சரியான பதில் இறுத்தி "ஹிந்தி" கூடாது என்பதை பெரிய "மெஜாரிட்டி"யாரை ஒப்புக்கொள்ளச் செய்தவர்கள் சுயமரியாதைத் தோழர்களேயாவார்கள் என்பதை நாம் கூறவேண்டியதில்லை.

ஆனால் மற்ற பண்டிதர்களில் பலர் விரும்புவது போல, புராணங்களை எழுதுவதும், அவைகளைப் பற்றிப் பேசுவதும், தேவாரா, திருவாசகங்களைப் பாடுவதும் தான் தமிழ் வளர்ச்சி என்று சுயமரியாதைத் தோழர்கள் கருதுவதில்லை. மக்களுடைய வாழ்க்கைக்குப் பயன்படக்கூடியதும், அறிவையும், திறமையும், தைரியத்தையும் உண்டாக்கக்கூடியதும் ஆகிய சிறந்த கலைகளை யெல்லாம் தமிழில் எழுதிப் பரவச் செய்வதன் மூலம், மக்களுடைய அறிவையும், தமிழ் மொழியையும் செம்மை செய்வதே தமிழ் வளர்ச்சியென்று கருதியிருப்பவர்கள் என்று கூறுகிறோம். இதுதான் உண்மையான தமிழ் வளர்ச்சிக்கான வழியுமாகும். ஆகையினால் இனியேனும், "மதம்" என்றும், சமய உணர்ச்சி" என்றும் "தெய்வீகப்பாடல்கள்" என்று சொல்லுகின்ற பல்லவிகளை விட்டுவிட்டு உண்மையான தமிழ் வளர்ச்சிக்காக உழைக்கவேண்டுகிறோம். இவ்வகைக்கு சுயமரியாதைத்தோழர்களும், மற்றவர்களும் துணை நிற்பார்கள் என்பதில் ஐயமில்லை என்று கடைசியாகத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

## கல்வி மந்திரி பிரசங்கம்.

—:0:—

சென்ற 4-8-32ல் நடந்த சென்னைச் சர்வகலாசாலைப் பட்டமளிப்பு விழாவின் போது நமது மாகாண கல்விமந்திரி திவான் பகதூர் எஸ். குமாரசாமி ரெட்டியார் அவர்கள் பட்டதாரிகளுக்குச்செய்த பிரசங்கம் மிகவும் சிறந்ததொன்றாகும். அவர் தற்காலக்கல்வியில் உள்ள குற்றங்களையும், கல்வியின் லட்சியம் இன்னதென்பதையும், கல்வி எம்முறையில் போதிக்கப்பட வேண்டுமென்பதையும், எத்தகைய கல்வி அவசியமென்பதையும், கற்றவர்கள் செய்யவேண்டிய வேலையையும் தெள்ளத் தெளிய விளக்கிக் காட்டியிருக்கிறார்.

கல்வியானது உலக வாழ்க்கைக்குப்பயன் படக்கூடியதாகயிருக்க வேண்டும். வெறும் வித்தையை மாத்திரம் கற்றுக் கொடுப்பதனால் தேசமக்களின் துன்பத்தைப் போக்கமுடியாது. ஆகையால் தொழில் கல்வியை வளர்ப்பதற்கு முயற்சி செய்யவேண்டும் என்னும் அபிப்பிராயத்தை வெளியிட்டிருக்கிறார்.

அன்றியும் தற்காலத்தில் உயர்தரக்கல்விக்கு அதிகமாகச் செலவு செய்வதைக்காட்டிலும், ஆரம்பக் கல்வியின் பொருட்டு அதிககவு

னம் செலுத்தவேண்டும்; ஆரம்பக் கல்வியின் மூலம் தேசமக்கள் எல்லோரையும் அறிவுடையராக்க முயலவேண்டும் என்னும் சிறந்த அபிப்பிராயமும் கல்விமந்திரியின் பிரசங்கத்தில் காணப்படுகிறது.

நமது நாட்டு மாணவர்களுக்குத்தற்சமயம் எல்லாவிஷயங்களையும் ஆங்கிலத்தின் மூலமே கற்பிக்கப்படுவதால் விஷயங்களைத் தெரிந்துகொள்ளுவதற்கு அதிக நாளாகிறது. ஆங்கில பாஷையைத் தவிர மற்ற விஷயங்களைத் தாய்மொழியின் மூலம் கற்பிக்கப்பட்டால் குறைந்த காலத்திலும், சுருங்கிய செலவிலும் கற்கக்கூடும். ஆகையால் இவ்வாறு கற்பிப்பதற்கு முயற்சி செய்ய வேண்டும் என்று சில காலமாகக் கல்வித் துறையில் உழைத்து வருவோர் சிலர் பிரயாசப்பட்டு வருகின்றனர். நமது கல்வி மந்திரியவர்கள் இவ்வபிப்பிராயத்தை வற்புறுத்தி, தாய்மொழிக் கல்வியின் அவசியத்தை எடுத்துக்காட்டிப் பேசியிருப்பதுகவனிக்கத்தக்கதாகும்.

தற்பொழுது தேசியவாதிகளில் பலர், ஆங்கிலபாஷையின் மீதும் வெறுப்புக் கொண்டு, அதற்குப் பதிலாக "ஹிந்தி" பாஷையை இந்தியாவிற்குப் பொதுப் பாஷையாக்க வேண்டும் என்று முயற்சி செய்து வருகின்றனர். வடநாட்டார், தங்கள் பாஷையின்மேல் உள்ள அபிமானம் காரணமாக ஆரம்பித்த இம்முயற்சியைத் தென்னாட்டில் உள்ளதமிழ்மொழியின்மேல் வெறுப்புக் கொண்ட பார்ப்பனர்களும் ஒப்புக்கொண்டு இதன்பொருட்டுப் பெரும் முயற்சிசெய்து வருகிறார்கள். ஆனால் நாம் ஆதிமுதல் "ஹிந்தி" பொதுமொழியாவதற்குத் தகுதியுடையதன்று என்று சொல்லிவருகிறோம். "ஹிந்தி" மொழியில்விஞ்ஞானக்கலைகள் ஒன்றேனும் இல்லையென்பதையும், இலக்கியங்கள் இல்லையென்பதையும் தமிழர்க்கு கஷ்டமான மொழி என்பதையும், ஆங்கிலத்தை அன்னிய மொழியென்றால் ஹிந்தியும் அன்னிய மொழிதான்என்பதையும், ஹிந்தியைப் பொதுமொழியாக்க வேண்டுமென்றால் முஸ்லிம்கள்உருதுவைப்பொது மொழியாக்க வேண்டுமென்கிறார்களாதலால் இதன்மூலம் இந்துமுஸ்லிம் கலகம் நேரும் என்பதையும் அறிந்தவர்கள் நாம் சொல்லுவதை ஒப்புக்கொள்ளாமல் இருக்கமாட்டார்களென்பது நிச்சயம். ஆதலால் தற்காலத்தில் அதிகமான மக்களால் பேசப்படுவதும்,உலகமுழுவதும் பரவியிருப்பதும், எல்லாக்கலைகளும் நிரம்பியிருப்பதும் ஆகிய ஆங்கிலத்தையே பொதுமொழியாக வைக்கவேண்டும் என்றும் கூறி வருகின்றோம். கல்வி மந்திரியவர்களும் ஆங்கிலமே பொதுமொழியாக இருக்கவேண்டும் என்று தமது பிரசங்கத்தில் குறிப்பிட்டிருப்பதை நாம் பாராட்டுகிறோம்.

கல்வியானது, கற்றவர்களுக்குப் பகுத்தறிவையுண்டாக்கக் கூடியதாகவும், பழய குருட்டுப் பழக்க வழக்கங்களைப் போக்கக் கூடிய தாகவும் இருக்கவேண்டுமென்றும், இதற்கேற்ற முறையில் கல்வியைத்திருத்தி அமைக்க வேண்டும் என்றும் நாம் கூறிவருகிறோம். இவ்வபிப்பிராயமும்கல்வி மந்திரியின் பிரசங்கத்தில் காணப்படுகின்றது.

கற்றவர்கள் உத்தியோகத்திற்கு என்று கற்காமல் அறிவுக்கென்றும், நாட்டின் நன்மைக்கென்றும் கற்று, தேசமக்களைச் சீர்திருத்த வேண்டும் என்னும் அபிப்பிராயத்தையும் வெளியிட்டிருக்கிறார்கள். கற்றவர்களெல்லாம், கிராமப் புனருத்தாரண வேலையில் ஈடுபட்டு கிராமாந்தரங்களையும், அங்குள்ள மக்களையும் சீர்திருத்த முயலவேண்டும் என்றும், இதுவே தேசிய வேலையும், தேசிய நோக்கமும் ஆகும் என்றும் குறிப்பிட்டிருப்பது நமது நாட்டுக் கல்விமான்களால் கவனிக்கக்கூடியதொன்றாகும்.

தற்பொழுது கற்றவர்கூட்டம், தேசமக்களின் முன்னேற்றத்தில் சிறிதும் கவலையில்லாமல் தங்கள் சுயநலம் ஒன்றையேகருதி உத்தியோகம் ஒன்றையே நாடித்திரிந்து கொண்டிருக்கிறது. இதற்குக் காரணம் கல்விமுறை என்பதில் ஐயமில்லை. ஆகையால், இனியாவது கல்விமுறை சீர்திருத்தப்பட்டு நாட்டின் முன்னேற்றத்திற்கு உபயோகத்திற்கு ஏற்ற முறையில் கற்பிக்கப்படுவதற்கு முயற்சிசெய்யுமாறு வேண்டுகிறோம். இறுதியாக இத்தகைய சிறந்த அபிப்பிராயங்களைத் தைரியத்தோடு வெளியிட்ட திரு, ரெட்டியார் அவர்களைப்பாராட்டுகிறோம்.

---

## பர்னார்ட்ஷா— மேத்தா.

நமது இயக்கப் பிரசாரத்தைக் கண்டு நமது நாட்டு வைதீகர்களும் பண்டிதர்களும் நடுநடுங்குகிறார்கள்; நமது இயக்கக் கொள்கைகள் எல்லா மக்கள் மனத்திலும் பதிந்துவிட்டால் தங்கள் சுயநலத்திற்குக் காரணமாக இருக்கும் வைதிகம் அழிந்துவிடும் என்று அஞ்சுகிறார்கள். உண்மையில் இவ்வாறு பயப்படுவதற்குக் காரணம் பகுத்தறிவில்லாமையும், பழைய சாஸ்திரங்களிலும் பழக்க வழக்கங்களிலும் வீண் அபிமானம் கொண்டிருப்பதுமேயாகும். அபிமானத்தைப்போல அறிவைத்தடைப்படுத்தும் கருவி உலகத்தில் வேறு ஒன்றும் இல்லை. எவ்வளவுதான் படித்தவர்கள் மூட நம்பிக்கைகளை ஒழிக்க அஞ்சி அவைகளைக் காப்பாற்ற முயன்றாலும் காலம் சும்மா விடுவதில்லை. உலகம் புகழும் பரந்த அறிவினர்கள் உள்ளத்தில் உண்மை உணர்ச்சி தோன்றி வெளிப்பட்டு விடுகின்றது.

உலகத்தில் உள்ள கவிஞர்களில் மிகச் சிறந்த-பரந்த-அறிவினராகிய "ஜியார்ஜ் பர்னாட்ஷா" என்பவரைப்பற்றி அறியாதார் எவரும் இலர். அவர் கூறுவது முழுவதும் நமது இயக்கக் கொள்கைக்கு ஆதரவளிக்கக்கூடிய மொழிகளே யாகும். அவர் எழுதிய நூல்களைக் கற்றோர் அனைவரும் அவருடைய அபிப்பிராயங்களை நன்கறிவார்கள். அவர் இங்கிலாந்தில் சமீபத்தில் ஆகாசவசனிமூலம் ஒரு பிரசங்கம் செய்தார். அப்பிரசங்கத்தின் சுருக்கம் வருமாறு:-

"நான் மிகவும் பெரிய மனிதனென்று நீங்கள் நினைக்கிறீர்கள். பிரிட்டிஷ் ஆகாயவசனிக் கார்ப்பொரேஷனும் இவ்வாறே கருதுகிறது. நானும் ஒரு சாதாரண தாடியுள்ள கிழவனைப் போலவே இருக்கிறேன் என்பதை என் படத்தின் மூலம் அறிந்திருப்பீர்கள். நீங்கள், நான் பெரிய மனிதனானது எப்படி என்னும் ரகசியத்தை அறிய ஆசைப்படுவீர்கள்

உண்மையில் பெரிய மனுஷனென்றோ, பெரிய மனுஷியென்றோ யாரும் இல்லை. மக்கள் கொண்டுள்ள பலவாறான மூடநம்பிக்கைகளில் இதுவும் ஒன்றாகும்.

குழந்தைகளால் பெற்றோர்களுக்குப் பெரும் பொருப்பு உண்டாகிறது என்று பலர் கூறுகிறார்கள். இப்படிக் கூறுவது சிறிதும் பொருளற்ற வார்த்தையாகும். குழந்தைகளால் ஏற்படும் பெரும் செலவைப் பெற்றோர்கள் ஏற்றுக்கொள்ளக்கூடாது.

இறந்துபோனவர்களுக்குப்பதிலாகப் புதிய மக்களை உண்டாக்க வேண்டிய பொறுப்பு அரசாங்கத்தைச் சேர்ந்ததாகும். இதன் பொருட்டு அரசாங்கத்தார் பெற்றோர்களுக்குத் தாராளமாகப் பண உதவிசெய்யவேண்டும்.

இறந்துபோனவர்களுக்குப்பதிலாகப் புதிய மக்களை உண்டாக்குவதனால் ஏற்படும் செலவு முழுவதும் இப்பொழுது பெற்றோர்களையே சேருகிறது ஆனால் பிரம்மச்சாரிகளுக்கு இவ்விஷயத்தில் எவ்வகையான செலவுமில்லை.

ஆகையால் பெண்களுக்குக் கொஞ்சமேனும் புத்தி இருக்குமாயின், அரசாங்கத்தார் குழந்தைகளைப் பெறுவோர்களுக்குத் தக்க ஒத்தாசை செய்வதாக உறுதி கூறாமலிருக்கும்வரையிலும், தாங்களும் பிரம்மச்சரியத்தை மேற்கொண்டு "குழந்தைகளைப் பெற முடியாது" என்று கண்டிப்பாக அரசாங்கத்தாருக்கு எச்சரிக்கை செய்துவிடவேண்டும்.

இதுதான் திரு. பர்னார்ட்ஷா அவர்களின் பிரசங்கமாகும். இதன் பொதுக்கருத்து, நாட்டின் ஜனப் பெருக்கத்தைக் காப்பாற்ற வேண்டிய கடமையும், மக்கள் தொகையை அதிகப்படுத்தவேண்டிய கடமையும் அரசாங்கத்தைச் சார்ந்ததுஎன்பதாகும். இத்தகைய சிறந்த அரசாங்கம்ஏற்படவேண்டுமானால் முதலில் மக்களிடம் இருக்கும் மூட நம்பிக்கைகள் யாவும் ஒழியவேண்டும் என்றுதான் நாம் கூறுகிறோம்.

அடுத்தபடியாக தொழிலாளர் தலைவர்களில் ஒருவரான திரு. யமுனாதாஸ் மேத்தா அவர்கள் சென்ற 6—8—32 வெள்ளிக்கிழமை மாலை பம்பாய் பிரவொட்ஸ்கி விடுதியில் மாணவர் கூட்டத்தில் சமதர்மத்தைப்பற்றி ஒரு பிரசங்கம் செய்துள்ளார். அப்பிரசங்கம் வருமாறு,-

"மக்களின் சுபாவமே சமதர்மத்தை நாடி நிற்கின்றது. சமதர்மத்தின் தத்துவம் ஜீவகாருண்யமுடையது. இக் கொள்கை மற்றய நாடுகளைவிட இந்தியாவிற்கு மிகவும் அவசியமாகும். ஆகையால் இந்த தத்துவத்தை நன்றாக உணர்ந்து ஆதிக்கத்தையும் வேற்றுமையையும் ஒழிக்கும்படி மாணவர்களை வேண்டிக்கொள்ளுகிறேன்.

பண்டைக்காலத்தில் இருந்த மதத் தலைவர்களும், அறிஞர்களும், மக்களுடைய வறுமைத் துன்பத்தைப் போக்கும்பொருட்டு, "தர்மம் புரியவேண்டியது அவசியம்" என்று உபதேசம் புரிவதை வழக்கமாகக் கொண்டிருந்தார்கள். ஜனசமூகம் தற்பொழுது எந்த அடிப்படையின்மேல் இருக்கிறதோ அந்த அடிப்படையை அடியோடு மாற்றி வேறு விதமாக அமைத்துவிட்டால் தரு

ம்ம் கொடுப்பதும், தருமம் வாங்குவதும் [பிச்சை எடுப்பது] ஒழிந்துபோகும் என்பதே சமதர்மவாதிகளின் அபிப்பிராயமாகும்.

இப்பொழுதுள்ள ஜனசமூக அமைப்பின்படி மக்கள் வாழ்க்கைக்கு வேண்டிய அவசியமான சாதனங்கள் எல்லாம் சில மனிதர்களின் ஆதிக்கத்தில் உள்ளன. உணவுப் பொருள்களைத்தரும் விளைநிலங்கள் ஜனசமூகத்திற்குப் பொதுவாக இல்லை. அவைகள் சிலருடைய ஆதிக்கத்தில் மட்டுமே இருக்கின்றன. நிலம் வேண்டுமானால் நிலச் சுவான்தார்களிடம் பணம் கொடுத்து வாங்கவேண்டியிருக்கிறது.

யாருக்கும் முதலே இருக்கக் கூடாதென்று சமதர்மவாதி கூறவில்லை, முதல் இல்லாவிட்டால் எக்காரியமும் நடைபெறாது. ஆனால் ஒரு அளவுக்குமேல் தனிப்பட்ட சொத்து இருப்பதற்கு இடமில்லை. எல்லோரையும் ஒரே அளவுக்குக் கட்டுப்பாடு செய்வதும் கஷ்டமானதே, ஆனால் லட்சாதிபதியின் மகனுக்கும், தோட்டியின் மகனுக்கும் உள்ள வேற்றுமையை ஒழிக்க வேண்டுமென்பதே சமதர்மவாதியின் கொள்கையாகும், பகுத்தறிவைத் துணையாகக். கொண்டால்தான் இத்தகைய சமதர்மம் ஏற்படும்படி செய்யலாம்.

என்பது திரு. மேத்தா அவர்களின் பிரசங்கமாகும். இதிலிருந்து எந்தக்கொள்கை பரவவேண்டுமானாலும், அது ஐக்கிய ஆட்சிக்கொள்கையானாலும், பூரண சுயேச்சைக் கொள்கையானாலும், சமதர்மக் கொள்கையானாலும், பொது உடமைக் கொள்கையானாலும் முதலில் மக்களிடமுள்ள மூட நம்பிக்கைகள் அழியவேண்டும். அதன்பின்தான் ஜனசமூகத்திற்கு நன்மையை அளிக்கத் தகுந்த எந்த அரசியல் அமைப்பையும் ஏற்படுத்த முடியும் என்பதில் ஐயமில்லை. இத்தகைய அபிப்பிராயத்தையே அறிவுடையோர் அனைவரும் வெளியிட்டு வருவதை மேற்கூறிய அபிப்பிராயங்களைக்கொண்டு உணரலாம்.

உலகம் இவ்வாறு விரைந்து சமதர்ம உலகத்திற்குச் சென்றுகொண்டிருப்பதை அறியாத கிணற்றுத் தவளைகள் சுயமரியாதை இயக்கத்தைப் பழிக்கத்தொடங்குகிறார்கள். அவ்வியக்கத்தினால் உண்டாகும் நன்மையை உணராமல், "கோயிலை இடிக்கச்சொல்லுகிறது; குளத்தைத் தூர்க்கச்சொல்லுகிறது, மதத்தை அழிக்கச் சொல்லுகிறது; சாஸ்திரங்களைக் கொழுத்தச் சொல்லுகிறது; ஜாதியைப் போக்கச் சொல்லுகிறது என்று கூறி பாமர மக்களை அதற்கு எதிராகத் திருப்ப முயற்சிக்கிறார்கள். ஆனால் மேற்கூறியவாறு இவர்கள் சுயமரியாதை இயக்கத்தின்மேல் பழி சுமத்துவதாகக்கூறுவதாகக் கருதிக்கொண்டுசெய்யும் பிரச்சாரமே உண்மையான சுயமரியாதைப் பிரச்சாரமாகும். அறிவுடையவர்கள் இதை யோசித்துப் பார்த்தால், அதாவது சுயமரியாதை இயக்கம் இவ்வாறு கூறுவதற்குக் காரணம் என்னவென்பதை ஆராய்ந்து பார்த்தால் உண்மையை அறிந்துகொள்ளுவார்கள் என்பது நிச்சயம்

---

## மரணம்.

ஈரோடு முனிசிபல் கவுன்சிலர் உயர்திரு ஆர். எஸ். விஸ்வாஸம் அவர்கள் 12—8—32 தேதி வெள்ளிக்கிழமை பகல் 11 மணிக்கு தமது இல்லத்தில் திடீரென மரணமடைந்தார். காலஞ்சென்ற திரு விஸ்வாஸம் அவர்கள் பொது மக்கட் பால் கொண்டிருந்த பற்றுக்கு எல்லை கூற எவராலும் இயலாது. அவரது வாழ்நாள் பூராவும் மக்கள் - முன்னேற்றத்திலும் பொது ஜன சேவையிலும் ஈடுபட்டிருந்தார். பேசுவதில் திறமை வாய்ந்தவரும் பெயருக்கேற்ற குணம் படைத்தவர் என்பதும் மிகையாகாது அவரது மரணத்தின் அறிகுறியாக முனிசிபல் ஆபீசும், பாடசாலைகளும் மூடப்பட்டன. (ஒரு நிருபர்)

---

## சுயமரியாதை வாலிபர் சங்கம் கும்பகோணம்.

இச் சங்கத்தின் ஜெனரல்பாடி மீட்டிங்கு 7—8—32 ஞாயிற்றுக்கிழமை மாலை 5-மணிக்கு கும்பகோணம் ரயிலடிதெரு ஜெணபக விலாஸ் தோட்டத்திலுள்ள சங்கம் ஆபீஸ் கட்டிடத்தில் தோழர் ஜி- நாராயணசாமி அவர்களின் தலைமையில் நடைபெற்றது. அங்கத்தினர்களில் அநேகரும் பொது ஜனங்களிற் பலருமாக சுமார் 200 பெயர்கள் வரையில் கூடியிருந்தார்கள்.

திராவிடன் பத்திரிகையை ஷை சங்கத்தின் சார்பாக இவ்வூருக்குத் தருவித்து விற்பனை செய்து அப்பத்திரிகையை அபிவிர்த்தி செய்வதென்றும், மகா மகத்தைப்பற்றி வெளியீடுகளும், துண்டுப் பிரசுரங்களும் வெளியிட்டுப் பொது ஜனங்களின் மனப்பான்மையை மாற்றி சீர்திருத்த முயற்சி செய்வதென்றும் இன்னும் ஷை சங்கத்தின் முன்னேற்ற சம்மந்தமான அநேக காரியங்களை யோசித்து முடிவு செய்யப்பட்டது என காரியதரிசி எழுதுகிறார்.

(9-ம் பக்கத் தொடர்ச்சி)

இருக்கவேண்டும் இல்லாவிட்டால் அவரால் தன் மனசாக்ஷிப்படி நடக்க முடியாமல் போய்விடும். ஆகவே சுதந்திரத்துடன் நியாயமாய் நடக்கத் தகுதி உள்ளவர்களைப் பார்த்து நியமிக்க வேண்டியது அவசியமாகின்றது.

நிற்க இதைப்பற்றி யாராவது பரிகாசம் செய்வார்களானால் அவர்களுக்கு ஒரேஒரு பதில் சொல்லி விடும்படியும் குறிப்பிடுகின்றோம். அதாவது சேர்மென்கள் மீதும் பிரசிடெண்டுகள் மீதும் சட்டசபைப் பிரதிநிதிகளுக்கு நம்பிக்கையில்லாத காரணங்களாலேயும் அவர்கள் பெரும்பான்மையோர்கள் தேர்தல்களில் நடந்துகொண்ட மாதிரியாலேயும், கேவலம் எலக்ஷன் நடத்துகின்ற அதிகாரங்களைக்கூட அவர்களிடம் இருந்து பிடுங்கப்பட்டாய் விட்டதே இதில் அவமானம் இல்லையா? என்று கேட்கின்றோம். இன்னம் ஸ்தல ஸ்தாபனங்களில் நடக்கும் காரியங்களை விளக்கிச்சொல்ல வேண்மானால் வெட்கப்பட வேண்டியதாகும். ஆனாலும் அவற்றையும் அவசியம் வந்தால் வெட்கத்திற்கு பயந்துகொண்டு சொல்லாமல் விடப்போவதில்லை என்றே கருதிக் கொண்டிருக்கின்றோம். ஆதலால் அந்த அவசியமில்லாமலே இத்தவற்பாட்டைச் செய்து விடுவது சுயமரியாதை உலகத்திற்கு நலம் என்று தெரிவித்துக் கொள்ளுகிறோம்,

---

## இரவிபுதூர்.

இரவிபுதூர் சண்முகானந்த வாசிப்புச்சாலையின் முதல் ஆண்டு விழாவை ஆவணி மாதம் நடத்த வேண்டுமெனத் தீர்மானித்து தோழர்களான கே. வி. அழகர்சாமி லக்ஷமிரதன் பாரதி எம். ஏ. பி. எல். ஆகியவர்களுக்கு கடிதம் எழுதியிருக்கிறார்கள். (ஒரு நிருபர்)


## தாய்நாட்டின் சேவைக்கு தகுந்த தருணம்.

சுதேசியை விருத்திசெய்ய ஏற்றமுறை.
ரொக்க பிரைசுகள் கொடுக்கப்படுகின்றன.
முதல் சீட்டெடுக்கும் தேதி ஆகஸ்ட் 28.
அன்று 2141 டிக்கட் பெற்றவர்களுக்கு
ரூ. 230, 25 பகிர்ந்து கொடுக்கப்படும்.

### லாட்டரி அல்ல.

கொல்லம், ஸ்ரீ ராமவிலாஸ் குரிசிட் நிதிக்காக-கொல்லம், "மலையாள ராஜ்யம்" என்ற தினசரியின் நிர்வாக ஆசிரியர் திரு. கே. ஜி. சங்கர் அவர்களாலும், கொல்லம் ஸ்ரீராம விலாஸ் பிரஸ், மானேஜர். திரு. நாணுபிள்ளை அவர்களாலும் நடத்தப்படுவது.

1-வது பிரைஸ் ரூ. 10000, 2-வது பிரைஸ் ரூ. 4000, 3-வது பிரைஸ் ரூ. 2000, 4-வது பிரைஸ் ரூ. 1000, மற்றும் 1 ரூபாய் முதல் 100 ரூபாய் வரையுள்ள 2140 பிரைஸ்கள் உண்டு
ஏஜண்ட்டுகளுக்கு 70 பிரைஸ்கள்.
மாதாந்திர சீட்டெடுப்பு நெ. 118.
மாதாந்திரம் 30 பிரைஸ்கள் கொடுக்கபடும்.

119 சீட்டெடுப்புகளும் முடிந்தபிறகு 100-க்கு 25 லாபத்தோடு டிக்கட்டுகளின் கிரயம் திருப்பிக்கொடுக்கப்படும்.

ஒரு டிக்கட்டின் விலை அணா 8 தான்.
இன்றே ஒரு டிக்கட் வாங்குங்கள்.

டிக்கட்டுகள் கிடைக்குமிடம்:—

குவிலான் பேங்க் லிமிடெட் முக்கிய ஏஜண்ட்டுகள், திருநெல்வேலி, மதுரை, தூத்துக்குடியிலும், பி. வி. அண்ணாசாமி அய்யர், வியாபாரம், சேரமாதேவி, கோயமுத்தூர்: எஸ். நாராயணசாமி, கிளார்க், சுதேசமித்திரன் புஸ்தகசாலை, ஸ்ரீ ராம விலாஸ் குரிசிட்பண்ட், கொல்லம், திருவாங்கூர்.

## திருநெல்வேலி ஜில்லா ஆதிதிராவிட சங்கம்.

1932ஞூ ஜூலை 24உ தமிழ் ஆடிமீ 9உ ஞாயிற்றுக்கிழமை பகல் 1 மணிக்கு மூர்த்தீஸ்வரபுரம் தோப்பில் பாளையங்கோட்டை வக்கீல் திரு எம். தேவதாசன் பி. ஏ. பி. எல்., எம். எல். சி., அவர்கள் தலைமையில்கூடியது. பல கிராமப் பிரதிநிதிகள் அடங்கிய ஆலோசனைக் கூட்டத்தில் பல முக்கிய தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

(ஒரு நிருபர்)

## கூத்தூர் வைக்கம்வீரர் இலவசவாசகசாலை

இவ் இலவசவாசக சாலைக்குகட்டிடம் அமைப்பதற்கு ஓர் குறிப்பிட்ட கவர்ன்மெண்ட் நிலத்தை வாசக சாலைக்கு அடமானம் செய்து கொடுக்கவேண்டுமென்று சில வருஷங்களாக விண்ணப்பங்கள் செய்து கொள்ளப்பட்டதை முன்னிட்டு கனம் தஞ்சை ஜில்லா கலெக்டர் துரையவர்கள் வாசகசாலையையும், பிரஸ்தாபஸ்தலததையும் சென்ற 18-7-32 யன்று பார்வையிட்டார்கள். அவ்வமயம் போஷகரும் நிர்வாகியுமாகிய தோழர் சி. முத்துகிருஷ்ணன் அவர்கள் துரையவர்களுக்கு புஷ்பஹாரங்கள் சூட்டி மிக மரியாதையுடனும் அன்போடும் வரவேற்றார்களென ஒரு நிருபர் எழுதுகிறார்.

## செருநல்லூர் ஆதிதிராவிட இலவச ஆரம்ப பாடசாலை.

இப்பாடசாலையானது கூத்தூர் வைக்கம்வீரர் இலவச வாசகசாலையாருக்குச் சொந்தமானது, இதில் சிறுவர்களும், சிறுமிகளுமாக 46பேர் இலவசக்கல்வி பயின்று வருகின்றனர் ஏழை பிள்ளைகளுக்கு கற்பலகை, புத்தகம் முதலியவைகள் இலவசமாம் அளிக்கப்பட்டு வருகின்றதென ஒரு நிருபர் எழுதுகிறார்.

## புதுவை சத்தியானந்த சன்மார்க்க சங்க 7-வது ஆண்டுவிழா.

ஷை ஆண்டுவிழா 31—7—32ந் தேதி நடைபெற்றது தோழர் ஜெ. சவரிநாதன் அவர்கள் தலைமை வகித்து ஒரு அரிய சொற்பொழிவாற்றினார் பல அன்பர்கள் அரிய சொற்பொழிவாற்றியபின் கூட்டம் கலைந்தது. (ஒருநிருபர்.

## ரூ. 300 இனும்!

25—8—32க்குள் விலாசம் தெரிவித்தால் விப்ரமடங்கிய லீப்லெட்ஸ் அனுப்பப்படும். "குடி அரசு" என்று எழுதவும். மானேஜர், பாரதி தமிழ் நந்தனம், திருப்பூர். S. I. R.

## சுயமரியாதைச் சங்கம் கொளும்பு.

இச்சங்கத்தின் மாதாந்த பொதுக் கூட்டம் சென்ற 5-8-32 இரவு சுமார் 9-30 மணிக்கு கும்பனித் தெரு கியூரோட் பௌத்தமத பாடசாலையில் தோழர் டி. எப். விக்டோரியா அவர்களின் அவைத்தலைமையின் கீழ் நடைபெற்றது. அவ்வமயம் ஏராளமான ஜனங்கள் விஜயம் செய்திருந்தார்கள். தலைவர் முடிவுரையாக சில விஷயங்களைப்பற்றிப் பேசியபின் தோழர்கள் அருளானந்தம், எஸ். எஸ். பெரியசாமி ஆகிய இருவரும் முறையே "சமூக சேவை என்றால் என்ன?" "சுயமரியாதை இயக்கம் ஏன் ஆரம்பிக்கபபட்டது" என்பதுபற்றி மிக அழகாகப்பேசினார்கள். பின் ஒரு அனுதாபத்தீர்மானம் நிறைவேறியது. தலைவர் முடிவுரையாகப்பேசும்போது விஞ்ஞான ஆராய்ச்சியுடன், கடவுள், ஆத்மா என்பவைகள் கற்பனை கதை என்றும், குருக்கள் பணக்காரர்கள் முதலானவர்களுடைய தந்திரங்களையும், படுமோசங்களையும், சாஸ்திரப் புரட்டு, சமயப்புரட்டுகளையும் பொதுஜனங்கள் எழிதில் உணரும் வண்ணம் அரிய தோர் சொற்பொழிவு நிகழ்த்தியதோடு சுயமரியாதைத்தோழர்கள் ஒவ்வொருவரும் பிரசாரம் செய்யவேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார். காரியதரிசி வந்தனோபசாரம் சொல்ல கூட்டம் இனிது கலைந்தது. (ஒரு நிருபர்)

## ஆதிதிராவிடர்களுக்கு தேவர்கள் இம்சை.

திருநெல்வேலி ஜில்லா பாலாமடை ஆதிதிராவிட ஜனங்கள் தேவர்கள் என்ற மறவர் இம்சையால் 22 வீட்டுக் குடும்பங்கள்அலங்காரப் பேரிக்கிராமம், மகானம் முத்துச் சாமி ரெட்டியார் அவர்கள் குமாரர் பாப்புரெட்டியார் அவர்கள் துயரமுள்ள ஜனங்களுக்கு இரங்கி தமது நிலத்தில் குடி ஜலக்கிணற்றுக்கும் 24 வீட்டுக்கு மனையும் 23-7-32 சனிக்கிழமை அளித் ஸ்தாபனஞ் செய்தது என்றும் பாராட்டத்தக்கது. என ஒரு நிருபர் எழுது கிறார்.

## சேலத்தில் சுயமரியாதைப் பிரசாரம்.

சேலம் சுயமரியாதைச் சங்கத்தின் ஆதரவில் சென்ற 2, 3 தினங்களாக தோழர்களான அ. ரத்தினசபாபதி அன்னபூரணி, நாகை காளியப்பன் முதலியோர்கள் பிரசாரம் செய்து வருகின்றனர். ஒவ்வொரு நாளும் பொதுக்கூட்டங்கள் கூட்டப்படுகின்றன, (ஒருநிருபர்.)

## மதிப்புரைகள்.

### ஜானகியின் மறுவிவாகம்.

வட ஆற்காடு, சத்திய நகரம் திரு. ஆர். சீனிவாசன் அவர்களால் எழுதப்பட்ட "ஜானகியின் மறு விவாகம், அல்லது காதலனைப்பெற்ற மங்கை" என்னும் சமூக சீர்திருத்த நோக்கமும், விதவாவிவாக அவசியத்தையும் வற்புருத்தும் சிறிய புத்தகம் ஒன்று வரப்பெற்றோம். இதில் கதாநாயகியாகிய ஜானகியின் மனோரதத்திற்கு விரோதமாக தனது மனதிற்குப்பிடிக்காத ஒருவனை அவளது பெற்றோர் மணமுடிப்பதும், பின்னர் அவன் பல தீச்செய்கைகளாலும், தாசிநேசத்தாலும் சீரழிந்து நோய் வாய்ப்பட்டு மடிவதும், பின்னர் ஜானகி மனம் புழுங்கி வாடும் சமயம் தான் சிறு வயது முதல் எவனை மணாளனாக வரிக்கவேண்டுமென ஆவல் கொண்டிருந்தாளோ அவனையே வரிப்பதும் விளக்கப்பட்டுளது போற்றற்குறியதாகும். இதன் விலை அணு 3. கிடைக்குமிடம்:—

முருகேசம் பிள்ளை,
மார்க்கண்டன் பிரஸ், சென்னை.

### கொச்சி திவானுக்கு விண்ணப்பம்.

கொச்சி சமஸ்தானத்தைச்சேர்ந்த சுமார் 10096 ஈழவ சகோதரர்கள் கையெழுத்திட்டு கொச்சி சமஸ்தான திவான் அவர்களுக்கு அனுப்பிய விண்ணப்பப் பிரதியொன்று நமக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. சுமார் நான்கில் ஒருபங்கு ஜனத்தொகையுள்ள ஈழவசகோதரர்கள் தங்கள் விண்ணப்பத்தில்:—

"தங்கள் ஜனத்தொகை எண்ணிக்கையையும், கைத்தொழிலும் வியவசாயமும் செய்யும் தொழிலில் சமஸ்தானத்தில் தாங்களே முதன்மை ஸ்தானம் வகிப்பதாகவும். மதவிஷயத்திலும், சமூக விஷயத்திலும் தாங்கள் அதிக தாழ்ந்த நிலையில் இருப்பதாகவும், அதிககாலமாக கல்வி கற்கும் உரிமையும்,சர்க்கார் உத்தியோக உரிமையும் மறுக்கப்பட்டபோதிலும் தாங்கள் எவ்வித சுய நல எண்ணத்தோடு துவேஷமோ, பொருமையோ கொள்ளாது சமூக முன்னேற்ற விஷயத்தில் சங்கங்கள் ஸ்தாபித்து வேலை செய்து வருவதாகவும்; சர்க்கார் நியாயஸ்தலங்களில் ஈழவ பட்டதாரிகளை வேலைக்கு அமர்த்திக் கொள்ளல் வேண்டுமெனவும், போலீஸ் உயர்தர இலாக்காக்களில் ஈழவர்களே நியமிக்கப்படாதிருப்பது வருந்தத்தக்கதாகையால் போதுமான அளவு அவர்களை நியமிக்க வேண்டுமென்றும், பொதுஜன பணத்தினால் நிர்வகிக்கப்படும் சர்க்கார் பாடசாலை, குளம், கிணறு, சத்திரம், சாவடி,கோயில் முதலியனவற்றில்தாங்கள்உபயோகிக்கத்தக்கது செய்யவேண்டுமென்றும்குறிப்பிட்டுள்ளனர்"

ஈழவர் என்று சொல்லப்படும் ஜாதியார் தாழ்ந்தவரெனக்கருதி அவர்களுக்கு உரிமைகள் மறுக்கப்பட்டு அல்லலுறும் செய்தியை நாம் பன்முறை எழுதியும், கூறியும் வருகிறோம். ஷை வகுப்பில் படித்தவர்கள், பட்டம் பெற்றவர்கள் அறிவாளிகள், ஆண்களும், பெண்களும் அநேகர் இருக்கிறார்களென்பதும் நமக்குத் தெரியும். வைதீகவெறியும், ஜாதி ஆணவமும், உயர்வு தாழ்வு அகந்தையும் கொண்ட அதிகாரிகள் அவர்களது நெடுநாளைய விண்ணப்பங்களையும், கோரிக்கைகளையும் செவிமடுத்தார்களில்லை. இப்போதைய திவான் அவர்களாவது அவர்களது வேண்டுகோளை ஏற்று அவர்களுக்கு தக்கது செய்வார்களென்றே நம்புகிறோம்.

### பகுத்தறிவு கீதம்.

சேர்மாதேவி திரு எஸ். பி. சுந்திரவேல் அவர்களால் எழுதப்பட்டு கொளும்பு, இந்தியர் சுயமரியாதைச் சங்கத்தாரால் வெளியிடப்பட்டமேற்கண்ட புஸ்தகம் ஒன்று வரப்பெற்றோம். தோழர் எஸ். குருசாமி அவர்கள் முகவுரை எழுதியுள்ளார். இதில் சாஸ்திரம், புராணம், மதம், கடவுள் இவைகளின் பொய்க்கூற்றுகளும் விதவைகள் துயரும், பார்ப்பனர் சூட்சியும் பாடல் ரூபமாக யாவரும் படித்துணரும் வண்ணம் எழுதப்பட்டுளது. இதன் விலை அணு 0-1-6 கிடைக்குமிடம்

இந்தியர் சுயமரியாதைச்சங்கம்
கொளும்பு.

### தொழிலாளி.

தென்னிந்திய ரயில்வே தொழிலாளர் மத்திய சங்கத்தின் ஆதரவில் திருச்சியினின்றும் திரு. அ. அடைக்கலசாமி அவர்களை ஆசிரியராகக் கொண்ட "தொழிலாளி" என்ற வாரப்பதிப்பின் முதல் இதழ்கள் வரப்பெற்றோம். இதில் தொழிலாளர் முன்னேற்றத்தைக் குறித்த பல கட்டுரைகளும் , செய்திகளும் உலக அதிசய செய்திகளும் பரந்து காணப்படுகின்றன. தனிப்பிரதி

விலை அணு 0—0—6.

### ஜனவர்த்தமானி.

பினாங்கினின்றும் தி. எஸ். ஏ. கே. சுப்பிரமணியம் அவர்களை ஆசிரியராகக்கொண்டு வெளிவரும் மேற்கண்டபத்திரிகையில் பல இதழ்கள் கிடைக்கப்பெற்றோம். இதில் பல நல்ல கட்டுரைகளும், செய்திகளும் காணப்படுகின்றன. தாய் நாடு விட்டு வெளிநாட்டில் வசிக்கும் தமிழ்மக்களுக்கு அறிவைப்புகட்டி முன்னேறச்செய்யும் சீர்திருத்த துறையில் தைரியமாய் முன்னின்று உழைக்க விரும்புகிறோம்.

உள்நாடு சந்தா ரூ. 3—0—0
வெளிநாடு ,, 5—0—0

# எனக்கு என் உறவினர்கள் செய்யும் உள்வினை.

(மதுக்கூர் எஸ். ஆர். தங்கராஜ், வயது 12)

அன்பு மிகுந்த தோழர்களே!

நான் தஞ்சை ஜில்லா பட்டுக்கோட்டையைச்சேர்ந்த மதுக்கூரில் உதித்தவன். நான் சிலவாண்டுகளாகசுயமரியாதைக்கொள்கையை போதித்துவரும் 'குடி அரசு,' 'தாருல் இஸ்லாம்,' 'போர் முரசு,' 'புதுவை முரசு,' 'முன்னேற்றம்,' 'நாடார்குலமித்திரன்,' 'திராவிடன்' இன்னும் சில பத்திரிக்கைகளையும் வாசித்து வந்தேன். அதுகளில் எல்லாம் நியாயமான முறைகளையும் பகுத்தறிவு என்னும் எலக்டிரிக் சுடர் விட்டெரிவதைக்கண்ணுற்றேன். அதில் சிற்சில வேறுபாடுகள் இருப்பதாக எண்ணி சந்தேகித்தேன். பின் சமீபத்தில் அதாவது 18-19-6-32-ல் மன்னார்குடியில் கூடிய தஞ்சை ஜில்லா 2-வது சுயமரியாதை மகாநாட்டிற்கு நானும் சென்றேன். ஆங்கு, சர்க்கரைப் பந்தலில் தேன்மாரி பொழிவதுபோல் பிரசங்கித்த தோழர்கள் செய்த பிரசங்கத்திலிருந்து நான் மேல்சொல்லிய பிரகாரம் என் சந்தேகங்கள் எல்லாம் கதிரவனைக் கண்ட பனிபோல் நீங்கிற்று. அதன் பிறகு நான் என் சொந்த ஊருக்கு திரும்பி வந்தது முதல் சுட்ட சாணியை பூசாமலும், சாமிகள்யெனப்படும் பொம்மைகளை கும்பிடாமலும், பார்ப்பானுக்குப் பணியாமலும் இருப்பதுடன் நான் திண்ணைப் பிரசங்கமும் செய்ய ஆரம்பித்தேன். அதுமுதல் இதுவரையில் என் சுற்றத்தாரும் என் சிநேகிதர்கள் எல்லாம் என் பேரில் கடுஞ்சினங்கொண்டு என்னையும்; எனக்குப் பகுத்தறிவைப் புகட்டிய சுயமரியாதை பத்திரிக்கைகளையும் தூற்ற ஆரம்பித்தார்கள். அது முதல் இந்த கபோதித்தனமுள்ள முட்டாள்களிடம் என் சிற்றறிவுக்கெட்டியவரையில் சில கேள்வி கேட்க ஆரம்பித்தேன். அதுமுதல் அவர்கள் என்னை துவேஷமாக கேலி செய்ய ஆரம்பித்தார்கள். யான் அத்துடன் என் திண்ணைபிரசாரத்தை நிறுத்திவிட்டேன். அப்படியும் அவர்கள் என்னை விடாதபடி சிலகேள்விகளை என்னிடம் கேள்க ஆரம்பித்தனர். யான் அதற்கு தக்க வாயாப்புகடாவினேன். அதின்பிறகு அவர்கள் என்னுடன் ஒருவரும் பேச கூடாது என்று கட்டுப்பாடு செய்தனர். யான் அதுமுதல் சிலநபர்களை நம் கொள்கையில் சேர்க்கவேண்டும் என்ற அபிப்பிராயத்துடன் மீண்டும் என் வழக்கம் போல் திண்ணைபிரசாரம் செய்தேன். அதில் அவர்களுக்குக் கொஞ்சமேனும் பகுத்தறிவு பிறக்க வழியைக் காணேம். அதன் மேல் அவர்களில் சிலர் என்னை தாக்க முற்பட்டனர். ஆ! என்ன முட்டாள்தனம், கபோதிதனம், அர்ப்பதனம், படிக்காதமுட்டாள்களுக்கு என்ன விதமான சமாதானங்களை சொல்லியும் கேளாமல் ஏசினார்கள், பேசினார்கள், தூற்றினார்கள், வைதார்கள் கடைசியில் தாக்கவும் வந்தார்கள், என்னே இவர்கள் கொடுமை.

அன்புமிக்க சோதரர்காள், அறிவிற் சிறந்த ஆன்றோர்காள், யான் இந்த வடிகட்டிய முட்டாள்களிடம் அகப்பட்டுக்கொண்டு முழிப்பது எவ்விதம் என்றால் பூனையிடம் எலி அகப்பட்டு முளிப்பது போலும், புலியினிடம் ஆடு சிக்கி அவஸ்த்தை படுவது போலும். யான் ஒருவன் இவர்களிடம் சிக்கி கஷ்டப்படுவது சொல்லவியலாது.

---

## "தமிழன்" அறிக்கை.

சென்ற ஜூலை மாதம் 20-ந் தேதி முதல் "தமிழன்" பத்திரிகை வெளியிடக்கூடாமலிருப்பது பற்றியும், அதன் விவரத்தை நேயர்களுக்கு அறிவிக்க சாத்தியப்படாமற் போனதைப்பற்றியும் வருந்துகிறோம். நமது மைசூர் கவர்ன்மெண்டார் யாதொரு முன்னெச்சரிக்கையும், முன்னறிவிப்பும் செய்யாமல் "தமிழன்" வெளியிடுவதற்காகக் கொடுக்கப்பட்டிருந்த அனுமதியை இன்று தேதி முதல் (14-7-32) நிற்பாட்டிக்கொண்டோம் என எங்களுக்குத் திடீரென்று உத்தரவிட்டமையால் "தமிழன்" மூலமாக எவ்வித அறிக்கையும் செய்விக்ககூடாமற் போயிற்று. அதன் காரணமாக நமது "தமிழன்" வாசக நேயர்களடைந்த ஏமாற்றத்திற்கு நம்மை மன்னிப்பார்களாக. "தமிழன்" மீண்டும் வெளிவரும்படியான முயற்சியிலீடுபட்டிருக்கின்றோம். விரைவில் "தமிழன்" வெளிவரக் கூடுமென இதனால் அறிவித்துக்கொள்ளுகிறோம்.

B. M. இராஜரத்தினம்,
பிரண்டர்&பப்ளிஷர்.

---

## "குழந்தைகள் பெற மாட்டோம்"

### பெண்களுக்கு பர்னாட்ஷா உபதேசம்.

அறிஞர் ஸ்ரீ பர்னாட்ஷா சமீபத்தில், பிரிட்டிஷ்ஆகாச வசனிமூலம் ஓர் அரிய பிரசங்கம்செய்தார். லக்ஷக்கணக்கானவர்கள் அவரது பிரசங்கத்தை ஆகாசவசனி மூலம் கேட்டனர். அவரது பிரசங்கத்தின் சாரம் வருமாறு:—

"நான் மிகப்பெரியமனுஷ்யனென்று நீங்கள் மதிக்கிறீர்கள். பிரிட்டிஷ் ஆகாச வசனி கார்ப்பொரேஷனும் அவ்விதமே நினைக்கிறது. தாடியுள்ள ஓர் சாதாரண கிழவன் என்றே நானுமிருக்கிறேனென்பது என்படத்திலிருந்து நீங்கள் அறிந்திரும்பீர்கள் ஆனால் நான்பெரிய மனுஷ்யனென ரகசியத்தை அறிய நீங்கள் விரும்புவீர்கள். பெரிய மனுஷனென்றோ, அன்றி பெரிய மனுஷி என்றோ உண்மையில் ஒன்றும் கிடையாது ஜனங்கள் கொண்டுள்ள மூட நம்பிக்கைகளில் இதுவுமொன்றாகும். குழந்தைகளால் பெற்றோர்களுக்கு பெரும் பொறுப்பு ஏற்படுகிறதென்று கணக்கற்ற மக்கள் கூறுகின்றனர். இது சுத்த அர்த்தமற்றபேச்சு. குழந்தைகளால் பெரும் செலவு ஏற்படுகிறது. அச்செலவை பெற்றோர்கள் ஏற்றுக்கொள்ளக்கூடாது. மாண்டவர்களுக்குப்பதிலாக புதியமக்கள் ஏற்பட வேண்டியதை பார்த்துக்கொள்ள வேண்டிய பொறுப்பு தேச சர்க்காரையே சார்ந்ததாகும். இதற்காக பெற்றோர்களுக்கு சர்க்கார் தாராளமாக பணஉதவி செய்யவேண்டும்.

இறந்தவர்களுக்கு பதிலாக புதிய பிரஜைகளை சேர்க்கும் செலவினைத் தம் பெற்றோர்கள் தலையிலேயே சுமக்கிறது. பிரம்மசாரிகளுக்கு இவ்விஷயத்தில் எவ்வித செலவுமில்லாமற்போகிறது. பெண்களுக்கு கொஞ்சமேனும் புத்தி இருக்குமாயின் பெற்றோர்களுக்கு சர்க்கார் தக்க உத்தரவாதமளிக்காதவரை அவர்கள் பிரம்மசரியத்தை அனுஷ்டித்து, பிள்ளைகளைப்பெற முடியாதென சர்க்காருக்கு கண்டிப்பாக எச்சரிக்கை செய்துவிடவேண்டும்."

---


## Goshaye office pillss.



## கோஷாயி ஆபீஸ் மாத்திரை

—::—

Dr. T. K. V Chalam.

உதவி டாக்டர் ஸ்ரீ சுகானந்த சடலத்தில் தன், பகுத்தறிவை அறிந்து அரிவாகிய அருள் ஜோதியை தெரிசித்து ஆனந்தமனுபவிக்க, அல்லலற்ற சிவ ராஜயோகம் சாதித்து வருவோர்களுக்கும், 'முடிவுபெற்ற காரியங்களில் மனதை புகுத்தி சதா சஞ்சலம் அனுபவித்துவரும் இல்லறவாசிகளுக்கும் (ஆனந்த அருள் நீருக்கும் அழுகை கண்ணீருக்கும் உள்ள வித்தியாசம்போல்) மூலாக்கினி தகித்து வருவதினால் வாத, பித்த, அய்யமென்னும் சிலேத்துமமும், காலாக்கிரம ஆகார தவக்கத்தினால் மூனுகி, பித்தமதிகரித்த வெட்டையும், வாய்வும், உரவாகியது முதல், மலபந்தம், மலச்சிக்கல், மலம்தீய்தல், அன்னதுவேஷம், அசதி, இடுப்புவலி, மார்நோய், சூலை, கீல்வாய்வு, தாதுநஷ்டம், முதலியவை ஜெனிப்பது மலபந்த முள்ளோர்களின் அனுபவ சித்தி.

மேல்கண்ட உபாதையுளளோர்கள் இரவு போஜனத்துக்குப்பின் ஒரு மாத்திரையை ஒரு வெற்றிலையில் வைத்து மடித்து ஒன்றிரண்டாய் மென்று ஜலம்விட்டு கொப்பளித்து (கொப்பளித்து) சாப்பிட்டால் வாய்வுகளை கலைத்து வெளியாக்கி மலம் தாராளமாய் கழிக்கும். சுரம், தைலஸ்னானம் முதலிய யாவும் வழக்கம்போல் நடத்திக்கொள்ளலாம். ஆண், பெண், பாலர், விருத்தர்களும் எவ்வித பத்தியமுமில்லாமல் சாப்பிட்டு குணம் பெறக்கூடிய கோஷாயி ஆபிஸ் மாத்திரை 51 கொண்ட சீசா 1-க்கு 1—10—0; 101 கொண்ட மாத்திரை சீசா 1-க்கு ரூ. 3—0—0 வி. பி. பேக்கிங் சார்ஜ் வேறு. சிலோன், சிங்கப்பூர் முதலிய வெளி நாட்டார்கள் ஆர்டருடன் ரூ. 1—12—0 சேர்த்து மணியார்டர் செய்யவும்.

டாக்டர் B. A. எதிராஜ்,
[கால்ராபைரி]
கோஷாயி வைத்தியசாலை,
தென்னூர், திருச்சி.

[5ம் பக்கத்தொடர்ச்சி]

கொள்ளுவதன் மூலமும், அவைகளுக்கு நேர்த்திக் கடன்செலுத்துவதாகப் பல நிபந்தனைகள் ஏற்படுத்திக் கொள்ளுவதன் மூலமும் வியாதிகள் குணப்பட்டு விடுமென்று நம்புகிறார்கள்.

அடுத்த படியாக, தலைவிதியினாலும், ஜாதக தோஷங்களாலும் வியாதிகள் வந்ததாகவும் நினைக்கிறார்கள். இதனால் சோதிடர்களை அழைத்துச் சாதகங்களைக் காட்டுகிறார்கள். அந்தச் சோதிடர்கள், சனிதோஷம் இருக்கிறது, செவ்வாய் தோஷம் இருக்கிறது, ராகுவினுடைய பார்வை வந்திருக்கிறது; காலம் போதாதகாலம்; ஆகையால் "கிரக தோஷநிவிர்த்திகள்" செய்ய வேண்டும் என்றுசொல்வதை நம்பி அதன்பொருட்டுப் பணம் செலவழிக்கிறார்கள்.

அடுத்த படியாக, பேய் பிசாசு, முதலிய நம்பிக்கைகாரணமாக, அவைகளால் வியாதிகள் வந்திருக்குமென நம்பி மந்திரவாதிகளை அழைக்கிறார்கள். அவர்கள் பிசாசினால் வியாதிவந்தது, முனியினால் வியாதிவந்தது, பேயினால் வியாதிவந்ததுஎன்று சொல்லி அவைகளை ஓட்டுவதற்காகப் பல சடங்குகளைச் செய்கிறார்கள் அவைகளின் மூலம் வியாதியஸ்தர்களை இன்னும் பயமுறுத்தி, வியாதியை அதிகப்படுத்தி, நாளைக்குப்போகிற உயிரை இன்றைக்கே போகும்படியான மார்க்கத்தைத்தான் தேடுகின்றார்கள்.

இவைகளெல்லாம் முடிந்த பின் அதாவது, தெய்வங்களுக்கு வேண்டுகோள்செய்து கொண்டு பூசைகள் போட்டுச் செலவுசெய்த பின்னும்; சோதிடர்கள் கூறும் சடங்குகளைச் செய்த பின்னும், மந்திரவாதிகளின் ஆர்ப்பாட்டங்களுக்குத் தப்பித்த பின்னும், வியாதி யஸ்தன் உயிரோடு இருந்தால், கடைசியாக வைத்தியனிடம் செல்லுகிறார்கள். அதுவும் வியாதியை அறிந்து மருந்து கொடுக்கும் நல்லவைத்தியர்களிடம் போவதில்லை, ஒன்றுந்தெரியாமல், பச்சை வீரங்களையும், பூரங்களையும், ரசங்களையும், நாவிகளையும் மருந்தாகப் பச்சிலைகளுடன் சேர்த்து அரைத்துக் கொடுத்து வியாதியஸ்தர்களைக் கொல்லை செய்யும் அரை குறை நாட்டு வைத்தியர்களிடம் போகிறார்கள். அவர்களுக்கும் தப்பித்து வியாதியஸ்தன் உயிரோடு இருப்பது அரிது. ஒருசமயம் பிழைத்திருந்தால் கடைசியாக ஆஸ்பத்திரிகளை அடைகிறார்கள். வியாதி முதிர்ந்து, இன்னவியாதிதான் என்று கண்டுபிடிக்க முடியாத நிலையில் இருக்கும் பொழுது ஆஸ்பத்திரிகளுக்கு வந்தால் அங்குள்ள டாக்டர்கள் என்ன செய்யமுடியும்? கடைசியாக வியாதியஸ்தர்கள் இறந்து விடுகிறார்கள். இதுதான் ஏழை மக்கள் கூட்டத்தில், குருட்டு நம்பிக்கையுடைய மக்கள் கூட்டத்தில் இன்றுநடை பெறும் காட்சி.

இது மாத்திரம் அல்ல, இன்னும் மக்கள் நோயடைவதற்குக் காரணமாயிருப்பன பல வுள. அவைகள் நமது நாட்டுக் கோயில்களும், உற்சவங்களும், தீர்த்தங்களும் ஆகும். புண்ணியஸ்தலங்கள் என்று இருக்கும் பெரிய ஊர்களில் நடை பெறும் உற்சவங்களுக்குத் திரளான ஜனங்கள் வந்து கூடுவதனாலும், அங்குள்ள அழுக்கும், பாசியும், நாற்றமும் பிடித்த குளங்களில்தலைமுழுகுவதினாலும்எண்ணற்ற வியாதிகளையடைகிறார்கள். இவ்வாறு மூட நம்பிக்கையினால் வியாதியடைகின்றவர்களும், வந்த வியாதியை விடாமல் விருந்தாக வைத்து உபசரிப்பவர்களும் ஏழை மக்கள் மாத்திரம் அல்ல; பணக்காரர்களும், படித்தவர்களும் கூட இத்தகைய மூட நம்பிக்கையினால் சீரழிகின்றார்கள் என்றால் மற்றவர்களைப் பற்றிக் கேட்கவா வேண்டும்?

ஆகையால், நாட்டில் சுகாதாரத்தைப் பரவ வைக்க வேண்டும் என்று நினைக்கிறவர்கள்—எல்லா மக்களும் நோயற்ற திடகாத்திர சாலிகளாக வாழவேண்டும் என்று பாடு படுகிறவர்கள்—நமது தேசம் சௌக்கியமாக இருக்க வேண்டும் என்று எண்ணுகின்றவர்கள் அனைவரும், முதலில், தேசத்தில் உள்ள வறுமையையும், ஏழை மக்களின் கஷ்டத்தையும், எல்லாமக்களிடத்திலும் உள்ள பழையகுருட்டுப் பழக்க வழக்கங்களையும் போக்க முயலவேண்டும். இவையொழிந்தால், நாட்டைப்பிடித்துள்ள பீடை வியாதிகள் ஒழியும் என்பது நிச்சயம். இக்காரியத்தைச் செய்ய, அரசாங்கமும், சுகாதார அதிகாரிகளும், படித்தவர்களும், முன் வருவார்களா? என்று கேட்கின்றோம். பணக்காரர்களும், படித்தவர்களும், "யாருக்கோ வியாதி வந்தால் நமக்கு என்ன என்று இருப்பார்களானால், அடுத்த ஏழை வீட்டில் வரும், விஷபேதியும், அம்மையும் பெருவாரியும், தங்கள் வீட்டிற்கும் வராமல் போகாது என்று எச்சரிக்கின்றோம்.

---

## சிதம்பரம் தாலூக்கா பரதூர் சுயமரியாதைச் சங்கத் திறப்புவிழா.

1932-௵ ஆகஸ்டு-மீ 19-தேதி வெள்ளிக்கிழமை முற்பகல் 9-மணிக்குமேல் சென்னை திராவிடன் ஆசிரியர் தோழர் டி. வி. சுப்பிரமணியம் அவர்கள் தலைமையிலும் திறப்பாளர் புதுவை தோழர், பண்டிதர் பாரதிதாசன் அவர்களாலும், வரவேற்புக் கழகத்தலைவர் புவனகிரி சுவாமி சிங்காரவேல் அவர்களாலும் சங்கத் திறப்புவிழா நடைபெறும்.

பிற்பகல் 3-மணிக்குமேல் சுயமரியாதை இயக்கத்தோழர்கள் பூவாளூர் அ. பொன்னம்பலனார், என். பி. காளியப்பன், புதுவை நேரயல் இன்னும் பல தோழர்களாலும் சுயமரியாதை இயக்கச் சொற்பொழிவாற்றுவார்கள் என கே. டி. குஞ்சிதபாதம், பி. ஜெ. ஜி. ராஜன் எழுதுகிறார்கள்.

## எனது நன்றியறிதல் கடிதம்

துறையூரில் 6, 7-8-32ௗ களில் நடந்த தமிழர் மகாநாட்டிற்கு, ஜோலார்பேட்டை, திருப்பத்தூர், சேலம், ராசிபுரம், திருச்செங்கோடு, நாமக்கல், ராணிப்பேட்டை, சென்னை, விழுப்புரம், புதுச்சேரி, ஈரோடு, கரூர், திருச்சி, லால்குடி, தஞ்சை, கோவை, மன்னார்குடி, திருவாரூர், நாகை, திண்டுக்கல், மதுரை, விருதுநகர், செட்டிநாடு, காரைக்குடி, பள்ளத்தூர், இன்னும் சில நகரங்களிலிருந்து எவ்வித வசதியும் இல்லாத இவ்வூருக்கு நமது சுயமரியாதைத் தோழர்கள் அனைவரும் விஜயம் செய்து சைவத்தமிழர் மகாநாட்டை உண்மைச்சுயமரியாதை மகாநாடாக நடைபெறும்படி செய்ததைப் பொருத்தும், இதன் பயனாக துறையூர் சுற்றுக்கிராமங்களில் தீவிர சுயமரியாதை எழுச்சி ஏற்பட்டதைப் பொருத்தும் துறையூர் சுயமரியாதைச் சங்கத்தின்சார்பாக எனது மனமார்ந்த நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன் என துறையூர் சுயமரியாதைச் சங்கக் காரியதரிசி சைமன் ராமசாமி எழுதுகிறார்.

---

## வாராந்திரக்கூட்டம்.

### நாகபட்டினம்.

7—8—32ந் தேதி மாலை 6-30 மணிக்கு புதுரோட்டிலுள்ள சங்கக் கட்டிடத்தில் முதல் வாராந்திரக் கூட்டம் கூடிற்று. அதுபோது "சுயமரியாதை இயக்கம் சொல்வது என்ன? என்பதுபற்றி சங்கத் தலைவர் தோழர் ஆர். வி. கோபால் சிறிதுநேரம் பேசினார். பிறகு அதே விஷயத்தைப்பற்றி முறையே தோழர்கள் எம். ஏ. கோவிந்தசாமி, உசேன், அடைக்கலசாமி, கே. முருகேசன், கிருஷ்ணசாமி, என், சிவஞானம், எம். ஆர். பதி இவர்கள் நீண்ட நேரம் பேசினர். பொதுமக்கள் பெரும்பாலோர் கூட்டத்தில் கலந்துகொண்டார்கள். அவர்களில் சிலர் தாங்கள் இத்தகைய உண்மையை உணராது நீண்ட நாட்களாக சுயமரியாதை இயக்கத்தை அறியாமையால் அவதூராகத் தூற்றி வந்ததையும் எடுத்துக் கூறியதோடு தாங்கள் இனி இந்த இயக்கத்திற்காக உண்மையாகப் பாடுபடுவதாக்க் கூறினார்கள். தலைவர் முடிவுரைக்குப்பின் இரவு 9-30 மணிக்குக் கூட்டம் முடிவுற்றது என ஒரு நிருபர் எழுதுகிறார்.

---


ஓ! பலங்குன்றியவர்களே! தாதுபுஷ்டியில்லாதவர்களே! கிழத்தன்மையடைந்தவர்களே!

இதோசாப்பிடுங்கள்

**தங்கபஸ்பம்**

இதை 1, ½ மண்டலம் சாப்பிட சகலவியாதியும் நீங்கி அபார தாது புஷ்டியும், பசியும், ரத்தவிர்த்தியும் உண்டாகும். இது எல்லா மருந்துகளுக்கும் மேலானது; பத்தியமில்லை. நாட்பட்ட அல்லது புதிதாயுண்டான எல்லாவியாதிகளையும் நீக்கி ஆண்மைத்தனத்தை உண்டாக்கி தாதுபுஷ்டியைக்கொடுக்கும்.

48 நாள் பஸ்பம் ரூ. 20. 24 நாள் பஸ்பம் ரூ. 10.

குரு நாக பஸ்பம்-மூலத்திற்கு.

ஆபரேஷன் அவசியமில்லை. மூளை தானே கரையும், சீழ் மூலம், ரத்தமூலம், குத்தல், மூளைமூளை, மலபந்தம் முதலிய மூலம் ஒன்பதும் அதிசீக்கிரம் குணமாகும் உத்திரவாதமுள்ள சிறந்த ஔஷதம். புட்டி 1-க்கு ரூ. 4.

தாளக பஸ்பம்- இருமலுக்கு.

காசம், க்ஷயம், ஈளை, இளைப்பு, இருமல், கஷ்ட சுவாசம், கோளை, கபக்கட்டு இவைகள் எவ்வளவு நாட்பட்டதாயிருந்தாலும் சரி, 8 வித காசமும் அவசியம் தீரும் அனுபவத்தில் கைகண்டது. புட்டி 1-க்கு ரூ. 4.

அப்ரேக் செந்தூரம் - நீரழிவுக்கு

ஜாஸ்திபோகும் நீரையும், நீரிலுள்ள சர்க்கரை சத்தையும் குறைத்து தாகத்தை நிறுத்தி தேக வெளுப்பை மாற்றி ரத்த விர்த்தியையும் தேக புஷ்டியையும் தரும். சகலமேகமும் நீங்கும். தளுக்கற்றது. புட்டி 1-க்கு ரூ. 15. வி. பி. வேறு.

வைத்திய ஆசிரியர் **மலையப்பசாமி,**

வைத்தியசாலை, பழனி, S. I.,

[4-ம் பக்கம் பார்க்க]

கல்வி எதுவென ஆராய்ந்து அதனை தளரா ஊக்கத்துடன் கற்றுத்தேறி, நமது அடிமைவாழ்வினின்றும் வெளியேறி சம நிலை கண்டு இன்புற்று வாழ, இன்றே கங்கணங்கட்டி, எவ்வித எதிர்ப்புகளையும், பொருள் நஷ்டமோ, உடல் நலிவோ, உயிர்ச்சேதமோ, இவை எவற்றிற்கு மஞ்சாது திரள் திரளாய் தீரமுடன் முன்வர தயவுடன் விழைகின்றேன்!

இனி அத்தகைய கல்வி எதுவென்பீரேல் B. A., M. A., B. L. M. B. B. S., L. M. S. போன்ற பட்டப்படிப்புகளல்ல மற்றும் வேறு சிறந்த வித்தைகளல்ல. ஜட்ஜ், அட்வகேட், மந்திரி போன்ற தொழிற்கல்வியல்ல! இன்றைய நிலையில் ஆண்களுடைய தயவை எதிர்பாராது, 'தன் கையே தனக்குதவி' என்னும் லட்சியத்தில் நின்று ஏனைய நாகரீக நாட்டினர்முன் நாம் தலை நிமிர்ந்து நிற்கும் வண்ணம், கற்க வேண்டிய தொழிற் கல்வியே யாகும்.

இங்ஙனம் கூறுவதால் சிலர் பெண்களுக்கு உயர்தரக்கல்வி அவசியமில்லை யென்று கூறுவதாகக்கருதலாம்! ஆனால் கருத்து அப்படியல்ல! இந்த பி. ஏ., எம். ஏ., அல்ல, இந்த ஜட்ஜ் வேலையோ, சட்டசபை மந்திரி வேலையோ அல்ல, அதற்கு மேலும் பெண்கள் போட்டி போடலாம். இன்னும் இராணுவத்தில் சேனாதிபதிகளாகவுங்கூட செயலாற்றலாம்! குடி அரசாட்சியின் முடிசூடா அரசி (தலைவர்) யராகவும் ஆகலாம்.

ஆனால் இன்று இந்நாடிருக்கும் நிலையிலே இந்நாட்டின் பதினாறுகோடி பெண் மக்கட்கும் அத்தகைய உயர்தரக்கல்வி வேண்டுமென எதிர்பார்ப்பது சிரமசாத்தியந்தான்! [பதினாறுகோடி பெண்மக்கட்கும் வித்தியாசமற்ற ஒரேவித சமக்கல்வியளிக்கப்படும் நாள் ஒன்றுவரலாம்!] அதற்கிடையில் நமக்கு அவசரமாகவும், முக்கியமாகவும் வேண்டற்பாலதான சில கல்வி முறைகளை மட்டும் இங்கு, இப்போது குறிப்பிடுகின்றேன். சகோதரிகள் ஆழ்ந்து யோசித்து வாசித்தவளவில் விட்டுவிடாது செயலில் காட்டவேண்டுமாய் வேண்டுகிறேன்!

(1) முதலாவதாக ஒவ்வொரு பெண்மணியும் கட்டாய ஆரம்பக் கல்வியை பயிலவேண்டும்.

(2) ஒவ்வொரு பெண்மணியும் எப்பாஷையைச் சேர்ந்தவராயினும் சரி, அவரது தாய் மொழியை தெலுங்கோ, கன்னடமோ, தமிழோ, மராட்டியோ, துலுக்கோ, உருதோ, அவ்வவரது தாய் மொழியைக் கசடறக் கற்றாகவேண்டும்.

(3) பொதுப்பாஷையாகிய ஆங்கிலத்தை உலகப்பொது விஷயங்களை அறிவான் வேண்டி பத்திரிகைகள் வாசிக்குமளவேனும் கற்றாக வேண்டும்; என்றால்தான் நாம் உலக நிகழ்ச்சிகளை அறிந்தவர்களாவோம்.

(4) "முதல் உதவி" ஒவ்வொரு பெண் மணிக்கும் அவசியமாகத்தெரிந்திருக்கவேண்டும்; அது நமது குடும்பத்தில் ஏதேனும் ஒரு சடுதியான, ஆபத்தைத் தரக்கூடிய, படுகாயமோ, விஷபேதியோ குழந்தைகளுக்கு சீதளத்தால் ஏற்படும் வலிப்பு, இழுப்பு, நெருப்பில் பற்றிக்கொள்ளுதல், கர்ப்பிணிகளானசகோதரிகளுக்குச் செய்யக்கூடிய முதல் உதவிகள் இவைகளை யெல்லாம் அறிந்து குடும்பத்தின் சுகாதாரத்தைக் கவனித்து திடீரென ஏற்படும் பிராணபத்துகளிலிருந்து டாக்டரின் உதவியை எதிர்பாராமல் நமது குடும்பத்தினர்களை மீட்கலாம்!

ஒவ்வொரு கிராமங்களிலும், ஊர்களிலும் நகரங்களிலும் பெண்கள் "முதல் உதவி"யைக் கட்டாயமாகத் தெரிந்திருக்கவேண்டுமென்னும் நியதியின் மேல் ஒவ்வொரு பாடசாலை ஏற்படுத்தி குடும்ப நிர்வாகியாகவுள்ள பெண்மணிகள் உள்பட யாவரும் இலவசமாகக்கற்பித்து வைத்தால், பேருபகாரமாயிருக்குமென்பதை இதே சமயத்தில் அரசாங்கத்தாருக்கும் தாழ்மையுடன் அறிவிக்கின்றேன்; பெண்கள் மகாநாடுகளில் இத்தகைய தீர்மானங்களை நிறைவேற்றி அரசாங்கத்தாருக்கனுப்பி இவ்வேலை முடிவு பெற்றால் மிக்க நலங்கிடைக்கும்.

(5) தொழிற்கல்வி, ஒவ்வொரு பெண்மணியும் கட்டாயமாக ஏதேனும் ஒரு தொழிற்கல்வி—சம்பாத்தியமளிக்கக்கூடிய கல்வியைக் கற்றிருத்தல் வேண்டும். படித்து விட்டதினால் தொழிற் கல்வியை அலட்சியம் செய்தல் அநியாயமாகும். பி. ஏ., எம். ஏ., படித்து விட்டு ஆடவர்களெல்லாம் வேலையில்லாத் திண்டாட்டத்தில் தவிக்கிறார்கள். ஆதலால் அவர்களுக்கும் வழிகாட்டிகளாக, பெண்கள் படித்தவர்களாயினும், படியாதவர்களானாலும் கைத்தொழிலைக்கற்று அதன் மூலம் ஊதியஞ் சம்பாதித்து தொழிலின் மேன்மையைக்காட்டலாம். எதிர்கால உலகத்தை ஆளப்போகிறவர்கள் தொழிலாளிகளே என்பதை நாம் ஞாபகத்தில் வைக்கவேண்டும். ரஷியப்பெண்மணிகளைப் பாருங்கள். ஆண்களோடு சமத்துவமாகத் தொழில் புரிந்து சம்பாத்தியம் பெறத் தொடங்கியபின்பே "சரி, நிகர், சமமான" வாழ்வை எய்தி உள்ளனர்! "பெண்கள் தொழில் புரிவது இழிவு" எனக் கருதுவதுபேதமையாகும். என்று இந்தியாவில் பெண்கள் தொழில்புரிந்து பொருள் சம்பாதிக்கின்றார்களோ அன்று தான் "பெண்ணைப்பெற்று என்ன சுகம்"? யாரைக்காப்பாற்றப் போகிறது? என்ற அசட்டுமொழிகள் தாமாகவே அகன்றுவிடும்! அன்றுதான் பெண்களைப் பெற்ற, பெற்றோர் களிப்புறுவர்! அன்றுதான் சமதர்மத்தின் மேன்மைதெளிவுபடும். சமதர்ம ஆட்சி நாடாகிய ரஷியாவிலே பண்ணைத்தொழிலாளியின் மனைவிமுதல், ரஷிய சர்வாதிகாரியான "ஸ்டாலி"னுடைய மனைவியும் தொழில் முறையிலீடுபட்டிருக்கின்றார்கள்! எனவே, சோதரிகாள்! நாம் சுயமாக சம்பாதிக்கும் முறையைக் கைக்கொள்ளும் வரை ஆண்களுக்கு அடிமைகளாகவும், பிள்ளை பெறும் யந்திரங்களாகவும், சமையல் செய்யும் அடுக்களைகளாகவும், "பெட்டைக்கழுதை ஏன் பிறந்தது" என்னும் வசை மொழிக்குள்ளானவர்களாகவும் தான் இருப்போமென்பதை சிந்தையில் திடமுடனிருத்தி, தொழில் புரிய முன்வாருங்கள்! ஒழிந்த நேரங்களில் ஊர் வம்பு பேசியும், சொக்கட்டான், சோழி, தாயம் ஆடியும் காலங்கழிக்காது, சிறு சிறு, தொழில்களாகும், பின்னல், நூற்றல், கூடை முதலியவை வளைத்தல், செய்தல், தையல் மற்றும் இவைபோன்ற பல வேலைகளைச் செய்யவேண்டும். மற்றும் ஒவ்வொரு கிராமத்துப் பெண்மணிகளும், கிராமத்திற்கோர் கைத்தொழில் நிலையம் ஏற்படுத்தி எல்லோருமாக ஆங்கு வேலை செய்து மொத்தமாக அவைகளை விற்றுகிடைத்த பொருளை பகிர்ந்து கோள்ள வேண்டும்! "ஆண்களின் ஆற்றல் பெண்களுக்கு முண்டு" எனத்தெளிவுபடுத்திவிட வேண்டும். ஆண்களின் அநியாய ஆதிக்கத்தையும், பெண்கள் ஆற்றலற்றவர்கள் என்ற சோம்பேறிப்பல்லவியையும் ஒரு கை பார்த்துவிட வேண்டும். இவையன்றி நாட்டின் ஒவ்வொரு கைத்தொழில்களிலும் உத்தியோகங்களிலும் போட்டி போட்டு வெற்றி பெற வேண்டும்!

இங்ஙனமே, ஒவ்வொரு கிராமத்திற்கும் "பொதுக் கல்வி" நிலையம் ஒன்று ஏற்படுத்தி அங்கு யாவரும் பகுத்தறிவையும், உலகானுபவத்தையும், சமதர்ம நெறியையும் புகட்டும் நூல்களையும்பத்திரிகைகளையும்வாசித்தல் வேண்டும். ஒவ்வொரு படித்த பெண்மணியும் எவ்வித கைமாறையுங்கருதாது மேற்கண்ட நிலையங்களைத் தலைமை வகித்து நடத்தமுன்வரவேண்டும். நாட்டின் நலங்கோரும், தாராள சித்தமுடைய ஒவ்வொருதனவந்தரும் இம்மாதிரி நிலையங்களை ஏற்படுத்தித்தர முன்வரவேண்டும். அரசாங்கத்தாரும் இது விஷயத்தில் போதிய கவனம் செலுத்த தயவுடன் முன்வரவேண்டும்.

எனவே, சகோதரிகாள்! காலச்சக்கரத்தின் வேகத்தைக் கவனியுங்கள்! காற்றுள்ள போதே தூற்றிக் கொள்ளுங்கள்! யாருக்கு வந்தவிருந்தோவென வாளாவிருப்போமேயாகில், நமது கதி அதோகதியாகிவிடும். "இராம இராஜ்யம்" வருமுன் வீராங்கனைகளாக மிளிருங்கள்! நமக்கு வேண்டிய கல்வி அறிவை மயக்கும் அத்தைப்பாட்டி படிப்புகளல்ல! அறிவை வளர்த்து சமத்துவத்தையளிக்கும் "பொதுக்கல்வியும் தொழிற்கல்வியுமே" யென்பதை உணர்ந்து அக்கல்வியைப் பூரணமாய் கற்று சுதந்தரப் பெண்களாய்த் திகழுங்கள்.

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

போவானும்! இது என்ன விந்தை? சுடுகாட்டில் வேகும் திரேகங்களைப் போல், அவைகளின் சுற்றத்தாரும் வெந்துபோவதை வுற்றிருக்கிறது!!! அல்லது, புதைத்த பிணங்கள்மாதிரி சுற்றத்தாரும் அழுகுவார்களோ? மனிதனுக்கு, அகோர எண்ணங்கள் (Wild, bizzare thoughts) தோன்றுகின்றன. அவைகளில், இவையும் வொன்றாக இருக்கலாம். இதை சாமான்ய மக்கள், கேட்டு, மயங்கி, விஷயங்களின் சம்பந்தங்களை அறியாமல், பல எண்ணங்களிலும் மனதைச் செலுத்தி, மோசம் போகும் விநோதமே, விநோதம்! இவைகளைச்செய்து பிழைக்கும் மனிதர்களை விலங்கிட்டு தண்டிக்கும் வரை, இந்த அகோர எண்ணங்கள், பழக்கத்தில் வந்துக்கொண்டே இருக்கும். இதனால் பலவாயிரம் ஏழை மக்கள் ஏமாந்துக்கொண்டே போவார்கள். பல உயிர்களுக்கும் நாசமுற இடங்கொடுக்கின்றது.

இக்கொடிய பழக்கவழக்கங்களின் ஆதாரங்களை விளக்குவது மாத்திரம் போதா. இதன் ஆபாசங்களை தெரியப்படுத்தலும் போதா. இவைகளால் எழும் கெடுதிகளை விளக்குவதும் போதா. இந்தமாரி ஈனத்தை நீடிக்கச்செய்யும், மந்திரக்காரர்களையும் சூனியக்காரர்களையும், (Sorcerers) குற்றவாளிகளாக்கவும், தண்டிக்கவும், பகுத்தறியும் சங்கத்தோர் (Rationalist) ஆதிக்கம் பெறவேண்டும். பகுத்தறியும் சங்கத்தோடு [Rationalist Association) நின்றால்போதாது. அரசியலில்நமது பிரதிநிதிகளை அனுப்பி இந்தக்கொடுமைகளை நீக்கும் நீதிமார்க்கங்களை கையாடல்வேண்டும். சட்டங்களால் தண்டிக்கப்படாமல், இம்மகாபாதக பழக்கங்கள், ஒழியவே வொழியா. பகுத்தறியும் சங்கத்தாருக்குபதிலாக நமது நாட்டில் உழைத்துவரும் சுயமரியாதை கூட்டத்தார், இதன் விஷயமாக அரசியலில் கிளர்ச்சி செய்ய வேண்டும். அரசியல் ஆதிக்கம் பெறாமல், எந்த சமூகத்தீமைகளையும் வேரறுக்கமுடியா, "சதி" (Suttee) எனும் கொடும் பழக்கத்தை ஒழித்தும், விதவாவிவாக நியாயமும், ஜாதி துறந்தாருக்கு ஆதரவும், கிடைக்கப்பெற்றது, அரசியல் ஆதிக்கம் இருந்தமையால் என அறிக. இவை இன்றேல், இன்றைக்கும், 100 வருஷம் பிறக்கும் வெறும்பிரசாரத்தால் மூடநம்பிக்கைகள் முடிவுபெறா எனவும் அறிக. இதற்கு திருஷ்டாந்தம் வேண்டுமானால், நமது இளவரசர் வரும்போது, ஒன்பது கரப்பு பூனைகளையும், ஒரு எட்டுகால பூச்சியையும், அதிர்ஷ்டம் உண்டாக பிரயாணத்தில் கொண்டுபோவது வழக்கமாம்! அரசர்களே, மூட பழக்கங்களுக்கு இடம் கொடுத்தால், சாமான்ய ஜனங்களாகிய நாம் எவ்வளவு? அதற்

குத்தான், இந்த மூட பழக்கவழக்கங்களை விட்டுவிட சட்டதிட்டங்கள் ஏற்படவேண்டும். ஆங்கிலேயர்கள் 13-வது எண்ணைக்கண்டு (Numbers 13) பயப்படுவதும் ஓர் அதிசயம். சிற்சில எண்கள், மகத்துவம் அடைந்து இருப்பதைப்பார்த்தால் ஆச்சரியமாகவே இருக்கின்றது. மும்மணி, மும்மூர்த்தி, மூன்று உலகம் கீழ், மேல், நடு என்று 3-க்கும், பஞ்சலோகம், பஞ்ச சீலம், பஞ்சமாபாதகம், என 5-க்கும், ஏழுகால், ஏழுமேகம், ஏழு ரிஷிகள், ஏழுவர்ணம், என 7-க்கும், ஒன்பது நவக்கிரகங்கள், ஒன்பதுவாரம் என 9-க்கும், பன்னிரண்டு மாணுக்கர்கள், [Twelve Disciples] பன்னிரண்டு நட்சத்திரங்கள், பன்னிரண்டு மாதம் என 12-க்கும், இவ்விதமாக சிற்சில கணிதங்களுக்கு [Numbers] பிரக்கியாதி கொடுத்துள்ளார். இதுவும் ஓர் சொல் பழக்கம். இந்த எணங்கள் சோதிடத்தில் அதிகமாக உபயோகிக்கப்படும். இவ்வெண்களைச் சொன்னால், அதன்மேல், சோதிடன் (Astrologer) அந்த கணக்கிற்கு ஒத்த நடவடிக்கைகளைச் சொல்கின்றான். இவையாவும் ஓர்வித பித்தலாட்டம் என அறிக. எண்களுக்கும், நமது நடவடிக்கைகளுக்கும் என்ன சம்பந்தம் எனக் கேட்கின்றேன்? நட்சத்திரங்களுக்கும், நமக்குமுள்ள சம்பந்தம் தினை அளவுகூட வொன்றுமில்லை என முன் அத்தியாயத்தில் விளங்க உறைத்தோம். 1, 2, 3, 4, 5, 6 .................என்று கோடி எண்களை உச்சரித்தாலும், இந்த எண்களுக்கும், நமது குணசேட்டைகளுக்கும் என்ன உறவு எனக் கேட்கின்றேன்? கோடி என்று சொல்வதில் கோடி ஒன்று இருக்கிறது. கோடி ஒன்றை சொல்லாமல் நமது சௌகரியத்திற்காக கோடி ஒன்றுக்களை, ஒருகோடி என்று வழங்குகின்றோம். அதேமாதிரி 2, 3, 4, 5, 6, 7, 8, 9, 10.........ல் இரண்டு ஒன்றும், மூன்று ஒன்றும்...... சொல்வதைவிட்டு 2, 3, 4, 5...... என்று சுருங்க உறைக்கின்றோம். இதுதான் கணக்கின் வரலாறு. பெருக்கலும், கூட்டலும், கழித்தலும் எத்தனை ஒன்றைக் கழித்தோம், எத்தனை ஒன்றைக்கூட்டினோம் என்றுஅடிக்கடி சொல்லாமல் $4+4=8$ என்கின்றோம். $4 \times 4=$பதினாறு என்கின்றோம். நம்முடைய அவசரத்திற்காக அங்க கணிதம், பீஜகணிதம் ஏற்பட்டன. நம்முடைய சௌகரியத்திற்கும், அவசரத்திற்கும் சுருங்க உறைத்தலுக்கும் (Our Convenience quickness and brevity) ஏற்படுத்திக்கொண்ட எணகளை மகத்துவப்படுத்துவதென்றால் இதைவிட பயித்தியக்காரத்தனம் உலகில் ஒன்றுமில்லை. சோதிடம் முழுமையும் எண்களைக்கொண்டே நிர்ணயிக்கின்றார்கள். இதை நமது "நாலடி" அதிகாரிகள் பித்தத்திலும் பித்தம் என்று வரைந்துளார்.

சோதிடம், மந்திர தந்திரங்கள், பில்லி, சூன்யாதிகள், பூசை நெய்வேத்தியம், பிரார்த்தனை, (Prayer) முதலிய பழக்கங்கள் தொழில் புரியாமல், எளிதில் பலனை அனுபவிக்க நேரிடும் சோம்பேரிகளுக்கு ஏற்பட்ட மோச வித்தைகளாகும்.

செல்வமும், சம்பத்தும், வெற்றியும் அடையவெண்டுமானல் கஷ்டப்பட்டு உழைக்கவேண்டும். இவ்வித உழைப்பின் செய்யமனமில்லாத சோம்பேரிகளுடைய கோரிக்கைகளுக்கு ஓர்வித பரிகாரம் கொடுக்க ஏற்பட்டவை. எல்லாமதங்களும், எல்லாமந்திரங்களும், எல்லா பிரார்த்தனைகளும் மனிதனுடைய மூட கோரிக்கைகளுக்கு ஆறுதலையுண்டாக்க ஏர்ப்பட்டவை. பிரகிருதத்தில் (Nature) எதையாகிலும் பெறவேண்டுமானல் கஷ்டப்படவேண்டும். மழைத்தண்ணீரைக் நட்ட உழுதுபயிரிட, துணிகளை நெய்ய, கப்பல் கட்ட, யாத்திரை செய்ய, கல்விகற்க, மற்றும்பல காரியங்கள் செய்ய மெய்வருந்த உழைத்தே தீரவேண்டும். மந்திரத்தால், தந்திரத்தால், சோஸ்யத்தால் எந்த பட்சியும், எந்த உயிரும் வாழ்வுக்கு வேண்டியவைகளை பெறுகிறதில்லை. பெறவும் முடியாது. உலகமுழுமையுமுள்ள ஜீவராசிகள்மேல் வருந்தி இரவம்பகலும் கஷ்டப்பட்டே ஜீவித்து வருகின்றன. மெஞ்ஞான பயன்கள் யாவும் (Scientific achievement) மெய்வருந்த கஷ்டப்பட்டமையால்தான் இன்று மனித குழாங்கள் அடையப்பெற்றுள்ளார். ரயில்வேக்களும், ஆகாய ரதங்களும், பேசும் யந்திரங்களும், மின்சாரவண்டிகளும், மின்சார விளக்குகளும் பல வருஷம் கஷ்டப்பட்டன்றோ, கண்டுபிடிக்கப்பட்டன. ஒரு எண்ணைச்சொல்லு, ஐந்துக்கு குறையச்சொல்லு, என்று கேட்டு ஓலைச்சீட்டைப்பார்த்து, உனக்கு ஆகாய ரதங்கள் கண்டு பிடிக்கச்சக்திவுண்டாகுமென்றலா ஆகாய ரதங்கள் வந்தன? 1871-ம் வருஷ முதல் நாளதுவரை கஷ்டப்பட்டுக்கொண்டு வருகிறபடியால் ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு அபாயத்தினின்று (Accidents) மீண்டு வருகின்றோம். எந்த சோதிடக்காரன் இந்த அபாயங்களை (accidents) தெரிந்து முன் எச்சரிக்கை செய்கின்றான்? பூகம்பத்தால் (Earthquaks) பூமி அதிர்ச்சியால் ஆயிரக்கணக்கான மக்கள் திடீரென மடிகின்றார்கள். இதன் ஆதாரங்களைக்கண்டுபிடித்து முன் எச்சரிக்கை செய்ய பல தேசங்களில் பூமி அதிர்ச்சி நூலோர் (‘cismologists) மெய் வருந்த உழைத்து வருகின்றார்கள், மழை, இடி, மின்னல், புயல், பனி எந்த காலத்தில் வருமென்று முன் அறிக்கையிட, கடந்த 50 வருஷமாக உலகந்தோரும் காற்று மழை ஞானவாதிகள (Metcoriologists) இரவும் பகலெனெ பாராமல் கஷ்டப்பட்டுக் கொண்டே வருகின்றார்கள். இவ்வளவு கஷ்டப்பட்டு வந்தும் பிரகிருதம் (Nature) அவர்களுக்கு இடம் தருவதாகக்காணேம். விடா முயற்சிகொண்டு உழைத்து வந்தால் அன்றோ, எந்த பயனும் பெறமுடியும்? இதை விட்டு விட்டு சோம்பித் திரியும் சில தனவந்தர்கள் "எனக்கு அந்த ஜோஸ்யன் சொன்னான், இந்த ஜோஸ்யன் சொன்னான்" என்று ஏழை மக்களை ஏமாற்றுவதைக் கண்டால் யாருக்குத்தான் மனம் பொருக்கும்?

நட்சத்திர சம்பந்தத்தால் உலக செல்வாக்கும், சம்பத்தும், செல்வமும், அறிவும், ஞானமும், பிரக்யாதியும், கிடைக்குமென்றால் எவ்வளவு பேருக்கோ கிடைத்திருக்குமே. செல்வமும் செல்வாக்கும், முதலில் பெற்றோருக்கு அவர்களுடைய திறமையால் அடையப்பெற்றார்களேயொழிய நட்சத்திர சம்பந்தத்தாலோ அல்லது மந்திரத்தாலோ அல்லது எண்ணங்களாலோ பெறவில்லை யென்பதுயாவருடைய அனுபவம்.

நம்முடைய நடத்தை நமது வழக்கவொழுக்கங்களாலும், நமது தாய் தந்தையர், சுற்றத்தார், உறவினர், சினேகர், அடுத்தவர்களுடைய கூட்டுறவால் சம்மந்தப்பட்டு இருக்கின்றனவேயொழிய கோடிமைலுக்கப்பால் மினுக்கு மினுக்கென பிரகாசிக்கும் நட்சத்திரங்களால் ஒன்றும் ஆவதில்லை. திருஷ்டாந்தம் வேண்டுமானல் மெழுகுவத்தி ஒன்றை அடுத்த அறையில் கொழுத்திவைத்து அதனல் நமது நடத்தையோ நடவடிக்கையோ பாதிக்கப்படுகிரதா என்று பாருங்கள்? இல்லையானல் அதே வெளிச்சத்தைத் தரும் நட்சத்திரங்களால் நமது நடத்தை பாதிக்கப்படுவது என்ன நிச்சயம்?

அதேமாதிரி அடுத்த வீட்டுக்காரன்கோழி இறைச்சியையும், தவளை இறைச்சியையும் தின்பது நமது வீட்டுப்பிள்ளைகளுடைய சுகத்தை எப்படி பாதிக்கும்? அதுபோலவே சுடுகாட்டு எலும்புகளும், மனிதனுடைய பெருவிரலும், குரங்கு நகங்களும், அடுத்த வீட்டுக்காரன் குழந்தையின் சுகத்தை எப்படி கெடுக்கும்? ஆதவின் சூனியத்தால் ஒருவனை கொல்வதாவது நோயில் விழச்செய்வதாவது குதிரைக்கு கொம்பு முளைத்தது என்று கேட்பதைப்போலொக்கும்.

முதல் பிள்ளையின் பெருவிரலாலும், ஒணான் பல்லி வால் துண்டுகளாலும், ஆமை ஓட்டாலும், தவளை தேரையாலும், ஒருவனை சாகவைக்கக்கூடுமானல், என் சண்டைக்கு சேனைகளேன்? அம்புவில்லேன்? குண்டு துப்பாக்கிகளேன்? இரண்டொரு செத்துப்போன ஒணான் எளிய குழந்தைகளின் பெருவிரலைக் கொண்டு சில மந்திரத்தைச்சொல்லி சேனைத்தலைவனை "எடுத்து" விடலாமே? மொழுக்குவத்தி வெளிச்சத்தால் நமது நல்ல நடவடிக்கையோ, அல்லது கெட்ட நடவடிக்கையோ சரிப்படுத்தப்பட்டால் (Regulated) ஏன் ஒவ்வொரு சிறுவன் சிறுமியை மொழுக்குவத்தியாலேயே திருந்தவைக்கலாமே! இது ஆபாசமான விஷயமென்றால் மொழுக்கு வத்திக்கு மிக கேவல வெளிச்சத்தைக்கொடுக்கும் ஒரு நட்சத்திரத்தால் நமது நடவடிக்கை ஆளப்படுமென்பதும் ஏன் ஆபாசவார்த்தை ஆகா? ஆதலின் பில்லி சூன்யாதிகளும், சோதிடமும், எண்களும், (Numbers) மந்திரதந்திரங்களும், சில மோசக்காரர் ஜீவனம் செய்து பிழைக்க ஏற்பட்ட சூழ்ச்சிகளேயொழிய அவ்வித்தைகளில் யாதாவொரு உண்மையொன்றுமில்லை பென அறிக.

## சென்னை மாகாண அகம்படியர் மகாஜன சங்கம்.

நிர்வாகக்கமிட்டியின் கூட்டம்:—

ஷை சங்கத்தின் நிர்வாகக்கமிட்டியின் கூட்டம் ஒன்று 7-8-32 மாலை மதுரை வடக்கு சித்திரை வீதியில் கோபால் மஹால் என்னும் பங்களாவில் பட்டுக்கோட்டை உயர்திரு. ஆ. பள. நா. வயி. நாடிமுத்து பிள்ளை அவர்கள் தலைமையின் கீழ் நடைபெற்றது. சில நிர்வாகஸ்தர்கள் விஜயம் செய்திருந்தனர். சில விஷயங்கள் முடிவு செய்யப்பட்டபின் கூட்டம் கலைந்தது. (ஒரு நிருபர்)

## திருப்பூர்
## டி. மு. கோர்ட்டு.

O. S. 1063 of 28
E. P. R. 775 of 32.

க. சுப்பிரமணிய செட்டியார் ---வாதி.

பல்லடம் தாலுக்கா திருப்பூருக்கடுத்த முத்துக்கவுண்டம் புதூரிலிருக்கும் நல்லாஞ்செட்டி மகன் ராமஞ்செட்டி—1 ஷை 1 ம் பிரதிவாதி மகன் திருமலைசாமி செட்டி 2 பிரதிவாதிகள்

ஷை 1. 2. பிரதிவாதிகளுக்கு நோட்டீசு.

வாதி பெற்றிருக்கும் அடமானடிக்ரியை நிறைவேற்றி உங்கள் சொத்துக்களை ஏலம்போட வேணுமாய் மனுசெய்து அதன் பேரில் இஸ்தியாரின் ஷரத்துக்களை நிர்ணயிக்க 2—9 —1932 வக்து வாய்தா ஏற்பட்டிருக்கிறது. மேற்படி தேதியில் நீங்கள் ஆஜராகத் தவறினல் ஒருகட்சி உத்திரவு ஏற்படும்.

T. R. சுந்திரம்பிள்ளை
வாதி வக்கீல்.

திருப்பூர்.
7— 8—1932.

# குடி அரசுப் பதிப்பக வெளியீடுகள்.

## கைவல்யம் அல்லது கலைக்கியானம்.

இது கைவல்ய சாமியாரவர்களால் எழுதப்பட்ட கட்டுரைகளைத் தொகுத்து வெளியிடப்பட்டது. இக்கட்டுரைகளைப் படிப்பதால் அனேக சாஸ்திர புராண, இதிகாசங்களையும் அவற்றில் உள்ள சாதிப்புரட்டு சமயப்புரட்டு, முதலியவைகளையும் உணர்ந்து நிகரற்ற பண்டித ராகலாம். இதன் விலை அணா. 0—8—0

## இராமாயண ஆராய்ச்சி.

இதில் இராமாயணத்தின் ஆபாசங்களை அறியலாம். கம்பஇராமாயணம், வால்மீக இராமாயணம் இரண்டிலும் உள்ள ஊழல்களையும், ஒன்றற்கொன்று உள்ள வேறுபாடுகளையும் ஆராய்ந்து அவற்றில் உள்ள தெய்வீகப் புரட்டுகளை வெளியாக்குவது.

இதன் விலை முதற்பாகம் பாலகாண்டம் அணா. 0—4—0
இரண்டாம் பாகம் அயோததியா காண்டம் அணா. 0—8—0

## ஞானசூரியன்.

இதில் வேதம், புராணம், ஸ்மிருதி முதலியவைகளின் ஆபாசங்களைக்காணலாம். மதங்களின் ஆபாசங்களையும், மதச் சடங்குகளின் ஆபாசங்களையும் அறியலாம். இதை ஒரு முறை படித்தால் ஆரியர்களின் புராதன நாகரீகத்தின் வண்டவாளம் முழுதும் தெரியும் பெரிய புத்தகம் 150 பக்கம். இதன் விலை அணா. 0—4—0

## மநுநீதி மருமம்.

இது மநு தரும சாஸ்திரத்தில் உள்ள அநீதிகளையும், பார்ப்பனர், பார்ப்பனரல்லாதாரை அடிமைப்படுத்துவதற்கு ஏற்படுத்தியுள்ள சூழ்ச்சிகளையும் விளக்குவது. இதன் விலை அணா. 0—2—0

## இராமலிங்க சுவாமிகள் பாடல் திரட்டு.

இது இராமலிங்க சுவாமியால் பாடிய அருட்பாவில், ஆறும் திருமுறையில் உள்ள பாடல்களிலிருந்து தொகுக்கப் பட்டது. இதில் உள்ள பாடல்களால், வேதம், புராணம், மதம் முதலியவைகளின் சூள்ச்சிகளையும், அவைகள் பொய் என்பதையும் உணரலாம்.

இதன் விலை அணா. 0—2—0

## சுயமரியாதைத் தாலாட்டு.

இதில் தீண்டாமைக் கொடுமை, சாதி சமயக் கொடுமை, ஏழை பணக்காரக் கொடுமை முதலியவற்றைக் கண்டித்துக் கூறப்பட்டிருக்கிறது. இனிய பாடல் எளிதில் பொருள் விளங்கும்.

இதன் விலை அணா. 0—2—0

## சோதிடப் புரட்டு.

இதில், சோதிடம் என்பது பொய் என்பதையும், பார்ப்பனர்களும், புரோகிதர்களும் ஜனசமூகத்தை ஏமாற்றுவது தான்சோதிடமென்பதையும் இனிமையான சுலபமான-பாடல்களால் விளக்கிக் கூறப்பட்டிருக்கிறது. இதன் விலை அணா. 0—2—0

## ஈ. வெ. இராமசாமியின் சீர்திருத்த மகாநாட்டுச் சொற்பொழிவு.

இதில் ஜன சமூகம், சீர்திருத்தம் பெற்றுச் சுகமாக வாழ வேண்டியதற்கான வழிகளைக் காணலாம். மக்கள் அடிமைப்பட்டுப் பகுத்தறிவின்றி வாழ்வதற்குக் காரணங்களை உணரலாம், ஈ. வெ. ராமசாமியின் சொற்பொழிவுகளில் இது தலை சிறந்ததாகும்.

இதன் விலை அணா. 0—2—0.

## சுயமரியாதைப்பாடல்.

இதில் சுயமரியாதைக் கொள்கைகளை விளக்கி, இனிமையான புதிய வர்ணமெட்டுகளில் பாடிய பாடல்கள் அடங்கியுள்ளன.

இதன் விலை அணா 0—2—0.

## தர்மபரீக்ஷை அல்லது புராண ஆபாசம்.

இது ஒரு பழைய நூல். இதில் புராணங்களின் பொருத்தமற்ற கதைகளையும், முன்னுக்குப்பின் முரணான கொள்கைகளையும் தெள்ளத்தெளிய உணரலாம். இரண்டு இளைஞர்கள் மாறுவேடம் பூண்டு பொதுஜனங்களுக்குப் புராணப் புரட்டுகளை வெளிப்படுத்தும் முறையில் எழுதப்பட்டிருக்கிறது.

இதன் விலை அணா 0—3—0

## பங்கஜம் அல்லது பார்ப்பனக்கொடுமை.

இது ஒருநாடகம், பார்ப்பனர்களின் புரட்டுக்களையும், ஜாதி வேற்றுமை, மதக்கொடுமை, சாஸ்திரக்கொடுமை முதலியவற்றையும் விளக்கிச் சமதர்மத்தைப் போதிப்பது. இதுவே தமிழில் உள்ள முதல் சுயமரியாதை நாடகம்.

இதன் விலை அணா 0—4—0

## மேயோகூற்று மெய்யா? பொய்யா?

இது அமெரிக்க நாட்டு மாதாகிய "கன்னிமேயோ" எழுதியதிலுள்ள உண்மைகளையும், அதில் சொல்லப்படாமல் இருக்கும்—நமது நாட்டிலுள்ள வேறு பல ஆபாசங்களையும் எடுத்துக் காட்டிச் சீர்திருத்த வேண்டுமென்னும் உணர்ச்சியை உண்டாக்குவது.

இதன் விலை அணா 0—3—0

## அகத்தியர் ஆராய்ச்சி.

இதில் முச்சங்கங்களின் புரட்டுக்களையும், அகத்தியர் சரத்திரப் புரட்டுக்களையும் தமிழ்நூல் ஆதாரங்களோடு விளக்கப்பட்டிருக்கிறது. சென்னை, பண்டிதர் கா. நமச்சிவாய முதலியாரால் எழுதப்பட்டது.

இதன் விலை அணா 0—2—0

## கடவுளை நிந்திக்கும் கயவர்கள் யார்?

இதில், கடவுளை நிந்திப்பவர்கள் சுயமரியாதைக்காரர்கள் அல்லவென்றும், புராணமரியாதைக்காரர்கள் தான் கடவுளை நிந்திக்கும் கயவர்களென்றும், இதிகாசப் புராணங்களின் ஆதாரங்களைக்கொண்டே விளக்கிக் காட்டப்பட்டிருக்கிறது. பண்டிதர் அ. ராகவன் அவர்களால் எழுதப்பட்டது.

இதன் விலை அணா 0 2—0

## கதர்-மூடநம்பிக்கை (இங்கிலீஷ்)

இதில், திரு. எஸ், ராமநாதன் அவர்கள் கதரைப்பற்றிச் செய்த உபந்யாசமும், அதற்குத் திருவாளர்கள், பட்டாபி சீத்தாராமையாவும், என். எஸ். வரதாச்சாரியும் எழுதிய மறுப்புரைகளும், அவைகளுக்கு எஸ். ராமநாதன் எழுதிய பதில்களும் ஆங்கிலத்தில் வெளியிடப்பட்டிருக்கின்றன. இதைப் படித்தால் கதர்ப் புரட்டை உணரலாம்.

இதன் விலை அணா 0—2—0

மானேஜர், குடி அரசு புத்தகாலயம், ஈரோடு.

## விற்பனைக்காக நம்மிடம் உள்ள இதர பதிப்புப் புஸ்தகங்கள்.

| | | |
|---|---|---|
| 1. | இயற்கைமதம் ... | 0—8—0 |
| 2. | சிதம்பர ரகசியம் ... | 0—8—0 |
| 3. | சுதந்தரப்போர் அல்லது உப்பள முற்றுகை | 0—4—0 |
| 4. | மாதர் சுதந்தரம் or பெண்மக்கள் பெருமை | 0—8—0 |
| 5. | ஆராய்ச்சி அணிகலம் ... | 0—12—0 |
| 6. | சென்னை லோக்கல் போர்டு ஆக்ட் ... | 2—0—0 |
| 7. | மோட்டார்க்கார் இயந்திர சாஸ்திரமும் அதன் அனுபோகப்பயிற்சியும் (50 படங்களுடன் 200 பக்கங்கள் அடங்கிய பெரிய புஸ்தகம் ஆர்டருடன் 4 அணா ஸ்டாம்பு அனுப்பவேண்டும்) ... | 2—0—0 |
| | சுயராஜ்யம் யாருக்கு ... | 0—1—0 |
| | சாமிகளின் அடிமைகள் ... | 0—12—0 |

குறிப்பு:—புஸ்தகங்களுக்கு ஸ்டாம்பு வைத்து அனுப்புகின்றவர்கள் புஸ்தக கிரயத்துக்கு மேலாக புஸ்தகம் ஒன்றுக்கு ஒன்றரை அணா ஸ்டாம்பு அனுப்பவேண்டும். 8 அணாவுக்குக் குறைந்த ஆர்டருக்கு வி. பி. அனுப்பப்படமாட்டாது. ஆர்டர்களுக்கு பாதித்தொகையாவது முன்பணம் அனுப்பவேண்டும்.

### 'குடி அரசு' 'ரிவோல்ட்' மாலைகள்.

குடி அரசு மாலைகள் கோர்வையாக முதல்வருஷத்திலிருந்து சென்ற வருஷம்வரை 6 வருஷகாலம் வெளியான மலர்களைத்தனித் தனி வருஷமாக பைண்ட் செய்து புஸ்தகமாக வைக்கப்பட்டிருக்கிறது.

| | |
|---|---|
| ஒவ்வொரு வருஷமாலை கிரயம் | ரூ. 4—0—0 |
| ரிவோல்ட்டு ஒருவருஷமாலை பைண்ட் செய்தது கிரயம் | ரூ. 4—0—0 |

**மானேஜர், குடி அரசு புத்தகாலயம்,**

ஈரோடு.

## "சாமிகளின் அடிமை"

"இந்திய மாதா" என்னும் நூலை இயற்றிய மிஸ். மேயோவால் எழுதப்பட்ட ஆங்கில நூலின் மொழிபெயர்ப்பு. இதில் ஹிந்துக்கள் என்போரின் கடவுள், மதம் என்பவற்றின்பேரால் அநுஷ்டித்துவரும் கொடிய, ஆசாரபழக் வழக்கங்களைக்கண்டுணரலாம், இனிய தமிழ், வேடிக்கை, ருசிகர கதைகள்.

அசல் விலை ரூ. 1—8—0.

இப்போதைய விலை ரூ. 0—12—0.

கிடைக்குமிடம்:—

குடி அரசு புத்தகசாலை, ஈரோடு.

## "குடி அரசு"

ஒவ்வொரு வருஷத்திய குடி அரசும் தனித்தனி வால்யம்களாக பைண்ட் செய்யப்பட்டு விற்பனைக்குத் தயாராயிருக்கின்றன. முதல் வருடம் முதல் ஆறும் வருஷம் வரையில் உள்ள ஆறுவால்யங்கள் இப்பொழுது கிடைக்கும். ஏழாம் வால்யம் பயின்டாகிக்கொண்டிருக்கிறது. வால்யம் ஒன்றுக்கு விலை ரூ. 4—0—0.

## "ரிவோல்ட்"

ரிவோல்ட் (ஆங்கிலப்பத்திரிகை) முதல்வால்யம் நேர்த்தியாகப் பயிண்டு செய்து விற்பனைக்குத்தயாராயிருக்கிறது. வால்யம் ஒன்றுக்கு விலை ரூ. 4—0—0.

மானேஜர்

"குடி அரசு"

ஈரோடு.




### உடனே பரீட்சை பார்க்கலாம்!

### தாது புஷ்டிக்கு அதிசயமான டானிக்.

## "செய்ரோடைன்"

இந்தியா கவர்ன்மெண்டில் ரிஜிஸ்தர் செய்தது.

ஆறுமுக முத்திரையுள்ள மருந்துகள் மூன்று லட்சம் புட்டிகள் விலையாகி விட்டன. உண்மையான நற்சாட்சிகள் ஏராளம். மெலிந்து வாடியிருக்கிற பெண்கள் "செய்ரோடைன்" சாப்பிட்டால் தேக புஷ்டியும், செழிப்பும் அழகும் உண்டாகும். டாக்டர்கள் இதை பரீட்சை பார்க்கலாம்.

"செய்ரோடைன்" டானிக் மருந்து இரத்தசுத்தி, இரத்த விருத்தி, சதை புஷ்டி, பலம், அழகுதரும். மலச்சிக்கல், உஷ்ணவாய்வு, குன்ம வயிற்று வலி, நீர்கடுப்பு, வெள்ளை, வாய்ப்புண், மூலச்சூடு, பெண்கள் சூதக வயிற்றுவலி, சூதக்கட்டுகளைக் குணப்படுத்தும். வாத நோய்கள், மேக நீர், துர்நீர்கள், க்ஷயம், இருமல், எலும்புருக்கி நோய், கைகால் அசதி, பலவீனங்கள் முதலிய நூற்றுக்கணக்கான நோய்கள் நீங்கித் தேகக்குளிர்ச்சியும்உண்டாகும். உடம்புக்குச் சுறு சுறுப்பும், களைப்பில்லாமல் வேலை செய்யக்கூடிய சக்தியும் இந்திரியக்கட்டும், அளவு மீறிய தாதுபுஷ்டியும் உண்டாகும். உடனே பரீட்சை பார்க்கலாம். பத்தியமில்லை கெடுதி செய்யாது. வியாதி இல்லாதவர்களும் தாது பலத்திற்காக இதைச்சாப்பிடலாம்.

பூரண சுகத்திற்கு ஒரு புட்டி மருந்து போதுமானது.

80 வேளை மருந்து புட்டி 1-க்கு விலை ரூ. 5. தபால் செலவு வேறு.

தந்தி விலாசம். "சித்தர்" மதுரை.

விலாசம்:— **ஆர். எஸ். பதி அன்கோ.,** (ரிஜிஸ்டர்)

215, மேலை மாசிவீதி, மதுரை.

உண்மை விளக்கம் பதிப்பகத்தில் அச்சிடப்பட்டு திருமதி நாகம்மாள் அவர்களால் வெளியிடப்பட்டது.